www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

தினமுரசு வாரமலர்

பக்கம் 20 ரூபா 11/00

டிச.24-30,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL W... 133

## அரசு புலிகள் இடம் பெயரும் யுத்தப் புயல்

பந்தயமும் பணயங்களும்

இனிய நெஞ்சங்களுக்கு இதயபூர்வ நத்தார் வாழ்த்துக்கள்!



அசாருதீன் வேண்டுமா? டெண்டுல்கர் பதில்!

தமிழுக்கு வரும் அழகு மின்சாரம்

இலக்கிய நயம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இங்கும் சிலுவைகள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

சிலுவை சுமந்த
தேவ குமாரனையும்
அவர் உயிர்த்தெழுந்ததையும்
நினைத்தும், நெகிழ்ந்தும், புகழ்ந்தும்
கொண்டாடும் வேளையிது.

ஆனால்- இப்போதும்
நம் நாட்டில் சிலுவைகள்
சுமக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒரு தேவகுமாரன் அல்ல,
இலட்சோப இலட்சம்
தேச மக்கள்
துயரச் சிலுவைகளை
சுமந்து கொண்டிருக்கிறார்கள்.

அகதி வாழ்க்கையும்
முள் முடி மாதிரித்தான்!
அன்றாட அவலங்கள்
மனிதாபிமானத்தில்
அறையப்படும ஆணிகள்தான்!

வெளிக்காயத்தால்
பாயும் குருதி
கண்களுக்குத் தெரியும்.

மனக் காயங்களால்
நெஞ்சுக்குள் கசியும் ரணம்
அவதிப்படுபவர்களுக்கு மட்டுமே
தெரியும்- புரியும்.

உலகின் பரப்பெங்கும்
நேர்ந்த சோகங்கள் யாவும்
ஒரு காலத்தில்
நமக்கெல்லாம் ஆச்சரியம்.

இன்று அதே சோகங்களை
வடக்கில் போய்ச் சொன்னால்
அவையெல்லாம சாதாரணம்.

உலகம் சுருங்கிவருகிறது
என்பது சரிதான்.
நேற்று சோமாலியாவில்
அதே காட்சி-
இன்று வடபுலத்தில்!

எங்கும்-எங்கும்
துயரச் சிலுவைகள்
மக்களின் மீது!

மனிதாபிமானமும்
மக்களுக்குள்ள ஜனநாயகமும்
உயிர்வாழ்வதற்கான உத்தரவாதமும்
உயிர்த்தெழும் நாள்
எந்நாள் வரும்?!

தேவகுமாரா.....! தேவகுமாரா.....!
ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தையும்
காட்டுங்கள் என்று
கருத்துச் சொன்னாய் தேவகுமாரா!

காட்டிக் கொண்டுதானே இருக்கிறோம்!
யுத்தம் தொடர்ந்தும்
அறைந்துகொண்டுதான் இருக்கிறது!

பொறுமையின் விளிம்பில்
நீயும் ஒரு தடவை
சாட்டை எடுத்ததாக
உன் சரித்திரம் சொல்கிறது.

நாங்களும் இங்கே
பொறுமையின் விளிம்பை
எப்போதோ தாண்டியாயிற்று.

எங்கே சாட்டை
என்று நீ கேட்கலாம்.
நம்மால் முடியாது.....
யுத்தமும்,
யுத்தம் புரிகிறவர்களும்
நம்மைவிட
வலியவர்களாக இருக்கிறார்கள்.
நாம் என்ன செய்வது?

சாட்டையை எடுத்தால்
ஒரு சப்தம் கூட எழுப்பமுடியாமல்
நாம் காணாமல்போய்விடுவோம்.

இப்படித்தானே
சிலுவை சுமக்கும் மக்கள்
தேவகுமாரனிடம்
முறையிடு செய்வார்கள்.....?

இங்கே-
போர் புரிவது அதிகாரத்திற்காக:
போர் நிறுத்தம் கேட்பது
அரசியலுக்காக
என்றாகிவிட்டதல்லவோ!

மனிதாபிமானம்
உயிர்த்தெழுவது எப்போது?
மக்களின் தோள்களிலிருந்து
சிலுவைகள்
இறக்கப்படுவது எப்போது?
தற்போதைக்கு
விடையில்லா வினா.....?

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## இயேசு மீண்டும் பிறப்பாரா?

அன்று-
பெத்லஹேமில்
மார்கழிப் பனி இரவில்
மானிடர் மாபாவம் கழிய
மாநேசர் அவதரித்தீர்...!

மருத்துவமனை இல்லை-குடிலில்
மாட்டுத் தொழுதான்...
தூளி இல்லை
துண்டுத் துணிதான்-
ஏழ்மையின் உருவாய் நீர்...!

ஆனாலும்
வானிலே அதிசயமாய்
ஒரு விடி வெள்ளி-நட்சத்திரம்...

உலகரட்சகர் பிறந்தாரென்று
எங்கும் துதிக்க மக்களிடையே
ஆனந்தம் பூத்துக் குலுங்க
அன்னை மடியில் பாலகன் நீர்...!

இன்று-
நீர் மானிட வடிவெடுத்த
மகிழ்ச்சியின் நாளை
மானிடர் நாங்கள்
கொண்டாடும் வேளை!

ஆநிரை தொழ அமைத்தோம்
நட்சத்திரத்தைத்
தோரணமாய்
தொங்க விட்டோம்
புத்தாடை புனைந்தோம்

உம்மைத் தேடிய வேளையில்
நீர் இல்லா
வெறுமை...வெறுமை!

இயேசு சுவாமி....!
மீண்டும்
எங்களில்
பிறக்க மாட்டீரோ?

உலகமெங்கும்
போர் மேகங்கள்-
துப்பாக்கிக் கலாசாரங்கள்-
ரத்தக் களறிகள்-
யாவும் நீங்கி
அன்பினால் நாங்கள்
ஆளுகை செய்ய-
சமாதானம் தழைக்க
இயேசு சுவாமி......
எங்களில்
மீண்டும்
பிறக்க மாட்டீரா?

-என். இந்திரா கிறிஸ்டி-

# ஆன்மீகம்



## மண்ணறையில் ஒரு பாவி

நான்காவது கலிபா அலி (ரலி) அவர்கள் ஆட்சி காலத்தில் ஒரு பாவியானவன் இறந்துவிட்டான். அவனை மண்ணறையில் அடக்கமும் செய்தாகிவிட்டது. இந்த செய்தி அவனது தாயாரின் காதில் எட்டியது. உடனே அலி (ரலி) அவர்களிடம் வந்து, "என் மகனின் முகத்தை நான் காணவேண்டும். மண்ணறையை தோண்டி என் மகனை காட்டுங்கள்" என்று கண்ணீர் சிந்தியவராக வினவியபோது அலி (ரலி) அவர்கள் மண்ணறையைத் தோண்ட மறுத்துவிட்டார்கள். இதனைக் கேட்ட தாயானவள், தாயுள்ளம் தாளாமல் மகன் முகத்தைப் பார்ப்பதற்கு ஆவல் கொண்டு பாசம் மீறி ஆவேசம் கொண்டவராக "என் மகன் முகத்தை நீங்கள் காட்டித் தராவிட்டால் நான் இந்த இடத்திலேயே என்னுயிரை மாய்த்துக் கொள்வேன்" என்று கூறிய வார்த்தையைக் கேட்டதும் உடனே அந்த மண்ணறைப் பக்கம் சென்று அலி (ரலி) அவர்களின் உத்தரவின்படி முகத்தளவு மட்டும் மண்ணறை தோண்டப்பட்டது. சுபுஹானல்லாஹ்! பாவியான அந்த மய்யித்தின் விழிகள் ஒளி பிரகாசித்தது. அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவனது தாயாரும் ஆனந்தத்தில் மூழ்கி மனம் பூரித்தார். அலி (ரலி) அவர்களும் சிந்தனையில் ஆழ்ந்தபோது அன்றிரவு நபி (ஸல்) அவர்கள் அலி (ரலி) அவர்களின் கனவில் வந்து "மரணித்தவன் ஒரு பாவிதான். ஆனால் தவறு செய்யும் போதெல்லாம் அவன் அடிக்கடி பாவமன்னிப்பு கேட்டுக் கொண்டே இருப்பான். அதனால் அல்லாஹ் இந்த உயர்ந்த பதவியை அளித்தான்" என்று கூறிச் சென்றார்கள்.

மக்கொன குப்ரா ஸாலிஹ்

## கவிதைப்போட்டி இல-130

### பரிசுக்குரிய கவிதை

### தொலைந்து போனவை

வெற்றிகளும்
தோல்விகளும்
வெறியெடுத்தாட
தொலைந்து
போனதெங்கள்
முகவரிகள் மட்டுமல்ல-
ஊர்களும் தான்.

ரோஜா ஆனந்தராஜா-ராகலை.

### விதவை!

பணம் இறைத்தாள்!
சோதிடரும்
பஞ்சாங்கம் பார்த்தார்!
இன சனமும் கூடிவர,
இல்லறத்தை ஏற்றாள்!
மணம் முடித்த மறுநாளே,
மன்னனவன் மாண்டான்!
பிணம்குவியும் பூமியிலிப்-
பேதையிவள் விதவை!

அ. கௌரிதாசன், ஆலங்கேணி கிழக்கு-கிண்ணியா.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### யார் தருவார்

பவுனுக்குப் பணம்
தருவார் இங்கே
கண்ணீருக்கு விலை
யார் தருவாரோ?

செல்வி. ஜன்ஸி கபூர், அநுராதபுரம்.

### நாதியில்லை.

ஒம்மகனும் எம்மகளும் போரில் சாக - ஏ ராசா...
எம்புருஷன் ஒம்புருஷன் ஊரில் சாக - ஏ...ராசா...
'செல்லடித்து' சேர்ந்து செத்தா - ஏ...ராசா...
நம்மளுக்கு நாதியில்ல கொள்ளி வைக்க!.

பெ. அழகர்சாமி, மட்டக்களப்பு.

### கண்ணீர்

பரிசுதந்த
சூரியனுக்கு
பொங்கலிடுங்கள்
அவன் கதிரால்தானே
"நன்மை" (?) பெற்றீர்?

சுபாவரன், கண்டி.

### எடுப்பார் கைப்பொம்மைகள்

போராட்ட மைதானத்தில்
புகுந்து விட்ட காற்பந்துகள்
யாரும் உதைத்து விளையாடலாம்
எவரும் இல்லை கேட்பதற்கு.

ச. மகாலிங்கம், வெலிமடை குரூப்-வெலிமடை.



### ஆறுதல்

யாருக்கு
யாரிங்கே
ஆறுதல்
சொல்வது?
போருக்கு
வேருடன்
மருத்துவம்
செய்யாதவரை(யில்)

இராமச்சந்திரன் வசந்தகுமாரி, பாவற்குளம்-வவுனியா.

### எதிர்பார்ப்பு!!

பார்பதியோ நீ அகதி!
பாத்தும்மா நானும் அகதி!!
ஒப்பாரி வைத்தழுதால்
ஓய்ந்திடுமா நம்மவலம்?
சொத்துச் சுகம் யாவும்
செத்தொழிந்து போனபின்னும்
இன்னுமா நேரம் வேண்டும்
இனப் பகைக்கு முடிவுகட்ட-??

காரைதீவூர் சிவம், குருக்கள்மடம்.

### நிலையற்ற சொந்தங்கள்

சொந்தமும் நிலையல்ல
சுகங்களும் நிலையல்ல
விந்தைமிகு போர் உலகில்
வீண் பெருமை பேசுவோரும்
வந்திடுவர் கீழிறங்கி
வறியோர்க்குச் சமமாக!
என்பதைக் கேள் மகளே!
இனி நாங்கள் அகதிகளே!

திருமதி க. கமலாம்பிகை, வவுனியா.

### எப்போதோ...!

யாழ் மண் கிடைத்திடலாம்
படை கைக்கு!
சமாதானம் கிடைத்திடலாம்
தாய் நாட்டுக்கு!
என் செல்வம் கிடைப்பது
எப்போதோ என் மடிக்கு!

எம். ஸன்பர், கிண்ணியா.

### பந்து

குண்டென்று
தெரிந்திருந்தால்
பந்தொன்றை
பாலகனின்
கரத்தினிலே
கொடுத்திருக்க
மாட்டேனே!

செல்வி.பாகிமா ரகுமான், தம்பலகாமம்.

### அழுவதை நிறுத்து!

தூது விட்ட மேகங்கள்
பாதியில் மறைந்தனவா?
பெற்றெடுத்த செல்வங்கள்
பாதையில் மடிந்தனவா?
அஸ்தமனம் நாளைய உதயமே
அழுவதை நிறுத்து அஞ்சுகமே!

தெ. ரஞ்ஜனா, இறம்பைக்குளம்-வவுனியா.

### கூடிழந்த புறா

கூடாத போர் வந்து
குருதிப் புனல் பாய்ந்ததனால்
கூடிழந்த புறா ஒன்று
குடல் அறுந்து கத்துதம்மா


சதா கணபதி-உடபுஸ்ஸல்லாவ.

### சோகம் தந்த சொந்தம்.

துப்பாக்கித் தோட்டாக்கள்
தொலைத்து விட்ட உடன்பிறப்பை-
சொல்லியழ வந்தவளும்
யுத்தம் தந்த சொத்தாகி
நித்தம் அழும் மங்கையானாள்.

எஸ்.கே. ராஜரத்தினம், ஹாலி-எல.

## கவிதைப் போட்டி இல-133



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.12.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 133
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

## வாசகர் சாலை



தணிக்கைக்கு மத்தியிலும் தமது பணியை தம் பாணியில் தொடர்ந்து கொண்டிருக்கும் நாரதரும் இராஜதந்திரியும் பாராட்டத்தக்கவர்கள்.

பி.எம் முஹம்மது அனீஸ், முஹம்மது பஹ்மி, டாம் வீதி, கொழும்பு-12.

••

மனித வெடிகுண்டு கார்லோஸின் தொடர் பெயரைப் போலவே காரமாய் உள்ளது. அதிரடி அய்யாத்துரையை மிஞ்சும் அளவுக்கு எக்ஸ்ரே ரிப்போர்ட்டை முதல் தர வகுப்புக்கு ஏற்றிச் செல்கிறார் நாரதர்.

திருமதி. ரினோஸா பைஸல், பேருவலை.

••

மணிமுரசே நடு நிலமை தவறாத உன் அரசியல் ஆய்வும், இதயங்களின் அபிமானத்தை வென்றுவரும் பட்டுக்கோட்டை பிரபாகரின் விலையுயர்ந்த குற்றமும் வாசகர்களுக்கு தெவிட்டாத விருந்து

நஸீப் அன்பு பர்ஸானா, கிண்ணியா.

••

தணிக்கை மத்தியிலும் உண்மையினை மக்களுக்கு உள்ளபடி தரும் முரசுக்கு நன்றி.

இரா. மாலா, கேகித்த வத்தளை.

••

தவறுகளை திருத்திக் கொள்வதில் முரசு காட்டும் முன்மாதிரியைப் பாராட்டியேயாக வேண்டும். வாசகர்களின் நம்பிக்கைக்கு முரசு காட்டும் விசுவாசம் அது.

ஏ.சிறீகாந்தராஜா, ஜா-எல.

••

நாரதரும்-இராஜதந்திரியாரும் தமது பாணியில் தரும் விமர்சனங்கள் துல்லியம். இராஜதந்திரியார் சில சமயங்களில் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகிறாரே!

எஸ். சுப்பிரமணியம், ஹட்டன்.

••

"கற்கண்டு தேன்பாகாய்" கருத்தினைக் கொட்டும் தினமுரசே! அனுதினமும் உன்னை அணைத்திடத் துடிக்கிறேன்.

நிஷானா அக்பர், மாத்தளை.

••

இனியமுரசே
டிச03-09-1995 இதழில் நாரதரின் எக்ஸ்ரே ரிப்போட் அற்புதம்-அசத்திவிட்டார். அரசியல் தொடரில் நாமறியா விடங்கள் பல தந்து அசத்தி செல்கின்றது. அப்துல் ரகுமானின் காதல் முகவரியும் அழகு சேர்த்தது உனக்கு. இராஜகுமாரனின் "இராமாயணம்" அழகுத் தமிழில் அறியத்தருவதும் உனது சிறப்பு. உன்பணி என்றும் தொடர என் இனிய வாழ்த்துக்கள்.

அருமைத்துரை-பரமேஸ்வரன், புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பு 13.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

எம்.ஐ.எஃப். பஸீலா, தக்கியாவீதி - கொச்சிக்கடை.
கிட்ணன் புஸ்பராஜ், இறக்குவானை.
எஸ். நிர்மலா, ஸ்ரீவிக்கிரமபுர.
வி. மணிமேகலை, மூதூர்.
பஷ்மி - பாரிஸ், குருகோடை-அக்குறணை.
டி. கௌரி, சங்குத்திட்டாணை-சிலாபம்.
இரா. நாகராஜா, நானு ஓயா.
செல்வி-முருகையா சித்ரா, அவிசாவளை.
சல்மியா பஸீல், கிண்ணியா.
ஏ.எம். இப்திசார், புத்தளம்.
ஏ.ஆர்.எம். வரீப், தோப்பூர்-04
எம்.எம்.முகமது ஸாகீர், சாய்ந்தமருது-10
ஜுவானி நஸ்புல்லா, இப்பாகமுவ.
சு. சத்தியசீலன் கொட்டகலை.
நுஸ்ரத் ஜஹான் ஹனீபா, மாத்தளை.
பெ.ந. சுகுமார், சின்னப்புல்லுக்குளம்-வவுனியா.
எம். அஷ்ரப், பிரதானவீதி-ஏறாவூர்.
ஏ.எல்.அமீன் ஹுசைன், கல்முனை-03
எஸ். கணேசமூர்த்தி, மட்டக்களப்பு.
தில்ஷா-ஏ.வாஹிட், பொலன்னறுவ.
எம்.பி. உமா, குயின்ஸ்லேண்ட்.
யூர்பாதிமா நிஹானா, உலப்பனை எஸ்டேட்.
ஆர். அரவிந்தன், தெல்தொட்டை.
மர்லியா முஹாஜிரீன், மீவலதெனிய, ஹன்தெல்ல.
எம்.எஸ். அயிசா, நுகவெல.
ஏ.ஆர்.எம். ஜிப்ரி பிரிஷை, திஹாரிய.
ரி. பாலகிருஷ்ணன், அப்புத்தளை.
கே. கலைச்செல்வன், தெமோதர.
ஏ.எச். ராஸின்மொகமட், ஏத்தாலை.
க. யோகநாதன், சிவபாலன், தெஹியோவிட்ட.
கே. சுரஞ்சித், மொன்றியல் - கனடா.
எஸ். எஸ். உஸ்மான், சவுதி அரேபியா.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்ப்பாணத்தில் போர் ஓயாது!

# இடம் பெயர்ந்த மக்களிடம் புலிகள் தெரிவிப்பு!!

## இரண்டாம் கட்ட நடவடிக்கைக்கு அரசு தயார்

**யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லும் எண்ணம் ஏற்பட்டுவருகிறது. அதனையடுத்து புலிகள் அமைப்பினரின் அரசியல் பிரிவால் நீண்ட அறிக்கை ஒன்று அவசரமாக வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பாரிய போர்க்களமாக மாறுவது உறுதி எனவே பொதுமக்கள் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது**

### கல்வீச்சு

யாழ் நகரை படையினர் கைப்பற்றிய பின்னர் அங்கு பாரிய மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. அதனால் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பிச் செல்ல இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் விரும்பியுள்ளனர்.

இதேவேளை வவுனியா வருவதற்கு அனுமதி கேட்டும் புலிகளது பாஸ் வழங்கும் அலுவலகங்கள் முன்பாக தினமும் பெரும் திரளான மக்கள் திரண்டு நிற்கின்றனர்.

வயதுக் கட்டுப்பாடு உள்ளவர்களுக்கு வவுனியா செல்லும் அனுமதி வழங்கப் படவில்லை அதனையடுத்து கடந்தவாரம் சாவகச்சேரியிலும், கொடிகாமத்திலும் உள்ள புலிகளின் பாஸ் வழங்கும் அலுவலகங்களில் பிரச்சனை ஏற்பட்டது.

புலிகளின் பாஸ் வழங்கும் அலுவல கத்தை சேர்ந்தோருக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் பெரும் பிரச்சனையாக முடிந்தது.

கொடிகாமத்தில் புலிகளது பாஸ் வழங்கும் அலுவலகக் கூரையில் கற்கள் வந்து விழுந்தன. புலிகளது காவல் துறையினர் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தினார்கள்.

இவ்வாறான பிரச்சனைகளையும், சலசலப்புக்களையும் அடுத்து 15.12.95 அன்று 'புலிகளின் குரல்' வானொலியில் ஒரு நீண்ட அறிக்கை ஒலிபரப்பப்பட்டது. விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவால் அந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

### சவால்கள்

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: "தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்ட வரலாறு என்று மில்லாதவாறு இன்று புதிய நெருக்கடிகளையும், சவால்களையும் முகம் கண்டு நிற்கிறது.

சிறீலங்கா அரசாங்கம் கொழும்பில் வெற்றிவிழாக்களை நடத்திவருகிறது. ஆனால் தமது இராணுவ நடவடிக்கையின் அரசியல் குறிக்கோள் நிறைவேறவில்லை என்பது ஆட்சியாளர்களுக்கு தெரியாத ஒன்றல்ல.

தனது இரண்டாம் கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது. யாழ்ப்பாண மண்ணில் மக்களை குடியமர்த்தி அரசின் நிர்வாகத்தை நிறுவுவதே 2ம் கட்ட நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும்.

யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வருமாறு அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது. இந்தப் பிரசாரங்களில் மயங்குவோர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல விருப்பம் கொள்ளலாம்.

இது தொடர்பாக எமது இயக்க நிலைப் பாட்டை தெட்டத் தெளிவாக எடுத்துரைக்க விரும்புகிறோம்.

அரசின் ஆயுதப்படைகள் யாழ்ப்பாண நகரிலும், வலிகாமத்திலும் நிலைகொண்டு நிற்கும்வரை எம் மக்கள் அப் பகுதிகளுக்கு திரும்பிச் செல்வது அவர்களது பாதுகாப்புக்கும், சுதந்திரத்திற்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என்றே நாம் கருதுகிறோம்.

யாழ்ப்பாணம் இனி அமைதிப் பிரதேசமாக இருக்கப் போவதில்லை. அங்கு போர் ஓயப் போவதில்லை. காலகதியில் யாழ்ப் பாணம் தீவிர போர்க்களமாக மாறும். புலிகள் இயக்கம் உக்கிரமான தாக்குதல்களை மேற்கொள்ளும்.

### முடிவு செய்யுங்கள்

இடம் பெயர்ந்த மக்கள் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தாக வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச் சென்று வாழ்வதா? அல்லது துன்பச் சுமையை சுமந்து கொண்டு கௌரவமானவர்களாக வாழ்வதா? என்று ஒரு தீர்க்கமான முடிவை மேற்கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட வாழ்க்கை நலன்கள், சுகபோகங்களுக்கு அப்பால் எமது மக்கள் சரியான முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்." இவ்வாறு புலிகளின் அரசியல் பிரிவினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய உறுப்பினர் திரட்டும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் ஐந்துபேர் தம்மோடு வந்து இணைந்து கொண்டதாக கடந்த வாரம் 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

முல்லைத்தீவில் உள்ள குமிழமுனை என்னும் பகுதியைச் சேர்ந்த இயக்க உறுப்பினர்கள் சிலர் தமது வீடுகளுக்குச் சென்றபின்னர் திரும்பி வரவில்லை. அவர்களை அழைத்துச் செல்வதற்காக புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் சென்ற போது ஊர் மக்களால் தடுக்கப்பட்டனர். "அவர்களாக விரும்பி வந்தால் மட்டும் கூட்டிச் செல்லுங்கள். கட்டாயப்படுத்த வேண்டாம்" என்று ஊர்மக்களால் கூறப் பட்டது. அதனையடுத்து புலிகள் அமைப்பினர் திரும்பிச் சென்றுவிட்டனர்.

### ஷெல்வீச்சு

கடந்த 16ம் திகதி வடமராட்சி தென்மராட்சி பகுதிகளில் சரமாரியாக ஷெல்கள் விழுந்து வெடித்தன. யாரும் காயமடைந்தனரா என்பது தொடர்பான விபரங்கள் கிடைக்கவில்லை.

யாழ்-குடாநாட்டை பூரணகட்டுப்பாட்டில் கொண்டுவரும் வகையிலான அடுத்த கட்ட நடவடிக்கைக்கு படைகள் தயாராகிவருவதாகவே தெரிகிறது.

## அடுத்த வருடத்தில் குட்டித் தேர்தல்!

பொதுத் தேர்தல் விரைவில் வரப் போவதாக கூறப்பட்ட ஆருடங்களில் உண்மையில்லை என்று உறுதியாகிவிட்டது.

உடனடியாக பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்லும் யோசனை அரச தரப்புக்கு இல்லையென்று நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

அடுத்தவருட மத்திக்கு முன்பாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தி முடிக்க அரசு உத்தேசித்துள்ளதாக அறியமுடிகிறது.

யுத்த முனையில் பெற்றுள்ள வெற்றிகளின் பின்னர் மக்களிடம் தமக்குள்ள ஆதரவை பொதுஜன முன்னணி அரசு நாடிபிடித்தறியும் களமாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படலாம் என்று கருத இடமுண்டு.

கடந்த பொதுத் தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பலவற்றை தம்மால் நிறைவேற்றி முடிக்கப்படவில்லை. இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக மக்களை சந்திப்பது எப்படி என்று பொதுஜன முன்னணியில் ஒரு சாரார் தயக்கம் காட்டுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகி வருகிறது.

அரசு யாழ்ப்பாணத்தில் பெற்றுள்ள இராணுவ வெற்றி தொடர்பாக எவ்வாறான பிரசாரத்தை மேற்கொள்வது என்பதுதான் ஐ.தே.கட்சிக்குள்ள முக்கிய பிரச்சனை.

## படகுகளில் சென்றோர் தடுக்கப்பட்டனர்

கிளிநொச்சிப் பகுதியில் தங்கியிருந்த யாழ்ப் பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் மூன்று படகுகளில் குருநகர் நோக்கி சென்றுகொண்டிருக்கையில் கடற்புலிகளால் தடுக்கப்பட்டனர்.

மூன்று படகுகளில் 60 பேர்வரையானோர் அவ்வாறு செல்ல முற்பட்டனர். கடற்புலிகளால் தடுக்கப்பட்டு மீண்டும் அவர்கள் அனைவரும் கிளிநொச்சி பகுதிக்கு கொண்டு வரப்பட்டனர்.

குருநகரில் இருந்து தமது மீன்பிடிப் படகுகள் மூலமாக கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினரே அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மீண்டும் அதே படகுகளில் திரும்பிச் செல்ல முற்பட்டபோதே மாட்டிக் கொண்டனர்.

இதன்பின்னர் சகல மீன்பிடிப் படகுகளும் புலிகள் அமைப்பினரின் பொறுப்பில் எடுக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

## இடைநடுவில் இறக்கப்படும் பயணிகள்

### மோதலில் ஈடுபடுவோர் பயணிகள் வாகனங்களில்!

கிழக்கு மாகாணத்தில் மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்புக்களும் பயணிகளுடன் சேர்ந்து செல்லுதலும் பயணிகளின் வாகனங்களைப் பறித்துச் செல்லுதலும் பொதுமக்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை தோற்றுவித்துள்ளன.

சமீபத்தில் கல்முனையில் இருந்து வந்த பேரூந்தில் பயணிகளோடு அதிரடிப்படையினர் நால்வர் பயணம் செய்தமையும், கிரான்குளத்தில்வைத்து அவர்களை நோக்கி புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது பயணிகளும் பலியானதும் தெரிந்ததே.

இச் சம்பவத்தின் பின்னர் பேரூந்துகளில் பயணம் செய்யவே மக்கள் அஞ்சுகின்றனர்.

இதேவேளை கிரான்குளத்தில் பேரூந்து மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலியானவர்கள் தொடர்பான மரண விசாரணை மட்டக்களப்பு மாவட்ட [illegible]தில் [illegible]ந்தவான் கே.தங்கவடிவேல் முன்னிலையில் இடம் பெற்றதாக சென்றவாரம் முரசில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது தவறானதாகும்.

கணபதிப்பிள்ளை மோகனா என்னும் மாணவி பொலிஸ் நிலையத்தில் அளித்த வாக்குமூலத்திலேயே நடந்த சம்பவம் தொடர்பாக விபரித்திருந்தார்.

பயணிகள் செல்லும் வாகனங்களில் இரு தரப்பினரும் தொற்றிக் கொள்வதால் தாக்குதல் சம்பவங்களில் பொதுமக்கள் காயமடையவும், பலியாகவேண்டியும் ஏற்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் பயணிகளை காட்டுப்பிரதேசங்களில் இறக்கிவிட்டு வாகனங்களை தமது தேவைக்காக கொண்டு செல்லும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

தாக்குதலில் ஈடுபடும் தரப்பினர் பொது மக்களைக் கவனத்தில் கொள்ளாது தமது குறியில் மாத்திரம் கண்ணாயிருப்பதை நடந்த பல சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

## வாகரையைத் தளமாக்கும் முயற்சி!

கிழக்கில் படையினர் விலகிய சில பகுதிகளில் வாகரையும் ஒன்றாகும். திருக்கோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் உள்ள புலிகளின் தொடர்புவழியாகிய வாகரைப் பகுதியைத் தளமாக்கும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரியளவிலான தொலைத் தொடர்புக் கோபுரம் மற்றும் பாதுகாப்பு நிலைகளைப் புலிகள் அங்கு அமைத்துள்ளனர். அத்துடன் அப்பகுதிக்குப் பல இ.போ.ச. பஸ்கள், பிக் அப் வாகனங்கள், உழவு.இயந்திரங்கள், மற்றும் மாட்டு வண்டில்கள் என்பவை கொண்டு சேர்க்கப்படுகின்றன. வடக்கிலிருந்து கிழக்கில் நடவடிக்கை மேற் கொள்வதற்காக அனுப்பப்படும் புலிகளை ஏற்றியிறக்கும் பணிக்காக இவ்வாகனங்கள் பயன்படுத்தப்படலாமென்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

சமீபத்தில் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு முகாம் தாக்குதலில் தாம் வெற்றியடைந்திருப்பதாகக் கூறி வாகரையிலும், பதுளை வீதியிலும் பொது மக்களின் முன்னிலையில் வெற்றி கொண்டாடப் பட்டது. அத்தாக்குதலில் பலியான ஒரு கரும்புலி ரஞ்சன் (வாகரை மாங்கேணி) உட்பட மேலும் 23 புலிகளின் படங்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

புதுக்குடியிருப்பு அனர்த்தத்தில் மட்டு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 20ற்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் கொல்லப் பட்டார்கள். கொல்லப்பட்ட 20 பேரின் விவரங்களே மட்டக்களப்பு செயலக அதிகாரிகளிடமுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் பிரதேச செயலாளர்கள் பாவித்து வரும் பிக்அப் வாகனங்களை நகரில் உள்ள மாவட்ட செயலக வளாகத்தில் நிறுத்துமாறு அரசாங்க அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பட்டிப்பளை, ஏறாவூர் பற்று பிரதேச செயலகங்களுக்குரிய வாகனங்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களின் நிமித்தம் உத்தரவு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தினமும் 45 லொறிகளில் உணவு

யாழ்-குடாநாட்டின் மொத்த சனத் தொகை எட்டு இலட்சத்து 10 ஆயிரம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியோர் உட்பட யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் 5 1/2 இலட்சம் மக்கள் இருக்கின்றனர்

யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறியுள்ளோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர். குடும்ப எண்ணிக்கை 59 ஆயிரத்து 800.

இவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் 34 ஆயிரத்து 819 குடும்பத்தினர் தங்கியுள்ளனர். 1 இலட்சத்து 37 ஆயிரத்து 981 பேர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 14 ஆயிரத்து 448 குடும்பங்கள் சென்றுள்ளன. மொத்தம் 61 ஆயிரத்து 567 பேர்.

மன்னாருக்கு 4 ஆயிரத்து 472 குடும்பங்கள் சென்றுள்ளன. 14 ஆயிரத்து 743 பேர்.

வவுனியாவில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் 6 ஆயிரத்தி 15 ஆயிரம் குடும்பங்கள் சென்றுள்ளன. 21 ஆயிரத்து 659 பேர்.

வவுனியாவில் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு 992 குடும்பங்கள் வந்துள்ளன. 3 ஆயிரத்து 358 பேர்.

தற்போது வவுனியாவில் இருந்து வடபகுதிக்கு தினமும் 45 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

இத்தகவல்களை வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## நாவற்குழியில் புலிகளின் காவல்துறை

### வீட்டில் நடந்த வினோதமான கொள்ளை

தென்மராட்சியில் நாவற்குழிப் பாதையூடாக இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணப் பகுதிக்குள் திரும்பிச் செல்லக் கூடும் என்று கருதி, நாவற்குழிக்கு சமீபமாகவுள்ள பகுதியில் இருந்து மக்களை வெளியேறுமாறு புலிகள் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தனர்.

அதனையடுத்து நாவற்குழியில் இருந்து சாவகச்சேரி நுணாவில் வைரவர் கோவில் வரையுள்ள பகுதியில் இருந்து மக்கள் வெளியேறியுள்ளனர். சன நடமாட்டம் தடை செய்யப்பட்ட பகுதியாக அதனைப் புலிகள் மாற்றியுள்ளனர். புலிகளது காவல் துறையினரும் தற்போது கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

படையினர் யாழ் நகரைக் கைப்பற்றுவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்று தமது வீடுகளை பார்த்துவர குடும்பத்தில் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறு சென்றவர்களில் சிலர் திரும்பி வராமல் இருந்துவிட்டனர்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள வீடுகளில் அநேகமானவை கொள்ளையிடப் பட்டுள்ளன.

புலிகளின் காவல் துறை முன்பாகவே ஒரு சுவாரசியமான கொள்ளை நடைபெற்றது.

தமது வீட்டுக்குச் சென்று சில பொருட்களை எடுத்து வரவிரும்புவதாக ஒருவர் தெரிவித்தார். அவரை புலிகளது காவல் துறையினர் அழைத்துச் சென்றனர்.

வீட்டுக்கு அருகில் சென்றவுடன் சாவி தவறிவிட்டதாகவும், ஓட்டை பிரித்து இறங்கியே பொருட்களை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். அவரது வீடுதானே எப்படியாவது எடுத்துக் கொள்ளட்டும் என்று காவல்துறையினர் அனுமதியளித்தனர்.

அவரும் பொருட்களை எடுத்துக் கொண்டு காவல்துறையினருக்கு நன்றி தெரிவித்துவிட்டு சென்றுவிட்டார்.

சில மணிநேரங்களின் பின்னர் இன்னொருவர் வந்து அதே வீட்டில் பொருட்களை எடுக்க அனுமதி கேட்டார். "அதுதான் உரிமையாளர் வந்து எடுத்துச் சென்றுவிட்டாரே, நீங்கள் யார்?" என்று கேட்டனர் காவல் துறையினர்.

வந்தவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "நான்தான் வீட்டு உரிமையாளர்." என்று சத்தம் போடத் தொடங்கிவிட்டார். காவல்துறையினருக்கு அதிர்ச்சி. பின்னர் விசாரித்துப் பார்த்ததில் இரண்டாவதாக வந்தவர்தான் வீட்டு உரிமையாளர் என்பது உறுதியாகியது. முதலில் வந்தது துணிச்சலான புத்திசாலித் திருடன். யாழ் நகரை படையினர் கைப்பற்ற முன்னர் நடந்த சம்பவம் அது.

## இந்திய அரசின் ஆதரவு தேவை

### அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

### "வேறு விலங்குகளோடு புலி சேருமா?"

இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் இருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் 'அவுட் லுக்' அதன் நிருபர் ஏ.எஸ். பன்னீர் செல்வம் கடந்த ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணம் சென்று புலிகளின் அரசியல் அலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை பேட்டி கண்டார். அப்போது இடிமின்னல் நடவடிக்கை நடைபெற்று முடிந்திருந்தது.

படையினர் பெரியளவில் உள்ளே வந்தால் நாங்கள் வெளியேறவேண்டியிருக்கும் என்று அன்ரன் பாலசிங்கம் அவரிடம் தெரிவித்திருந்தார்.

ஏனைய தமிழ் கட்சிகளுடன் உங்கள் நிலைப்பாடு மாறுமா? என்று கேட்கப்பட்ட போது, "காட்டில் பாருங்கள், புலி தனியாகத்தானே இருக்கிறது. வேறு எந்த விலங்குகளோடும் புலி சேர்ந்திருப்பதை கண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டார் அன்ரன் பாலசிங்கம்.

மேலும் அன்ரன் பாலசிங்கத்திடம் கேட்கப்பட்ட கேள்விகளில் சிலவும், அவற்றுக்கு அவர் சொன்ன பதில்களும் பின்வருமாறு:

**கேள்வி:-** ராஜீவ் காந்தியை ஏன் கொன்றீர்கள்?

**பதில்:-** நாங்கள் கொல்லவில்லை. ராஜீவ் கொலையில் எங்களுக்கு தொடர்பிருக்கிறது என்பதை இந்திய அரசு இன்னமும் நிரூபிக்கவில்லை. பிரபாகரனை நாடு கடத்துவது இயலாத ஒன்று. ஏனென்றால் இலங்கை அரசால் பிரபாகரனைப் பிடிக்க முடியாது. பிரபாவை நாடு கடத்தும் கோரிக்கையை முன்வைத்தமை புலிகள் அமைப்புக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான்.

**கேள்வி:-** இந்திய புலனாய்வு அமைப்புகளுக்கு கிடைத்துள்ள தகவல்படி பிரதமர் நரசிம்மராவ் உட்பட, பல தலைவர்களை கொலை செய்ய நீங்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறதே?

**பதில்:-** அது உண்மையல்ல. வேண்டுமென்றே சிலர் கிளப்பிவிட்டுள்ள புரளி.

**கேள்வி:-** இந்தியாவில் உங்கள் செயல்பாடு என்ன?

**பதில்:-** இந்தியாவை நாங்கள் நண்பனாகவே கருதுகிறோம். இந்திய அரசு மீதோ, மக்கள் மீதோ எங்களுக்கு முன் விரோதம் கிடையாது. இந்தியாவில் உள்ள தீவிரவாத அமைப்புக்களுடன் எமக்கு தொடர்பில்லை. எங்கள் போரை இந்திய அரசு சரியாக புரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் இந்திய அரசோடு பிரச்சனைகள் ஏற்பட்டன. இன்றைக்கும் எங்களை எதிரியாகப் பார்ப்பது ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று. இந்திய அரசு, அரசியல் கட்சிகள், மக்களின் ஆதரவு எங்களுக்குத் தேவை.

**கேள்வி:-** மாத்தையாவை என்ன செய்தீர்கள்?

**பதில்:-** அவர் கைது செய்யப்பட்டார். ஓர் ஆண்டு காலம் விசாரணை நடத்தப் பட்டது. அவர் குற்றவாளியாக கருதப்பட்டார். எனவே மரண தண்டனை வழங்கப்பட்டது." அவ்வாறு தனது பேட்டியில் தெரிவித்துள்ளார் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

# தலைநகர வைத்தியசாலையில் தமிழ்க்கொலைகள்

## அமைச்சர் பௌசி கவனிப்பாரா?

(அலுவலக நிருபர்)

கொழும்பில் உள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் நல்ல சிகிச்சைகள் நடக்கிறதோ இல்லையோ! தமிழ்க் கொலை மட்டும் வெகு சிறப்பாக நடந்தேறிவிட்டது.

நோயளர்களை பார்வையிட வழங்கப் படும் அனுமதிப்பத்திரத்தில் தமிழ் பட்டுள்ள பாட்டைப் பாருங்கள்.

அமைச்சர் பௌஸி அவர்களின் பார்வைக்கு இது சமர்ப்பணம்:

**புது மொழி.**

**நேய்ர்ம்திப்டு ருபதன்னுய்ககப்பம் ேற்ரம்.** இது என்ன மொழி என்று குழப்பமாக இருக்கிறதா? நோயாளர் களைப் பார்வையிடும் நேரம் என்பதை அது குறிக்கிறதாம்.

**னோிலர் ந போர**– அதாவது, நோயாளியின் பெயர்.

**கனுமதிக்கப்ப்ட்ட திகதி** – அதாவது, அனுமதிக்கப்பட்ட திகதி.

**த்ட்டில் இளக்க்தி**– அதாவது, அனுமதி பத்திர இலக்கம்.

**இம்ரட்குலஅம்** – அதாவது, அறை இலக்கம்.

**ஸ்ரீ ஜமனவய்ர்து பொ்து ஆஸ்பத்திரி**– அதாவது, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனை.

**பார்லைய்ா.எம அர்னுதி க்கப்ப**-அதாவது, பார்வையாளர் அனுமதிப் பத்திரம்.

தமிழை நடைமுறைப் படுத்தாவிட்டாலும் பரவா யில்லை, இப்படி கேவலப் படுத்தி சம அந்தஸ்த்து என்பதை கேலி செய்யாமல் இருக்கலாம் அல்லவா?

அதுவும் தலைநகரில் பிரபல அரச மருத்துவ மனையில் இப்படியான அவமதிப்பு நேருவது சின்னத் தப்பு என்று அலட்சியம் செய்யக்கூடியது மல்ல.


ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரி
Sri Jayawardenepura General Hospital
பார்வையாளர் அனுமதிச் சீட்டு
VISITOR'S PASS
Available for visiting patients daily between 12.00 noon to 2.00 p.m. and 5.00 p.m. to 6.30 p.m.
6.30 — 7.
Name of Patient
Date of Admission
Bed-H ad Ticket No.
Ward No.
Director
Note: This pass should be carefully kept. No duplicate will be issued. This pass must be returned when the patient is discharged from hospital. It should be produced for inspection to any hospital officer or employee who may ask for it.
P. S. Dodangoda & Co.—Horana

எழுத்துப் பிழைகள் என்றால் கூட பொறுக்கலாம், ஆனால் தமிழ் என்று நினைத்துக் கொண்டு தமிழ் எழுத்துக்களை மட்டும் பொறித்து விளையாட்டுக் காட்டியிருக்கிறார்கள். மிகப் பாரிய அவமதிப்பு இது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பாரா? மேற்படி அனுமதிப் பத்திர தயாரிப்பில் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதே முறையானது– சரியானது.

அமைச்சரின் நடவடிக்கையை எதிர் பார்க்கிறோம்.

குறித்த விடயம் தொடர்பாக எடுக்கப் பட்ட நடவடிக்கை பற்றி சுகாதார அமைச்சகம் அறியத்தருமானால் முரசு வாசகர் களுக்கு அதனை தெரியப்படுத்துவோம்.

தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப் பினர்களும் இது குறித்து குரல் எழுப்ப வேண்டும்.

இதுவரை எழுத்துப் பிழைகள் தான் ஏற்பட்டுவந்தன. இப்போதுதான் தமிழுக்கு வேறு வடிவம் கொடுக்கும் நிகழ்வு ஆரம்ப மாகியிருக்கிறது. இப்படியே விட்டால் எங்கு போய் முடியுமோ?!

# காட்டூண் மூலை




## சர்வதேச மனித உரிமைகள் தினம்! பலியானோரின் துயர நினைவுகள்!

(ஏறாவூர் நிருபர்)

கடந்தகால கொடிய யுத்தத்திற்கும், வன்முறைக்கும் பலியானவர்களினதும், கடத்தப்பட்ட–காணாமல் போனவர்களினதும் துயர நிகழ்வுகளின் நினைவை நினைவு கூரு முகமாக அஹிம்சை வழியிலான பல நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மாவட்டமெங்கும் நடத்தப்பட்டன.

டிசம்பர் 10ம் நாளில் அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தினத்தை யொட்டியே இந் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்-முஸ்லிம்-சிங்கள சமுகங்களையும் மற்றும் வெளிநாட்டு சமாதானச் சேவை யாளர்களையும் கொண்ட ஒரு குழுவே இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

கொடிய யுத்தமும் வன்முறையும் ஏற்படுத்திய துயர நிகழ்வுகளைப் பற்றிய நிகழ்ச்சிகளைத் தாம் அனுஷ்டித்தது பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர் களுக்கும், மாவட்ட பிரிகேடியர், பொலிஸ் அத்தியட்சகர், மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பணிக்குழுவிற்கும் இக்குழு வினர் அறிவித்துள்ளனர்.

## திரைக்கு வராத படங்கள்

இன்று அரச திரைப்படக் கூட்டுத் தாபனம் பல புதிய திரைப்படங்களை தருவித்து திரையிடுகிறது. இருந்தும், ஒரே ஒரு குறை. அமரர் எம்.ஜி.ஆரின். எல்லா திரைப்படங்களும் நம் நாட்டில் தியேட்டர்களில் திரையிடப்பட்டன. ஆனால், ஐந்து படங்களைத் தவிர.

அவையாவன-சங்கே முழங்கு, பட்டிக்காட்டுப் பொன்னையா, உரிமைக் குரல், இன்று போல் என்றும் வாழ்க, மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் போன்றவை. இப்படங்களை பெரிய திரை யில் எப்போது பார்ப்போம் என்று எம்.ஜி.ஆர். இரசிகர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்

ஆகவே, அரசதிரைப்படக் கூட்டுத் தாபனம் நல்மனது வைத்து இத்திரைப் படங்களை திரையிட முயற்சி செய்ய வேண்டும்.

கல்லொளுவை பாரிஸ்–கானி.

## "ரூபவாஹினி கவனிக்குமா?"

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் விரும்பி பார்க்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமைகளில் ஒளிபரப்பாகும் "பொன்மாலைப் பொழுது" அன்றைய தினம் விடுமுறையாகிய படியால் தவறாமல் பார்க்க சந்தர்ப்பம் உண்டு. அதிலும் விளையாட்டு (கிரிக்கெட்) மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் அதற்கும் வழியில்லை. இதற்கிடையே ஒளிபரப்பாகும் பொன் மாலைப்பொழுதுகளில் அநேகமாக ஒரே பாடல்களையே மீண்டும் மீண்டும் ஒளிபரப்பி வருகின்றனர். இதனை இப்படியே விட்டால் ரூபவாஹினி, தமிழ் இரசிகர்களது வெறுப்பை சம்பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. ஏன் புதிய-பழைய பாடல் கெசட்டுகள் கிடைப் பதில்லையா? இனியும் 'பொன்மாலைப் பொழுது' தொகுப்பாளர்கள் இப்படியான தவறுகளை விடாது பாாத்துக் கொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செல்வி.எம்.தெய்வீகரஞ்சனி, பதுளை.

## "சிவகோபுரம்" வெளியீடு

அம்பாறை மாவட்டத்திலிருந்து முதன்முதல் வெளிவரும் சமய சஞ்சிகையான "சிவகோபுரம்" வெளியீட்டு விழா அண்மையில் பத்திரிகையாளர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் நடை பெற்றது.

மட்டுநகர் இ.கி.மிஷன் சுவாமி ஜீவனானந்தாஜீ பிரதம அதிதியாக கலந்து கொண்டு முதற்பிரதியை காரைதீவு ப.நோ.கூ.சமசத் தலைவர் என்.தில்லையம் பலத்திற்கு வழங்கி வைத்தார்.

நூலாசிரியர் எஸ்.சற்பிரசாதநாதன் வெளியீட்டுரையை நிகழ்த்த இரா. கிருஷ்ணபிள்ளை விமர்சன உரையாற்றி னார்.

## பணி நேரத்தில் மது மயக்கமா?

தமது கடமை நேரத்தில் மது போதையில் காணப்படும் அதிகாரிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது நிருவாக அமைச்சு கேட்டுள்ளது.

இது உண்மையில் அமுலுக்கு வந்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகக் கூடுத லான அதிகாரிகள் தண்டனை பெறுவது நிச்சயம் என்றும் அதில் கூடுதலாக கிராம சேவகர்களே இடம் பெறுவார்கள் என்றும் ஒரு கிராம சேவையாளரே கருத்துத் தெரிவித்தார். "சில கிராம சேவகர்கள் கடமை நேரத்தில் வீதிகளில் மது போதையுடன் வீழ்ந்து கிடப்பது இங்கு கண்கொள்ளாக் காட்சி."

இதே வேளை வந்தாறுமூலையில் மதுபானம் ஏற்றி வந்த லொறி வீதியால் வந்த வி.நமசிவாயம் (58) என்ற முதியவர் மீது குடை சாய்ந்ததில் அவர் கொல்லப் பட்டார்.

## வைத்தியசாலைகளுக்கு வாயு அடுப்புகள்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளில் விறகு அடுப்புக்கள் பாவனைமுறை முற்றாக ஒழிக்கப்பட்டு, வாயு அடுப்புக்கள் பாவனை முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக வட கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

காத்தான்குடி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

வாயு (கேஸ்) அடுப்புகள் இன்னும் 2,3 வாரங் களில் மாவட்டவைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு விடுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒதுக்கீடு ஒரு கோடி

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி மாவட்ட வைத்திய சாலையின் அபிவிருத்திக்கு 1 கோடியே 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதி தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹவின் முயற்சியினாலேயே இந்நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது.

நிர்வாகக் கட்டிடத்திற்கு 35 லட்சம், பிரேத அறைக்கு 12 லட்சம், வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு 16 லட்சம், உதவி வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு 10 லட்சம், தாதிமார்தங்குவிடுதிக்கு 20 லட்சம், சுற்றுமதில் 8லட்சம் என ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்வருவார்களா?

நோர்வூட் பகுதியில் பேஃபோன், மெற்ரோ தொலை பேசி வசதி இல்லாததால் தொலைவில் உள்ள ஹட்டனுக்கும் பொகவந்தலாவைக்கும் ரூபாய் 4/- வீதம் பஸ்சுக்கு செலவழித்தும் நேரத்தை செலவிட்டும் தான் தொலைபேசி வசதியை பெற வேண்டியுள்ளது. இங்குள்ள தபால் கந்தோர் தொலைபேசியும் சீராக வேலை செய்வதில்லை. இந் நிலையில் தனியாரும் தொலைபேசிக்கு அதிக பணம் அறவிடுகின்றனர். எனவே சம்பந்தப் பட்டவர்கள் பேஃபோன், மெற்ரோ தொலை பேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதே நோர்வூட் பகுதி மக்களின் ஆவலாகும்.

நா.மயில்வண்ணன்-நோர்வூட்.

## அலையவைக்கும் கம்பனிகள்

என்று தேயிலை தோட்டங்களை தனியார் கம்பனிகளுக்கு அரசு ஒப்படைத்ததோ அன்று தொடக்கம் இன்றுவரை தோட்ட தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதாகவே கருதுகின்றோம். பல்வேறு தோட்டங்களை ஒன்றிணைத்து நிர்வாகம் செய்கின்றார்கள். அவ்தோட்ட நிர்வாகத்தில் பல துரைமார்களும் காணப் படுகின்றார்கள். பத்து மைல் தூரத்தில் ஒரு தோட்டத்தின் காரியாலயம் காணப்படுகின்றது- அவ் தோட்டத்தில் வசிக்கும் ஒரு தொழிலாளி தனது தேவையை பூர்த்தி செய்ய பத்து மைல் தூரம் சென்று கேட்க வேண்டியதாக இருக்கின்றது. அப்படி கேட்கும் போது பல துரைமார்கள் கடமை யாற்றுவதால் "அவர்வரட்டும் நாளை வா!" என்றும் அடுத்த நாள் சென்றால் "துரை இல்லை வந்தவுடன் வா" என்றும் தட்டிக்கழிக்கின்றார்கள் இப்படி நிலைமை போகும் போது தொழிலாளர்கள் தமது தேவைகளைக் குறிப்பிட்டகாலத்தில் முடிக்க முடியாமல் அல்லல் படுகின்றனர். தனியாரின் நோக்கம் இலாப நோக்கம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. மலையகத்தை ஏன் இவ்வாறான நிலையில் வைக்க விரும்புகின்றீர்கள்? மலையகம் என்று மலர்ச்சிபெறும். உடனே உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம்.

பொது நலம் பேணும்,
தினமுரசு வாசகர்,
இரா. இராமகிருஸ்னன்.


# ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398





## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட் டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா! வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28


## தமிழ்த் திரைப்படத்துக்கு தடையா?

M.T.V, T.N.L ஆகிய தொலைக்காட்சி சேவையில் முன்பு வாரத்துக்கொருமுறை அல்லது மாதத்துக்கொரு முறை தமிழ்த் திரைப்படங்கள் ஒளிபரப்பப்பட்டன. ஆனால் இந்த இரு தொலைக்காட்சி சேவையினரும் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. கடந்த சில மாதங்களாகத் தமிழ்த்திரைப் படங்களை ஒளிபரப்புவதை நிறுத்தியுள்ளனர். இவர்களுக்கும் தமிழர் மேல் வெறுப்போ? அப்படியல்லையெனின் மீண்டும் தமிழ்த்திரைப்படங்களை ஒளிபரப்பலாமே?

சோ. ஸ்ரீதரன்,
பொகவந்தலாவை.


## சித்தர்களின் தெய்வீக மருத்துவம்

(COVT. APPROVED CHARTY) மட்டக்களப்பு, கல்லடி(வேலூர்) குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு, மகாசக்தி உபாசவ் "மந்திரயோகி" சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி (அக்குப்பங்சர்) டாக்டர்–சக்தியானந்தபாவா மட்டக்களப்பு-மலையாழ (இந்திய) பாரம்பரிய கைகண்ட அனுபோக புராதன (மருந்த, மந்திர, யந்திர, மனோவசிய, ஆகார்ஷண) வைத்திய முறைகளினால் உடல்நோய், மனநோய், தீயசக்திகளினால் ஏற்பட்ட தீவினைகளையும் தீர்த்து துன்பங்கள் அனுகாமல் "காவல்ரட்சைகள், சர்வகாரியசித்தி, தாயத்து, நவக்கிரகதோஷ, சர்வரோக நிவர்த்தியந்திரம், ஜனராஜ வசியயந்திரங்களும்" செய்து கொடுக்கிறார். பிரிந்த குடும்பங்களை உறவாக்க விரும்பிய வாழ்க்கையை அமைத்து இன்பமாக வாழ, (இருவர் பெயர்களும் தேவை) வேறு நன்மையான தனிப்பட்ட மாந்திரீக வசிய விடயங்கள் செய்து கொள்ள வரமுடியாத வெளிநாட்டவர்கள் கோரிக்கைகளை எழுதினால் உங்கள் விருப்பங்களை உடன் நிறோவெற்ற பரிகாரப் பொருட்களை தபாலில் அனுப்பப்படும். விரும்பியனுப்பும் காணிக்கைகளை (மணியோடர்) ஏற்று உடன் கவனிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நாடவேண்டிய விலாசம்:-

YOGI. DR. SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTERE,
KALLADY, BATTICALOA.



கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்பவற்றை மொழி பெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலரும் விண்ணப் பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா
தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772
கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

# தலையிடியாகப் போகும் இடம்பெயர்வுகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

— நாரதர் —

## கிழக்கில் இலக்குத் தேடும் புலிகள்

யாழ் நகரைக் கைப்பற்றிய படைத் தரப்பு அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராகிவருகிறது.

தென்மராட்சியையும், வடமராட்சியையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே படையினரது அடுத்த கட்ட நடவடிக்கையின் இலக்காக இருக்கும்.

படைத்தரப்பு யாழ்-நகரைக் கைப்பற்றி விட்டு தனது நடவடிக்கைகளை ஆறப் போடப்போவதில்லை என்பது புலிகளுக்கும் தெரியும்.

படையினரின் அடுத்த கட்ட நடவடிக்கையை தடுத்து நிறுத்த புலிகளுக்கு ஒரேயொரு வழிதான் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் படையினர் தற்போது நிலைகொண்டுள்ள பகுதிகளில் உடனடியாக பாரிய தாக்குதல் யுத்தத்தை நடத்தியாக வேண்டும்.

அதன் மூலமாக கைப்பற்றிய பகுதிகளை தக்கவைத்துக் கொள்ளும் தற்காப்பு யுத்தக் கட்டத்திற்குள் படையினரது நடவடிக்கைகளை முடக்கி வைத்திருக்கலாம்.

ஆனால், அதற்கான போதிய வாய்ப்புக்கள் புலிகளிடம் தற்போதைக்கு இல்லை என்பதுதான் பிரச்சனை.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு தற்காலிக ஓய்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறது படைத் தரப்பு.

இந்த ஓய்வு புலிகளைப் பொறுத்தவரை ஆபத்தானது.

தமது வெற்றியால் தெற்கில் ஏற்பட்டுள்ள அமோக வரவேற்பையும், தொடர்ந்து வெற்றிகளைப் பெறுவதற்கான உற்சாகத்தையும் படையினர் பெற்றுக் கொண்டிருக்க இந்தக் கால அவகாசம் உதவுகிறது.

நிதானமாக யோசித்து தமது அடுத்த வியூகத்தை வகுப்பதற்கும் படையினருக்கு போதிய உற்சாகமும், கால அவகாசமும் கிடைத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் படையினருக்கு கிடைத்துள்ள இந்த கால அவகாசத்தை புலிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும்.

தமது அணிகளை ஒன்றுதிரட்டிப் பாய்ந்து, ஓய்வுகொள்ளும் படைமீது தாக்குதல் தொடுக்க முடியும்.

எனினும், அவ்வாறான தாக்குதலை நடத்துவது என்பது தற்போதைக்கு புலிகளது சக்தியை மீறிய ஒன்றாகவே இருக்கிறது.

அதனால், ஓய்வு பெற்று மீண்டும் புத்துணர்வோடு அடுத்த கட்ட தாக்குதலுக்கு படையினர் தயாராவதை அறிந்தும் கூட தடுக்க முடியாத நிலையில் புலிகள் இருக்கின்றனர்.

தற்போது படையினர் நிலைகொண்டுள்ள யாழ்ப்பாணத்திற்குள்ளும் புலிகளது அணிகளின் நடமாட்டம் இருக்கவே செய்கிறது.

படையினர் யாழ் நகரைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டுள்ளனரே தவிர, யாழ்ப்பாணத்தின் முழுப் பரப்பிலும் நிலை கொள்ளவில்லை.

அவ்வாறு நிலைகொண்டு பூரணமான தேடுதல் நடத்துவது சுலபமான காரியமல்ல. ஆட் தொகை அதிகளவில் தேவைப்படும்.

அதேவேளை யாழ்ப்பாணத்திற்குள் தற்போது நடமாடும் புலிகளது அணிகளால் பாரிய ஒரு தாக்குதலை நடத்தவும் முடியாது. அந்தளவுக்கு அவற்றின் ஆளணிப் பலம் போதாது.

தொந்தரவு கொடுக்கும் தாக்குதல்கள் சில காவலரண்கள் மீதான தாக்குதல்கள் போன்றவற்றில் தான் அவை ஈடுபடலாம்.

புலிகள் கெரில்லாத் தாக்குதலுக்கு தயாராகி வருகிறார்கள்; வன்னிக் காட்டுக்குள் புலிகளது அணிகள் மீள ஒழுங்கமைக்கப் படுகின்றன என்ற செய்திகளில் ஊகங்களே அதிகம் காணப்படுகின்றன.

இனி கெரில்லாத் தாக்குதல்களையே வடக்கில் புலிகள் மேற்கொள்வார்கள் என்பது சாதாரணமாகவே தெரிந்த விடயம்தான்.

ஆனால், தற்போதைய வடபுலப் போர் நிலவரத்தை மாற்றக்கூடிய வகையில் புலிகளால் உடனடியாகத் தாக்குதல் நடத்த முடியுமா? என்பதுதான் பிரச்சனை.

படையினர் வடமராட்சியையும், தென்மராட்சியையும் கைப்பற்ற ஆயத்தம் செய்து வருகின்றனர்.

அங்குள்ள மக்களை வெளியேற்றுவதில் தான் புலிகள் தமது முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

வடபுலத்தில் இராணுவரீதியில் படையினருக்கு தோல்வியைக் கொடுக்க முடியாத நிலையில், மக்களை வெளியேற்றுவது மூலம் அரசியல் தோல்வியைக் கொடுப்பதுதான் புலிகளது பிரதான நோக்கமாகிவிட்டது.

ஆனால், பிரச்சனையே அதுதான். மக்களை வெளியேற்றி, தாம் பின்வாங்கிச் செல்லும் பகுதிகளுக்குக் கொண்டு செல்வது கயிற்றில் நடப்பது மாதிரியான விடயம்.

தற்காலிகமாக அந்த நிலை புலிகளுக்கு சாதகமாக இருந்தாலும், நீண்டகால நோக்கில்



அதுவே பாதகமாக மாறும் அபாயமும் இருக்கிறது.

ஒரு கட்டத்திற்கு மேல் புலிகள் சொல்வதற்கெல்லாம் மக்கள் கட்டுப்பட்டுக் கொண்டிருக்கும் நிலை மாறிப்போகலாம்.

அகதி வாழ்க்கையின் விரக்தியும் சலிப்பும், கஷ்ட நஷ்டங்களும் என்று சகல நெருக்கடியும் புலிகளுக்கு எதிரான வெறுப்பாக வெடித்து விடலாம்.

இப்போதே அதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பலர் வவுனியாவுக்கு வர விரும்புகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்புகொண்டு செலவுக்கு பணம் பெறுவது, தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஏற்பாடுகளைச் செய்வது போன்ற காரியங்களுக்காகவும் பலர் வெளியே வர விரும்புகின்றனர்.

இயக்கத்திற்கு உடனடியாக ஆள் தேவை என்று புலிகள் தீவிரமாக உறுப்பினர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்பத் திட்டமிடும் மக்கள்மீது புலிகள் எரிச்சலடைகிறார்கள்.

முன்பெல்லாம் மக்களிடம் புலிகள் உறுதியான குரலில் பேச முடிந்தது. "நாங்கள் உங்களுக்காகப் போராடுகிறோம். நீங்கள் சொகுசாக இருக்க விரும்புகிறீர்கள்" என்று புலிகளால் கூறிக்கொள்ள முடிந்தது.

இப்போது நிலமை வேறு. இன்று மக்களும் வாழ்வதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் இடம்பெயர்ந்து வந்தமைக்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று: படையினர் தொடர்பான நம்பிக்கையீனம்.

இரண்டு: போர் உக்கிரமாக நடக்கும்போது தப்பிக்கொள்ளும் நோக்கம்.

மூன்று: புலிகளின் அறிவித்தல்.

வடமராட்சியும், தென்மராட்சியும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வரும்போது அங்கு ஆகக் குறைந்தது ஒரு லட்சம் மக்கள் இருந்தால் கூட புலிகளுக்கு பாதகம்தான்.

அந்த ஒரு லட்சம் மக்களுக்கும் அரசாங்கம் புனர்வாழ்வு வசதிகளையும் இயல்பு வாழ்க்கைக்கான ஏற்பாடுகளையும் பெரியளவில் செய்யுமானால், வெளியேறியுள்ள மக்களுக்கு தூண்டில் போடுவது மாதிரியாகிவிடும்.

மக்கள் வெளியேறக் காரணமாக இருந்த மூன்று காரணங்களும் மெல்ல மறையத் தொடங்கிவிடும்

புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவார்கள் என்று ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கையும் இப்போது மறையத் தொடங்கியிருக்கிறது.

புலிகள் கூட நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக பேசுகிறார்களில்லை. குறைந்தது பத்தாயிரம் பேராவது இயக்கத்தில் சேர்ந்தால் தான் யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்ற முடியும் என்றுதான் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

புலிகள் கூறும் பத்தாயிரம் பேரில் பாதியைக் கூடத் திரட்டி முடிப்பதற்கு உறுப்பினர் வழங்கலைச் செய்ய மக்கள் முன்வரும் நிலையிலில்லை.

'இவ்வளவு காலம் போராடியே கிடைக்காத தமிழீழம் இனிப் போராடியோ கிடைக்கப் போகிறது' என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது.

தனிராச்சியம் போல இருந்த யாழ்ப்பாண தளப் பிரதேச வீழ்ச்சி, மக்களின் நம்பிக்கைகளை தகர்த்துப் போட்டுவிட்டது.

"எப்படியெல்லாம் யாழ்ப்பாணத்தில் புலிகள் கொடிகட்டிப் பறந்தார்கள். அதையே தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை, தமிழீழமோ கிடைக்கப்போகிறது?" என்று பேசத் தலைப்பட்டுவிட்டார்கள்.

எனவே, 'தமிழீழமே தாகம்' என்ற கோஷம் தற்போதைக்கு மக்களைக் கவரும் தன்மையை இழந்துவிட்டது.

அரசியல் தீர்வுப் பேச்சுக்களில் தமிழர் தரப்பில் பலம் இருக்க வேண்டுமானால், புலிகளது இராணுவ பலம் வீழ்ந்துவிடக்கூடாது என்று பரவலான ஒரு அபிப்பிராயம் இருக்கிறது.

அவ்வாறான அபிப்பிராயம் கொண்டிருப்பவர்களும் "தமிழீழமே முடிந்த முடிவு என்ற நிலைப்பாடு இனிச் சாத்தியமில்லை" என்றே சொல்கின்றனர்.

இனப்பிரச்சனை தீர்வில் மூன்றாவது சக்தியொன்று தலையிட்டாலும்கூட, தமிழீழக் கோரிக்கைக்கு சார்பாகப் பேசப் போவதில்லை.

புலிகளின் ஆயுதபலத்தால் தமிழீழம் கிடைத்தால் மட்டுமே உண்டு. வேறு சக்திகள் எதுவும் தலையிட்டு தமிழீழம் பெற்றுத் தரப் போவதில்லை என்பது தெளிவான ஒன்றாகி விட்டது.

புலிகளது ஆயுதபலம் என்பது ஒரு தளப்பிரதேசத்தை தக்கவைத்துக்கொள்ளுமளவுக்குக்கூட கடந்த பத்துவருட காலத்தில் வளர முடியவில்லை.

கெரில்லா யுத்த முறை என்ற வட்டத்திற்குள் மட்டுமே புலிகளது ஆள் பலமும், ஆயுத பலமும் இருந்து கொண்டிருக்கும்வரை, வடக்கு-கிழக்கில் மக்கள் பெருந்தொகையாக வாழும் பிரதேசங்களை விடுவித்து பாதுகாக்கும் நிலைக்கு செல்ல முடியாது.

ஆனால், தமது கெரில்லாப் போர்முறை மூலமாக அரசாங்கத்திற்கும், படைகளுக்கும் தொடர்ந்து தலையிடியையும், இழப்புக்களையும் கொடுக்கும் அமைப்பாக புலிகள் இருக்க முடியும்.

அதன் மூலம் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு இராணுவரீதியில் நிர்ப்பந்தம் செலுத்தும் பாத்திரத்தை புலிகள் வகிப்பார்கள்.

இதுதான் தற்போதைய நிலவரப்படி கூடுதலோ, குறைச்சலோ இல்லாத கணிப்பு.

இந் நிலையில் இடம் பெயர்ந்த மக்கள் நீண்டகாலத்திற்கு தமது சொந்தப் பகுதிகளுக்கு வெளியே வாழ்வதற்கு சம்மதிப்பார்கள் என்று கருதமுடியாது.

"படையினர் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள பகுதிகளை விட்டு வெளியேறினால்தான் மக்கள் திரும்புவார்கள்" என்று புலிகள் அறிவித்திருக்கிறார்கள்.

புலிகளின் உடனடிக் கோரிக்கை என்றும் இதனைக் கருதலாம்.

இக் கோரிக்கையை நிறைவேற்ற இரண்டு வழிகள்தான் உள்ளன.

ஒன்று: புலிகள் தமது இராணுவ பலம் மூலமாக நிறைவேற்றுவது.

இரண்டு: வெளியுலக நிர்ப்பந்தம் மூலமாக நிறைவேற்றுவது.

முதலாவது உடனடியாகச் சாத்தியமில்லை. வெளியுலக நிர்ப்பந்தம் ஏற்படுமளவுக்கு புலிகளின் கோரிக்கை நியாயமாகத் தெரியப் போவதில்லை.

இலங்கை அரசு தனது படைகளை தனது நாட்டின் ஒரு பகுதியில் வைத்திருக்கக் கூடாது என்று எந்தவொரு வெளிநாடும் சொல்ல மாட்டாது.

அப்படிச் சொல்வதும் ஒன்றுதான்; தமிழீழம் தனி ஒரு நாடு என்று ஏற்றுக் கொள்வதும் ஒன்றுதான்.

வேண்டுமானால் குடி மக்கள் நெருக்கமாக வாழக் கூடிய பகுதிகளில் ஆயுதப் படையினர் நிலை கொள்வதை தவிர்க்க வேண்டும் என்ற கருத்து மட்டும் ஏற்கப்படலாம்.

அதேவேளை, புலிகளும் குடிமக்கள் உள்ள பகுதிகளில் ஆயுதங்களோடு நடமாடக் கூடாது என்று அரச தரப்பும் வலியுறுத்தும்.

அரசோடு முன்பு பேச்சு நடத்தும் போது புலிகள் முன்வைத்த இரு கோரிக்கைகள் பெரும் சிக்கலைத் தோற்றுவித்தன.

பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டும்; கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆயுதங்களோடு நடமாட அனுமதிக்க வேண்டும் என்பதே அந்த இரண்டு கோரிக்கைகளாகும்.

இப்போது ஒரு உடன்பாடு ஏற்பட வேண்டுமானால், யாழ் குடாநாட்டில் தமது உறுப்பினர்கள் ஆயுதங்களோடு நடமாட வேண்டும் என்ற கோரிக்கையையும் புலிகள் முன்வைத்தாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எந்த இரு கோரிக்கைகள் போர் நிறுத்தம் முறிய நியாயமான காரணங்களாக புலிகளால் முன்வைக்கப்பட்டனவோ, அந்த இரு கோரிக்கைகளை இனி எழுப்ப முடியாத நிலையில் புலிகள் உள்ளனர்.

இப்போது பூநகரியைவிட, யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள படையினரைப் பற்றிப் பேச வேண்டிய நிலையிலும், அதையொட்டியே கோரிக்கைகள் விட வேண்டிய நிலையிலும் புலிகள் உள்ளனர். இது நிச்சயமாக பலத்த பின்னடைவுதான்.

யாழ் குடாநாட்டிலிருந்து படையினர் விலகுவது என்பது தாமாகவோ, அல்லது வெளியுலக நிர்ப்பந்தம் காரணமாகவோ ஏற்படப்போவதில்லை. தமது கோரிக்கையை தமது பலத்தால் புலிகள் நிறைவேற்றினால் மட்டுமே அது சாத்தியம்.

அதையெல்லாம் நம்பி மக்கள் காத்திருப்பார்களா என்பதுதான் பிரச்சனை.

அரசும், படைகளும் முன்னைய காலங்கள் போல அல்லாமல் நெளிவு-சுழிவாக நடந்து கொண்டால் இடம்பெயர்ந்த மக்களை கட்டியாள முடியாமல் புலிகள் தடுமாறவேண்டியேற்படும்.

எப்படியாவது மக்கள் திரும்பி வந்தேயாக வேண்டும் என்று அரசும், மக்கள் திரும்பப் போவதில்லை என்று புலிகளும் பந்தயம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சம்பளப் பணம், ஓய்வூதியம், நிவாரணம் என்று அரசிடம் பல பிடிகள் இருக்கின்றன.

இரு தரப்பின் பந்தயம் நடுவே பணயம் வைக்கப்பட்ட நிலை மக்களுடையது.

இடம் பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரை, தமது வீடு வாசல்களில், அது குடிசையாக இருந்தாலும் அங்கு போய் ஒரு வேளைக் கஞ்சி குடித்தாலும் நிம்மதி என்றே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குருவி கூடு கட்டுவது போல சிறுகச் சிறுக சேமித்துக் கட்டிய வீடு வாசல்களை விட்டுவிட்டு வன்னியில் விவசாயம் செய்து கொண்டிருக்க எத்தனைபேர் உடன்படப் போகிறார்கள்?

சொந்த வீடுவாசல்களில் வாழ்ந்து கொண்டு போராட்டத்தில் உறுதியாக இருக்க மாட்டார்கள். படையினர் உள்ள பகுதிகளில் வாழப் பழக்கப்பட்டால் போராட்டத்தை மறந்துவிடுவார்கள் என்று மக்களில் சந்தேகப்பட்டால், போராட்டத்தில் அடிப்படையாக ஏதோ ஒரு கோளாறு இருப்பதாக அர்த்தமாகிவிடும்.

சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப் பட்டதால்தான் பாலஸ்தீனியப் போராட்டம் பலவீனங்களைக் கொண்டிருந்தது.

இங்கே, வெளியேறிய மக்கள் திரும்பிச் செல்ல வாய்ப்புக் கிடைத்தாலும் தடுக்கப் படுவார்களேயானால் யாழ்ப்பாணத்தை 'யாப்பனே பட்டுன'வாக்க புலிகளே இடமளிப்பதாகி விடும் என்ற கருத்தும் ஒதுக்கி விடக் கூடியதல்ல.

இதேவேளை கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வடபுலத்தில் ஏற்பட்ட பின்னடைவை கிழக்கில் பெறும் வெற்றிகள் மூலமாக சரி செய்யவே புலிகளது அணிகள் மும்முரம் காட்டுகின்றன.

அந்த அவசரத்தில் நிதானமின்மையும் வெளிப்படுகிறது.

பேருந்து வண்டியில் பயணம் செய்த நான்கு விசேட அதிரடிப்படையினரை தாக்குவதற்காக, பேருந்தில் இருந்த பயணிகளையும் புலிகள் சுட்டுத்தள்ளியிருந்தனர்.

'பத்துப் பொதுமக்கள் செத்தாலும் பரவாயில்லை ஒரு படைவீரர் பலியானால் சரி, என்று புலிகள் நினைப்பது, கிழக்கிலும் தமிழ் மக்களது அதிருப்தியை சம்பாதிப்பதாகி விடுகிறது.

கிழக்கில் புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம்மீது புலிகள் நடத்திய தாக்குதல் வெற்றியில் முடிந்திருந்தது.

அதனையடுத்து பேருந்தில் சென்ற பயணிகள்மீது புலிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் அந்த வெற்றிமீது கறைபூசுவதாகி விட்டது.

வடபுலத்தில் பாரிய தாக்குதல்களை உடனடியாக நடத்த முடியாத நிலையில் கிழக்கில்தான் புலிகள் இலக்குகளை தேடுகிறார்கள்.

இடம் பெயர்ந்த யுத்தப் புயல் தற்போது கிழக்கில்தான் மையம் கொண்டிருக்கிறது.

புயலால் பாதிக்கப்படுவது பொது மக்கள்தான். "வடபுலத்தில் போர் நடைபெறும் பகுதிகளில் மக்கள் இருக்கக் கூடாது; அது மக்களது பாதுகாப்புக்கு கெடுதி" என்று புலிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், பொதுமக்கள் பாதிக்கப்படுவது போரில் சகஜம் என்ற ரீதியில் புலிகளது நடவடிக்கைகள் கிழக்கில் அமைந்துள்ளன. இது முரண்பாடான நிலைதான்.

படைத்தரப்பும் தனது பதிலடியை பொதுமக்கள் மீதுதான் காட்டுகிறது. இரு தலைக்கொள்ளி எறும்பாக இருக்கிறது மக்கள் நிலை.

பலவீனமான முனைகளில் தாக்குதல் நடத்துவது கெரில்லாப்போர் முறையில் சகஜம்தான். அதேவேளையில் பொது மக்களது உளவியல் நிலையை பலவீனப் படுத்துவதாக அது அமையுமானால் போரே வேண்டாம் என்ற முடிவுக்கு கிழக்கு மக்களும் செல்ல வேண்டி ஏற்பட்டுவிடும்.

மக்கள் கஷ்டப்பட்டால்தான் போராட்டத்துக்கு ஆதரவாக இருப்பார்கள். இயல்பான வாழ்க்கைக்கு பழக்கப்பட்டால் போராட்டத்தை மறந்துவிடுவார்கள் என்ற கோட்பாடு இருபுறமும் கூர் உள்ள கத்தி மாதிரித்தான்.

வடபுல பின்னடைவை சரி செய்யும் அவசரத்தில் புலிகள் அதனை மறந்து விட்டார்களோ என்று யோசிக்கத் தோன்றுகிறது.

## அதிரடி அய்யாத்துரை



பாதுகாப்பு நிதியை எதிர்க்கிறதா பாசாங்கு காட்டிப் போட்டு, அதையும் உள்ளடக்கிய வரவு-செலவுத் திட்டம் அமோகமாக நிறைவேற கூட்டான கட்சியினர் கை உயர்த்திப் போட்டினம். முன்னது சனத்துக்கு காட்டிய சலசலப்பு. பின்னது அதிகாரத்தரப்போடு செய்த சமரசம். சாணக்கியம் எண்டால் உதுதானுங்கோ சாணக்கியம்.

யாழ்ப்பாணச் சனம் ஆட்கள் தந்தது குறைவு. தந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது எண்டு ரெண்டு எழுத்தார் சொல்லுகினமாம். அதுக்காகத்தானே நிதி கொடுத்தனாங்கள் எண்டு பதிலுக்குச் சிலர் முணு முணுக்கினமாம். கசப்புக்கள் முகம் காட்டத் தொடங்கியிருக்கிறதாகத்தான் தகவல்.

ரெண்டு எழுத்தாருக்கும் கண்ணிலை மண்ணைத் தூவிப் போட்டு வீடுகளுக்கை ஒளிச்சிருந்த வயோதிபர்களும் இருக்கினம். வீடுகளை விட்டுப்போட்டு போனால் களவு போயிடும் எண்டு காவல் இருக்கினமாம். இதுவரை அவையை ரெண்டு எழுத்தாரும் காணேல்லை. பச்சைத் தரப்பும் காணேல்லை. புகை வெளியே வராமல் சமைச்சுச் சாப்பிட்டுக் கொண்டிருக்கினமாக்கும்.

தேனகத்தின் முன்னாள் பிரதிநிதி கருணாகரன் லண்டனுக்குப் போய் அரசியல் புகலிடம் வாங்கிப் போட்டார். இயக்கத்தின் போக்கு பிடிக்கேல்லையாம். செய்யிறது ஒண்டும், வெளியே சொல்லுறது ஒண்டுமாக இருக்குதாம். மிஸ்டர் கருணாகரனுக்கு குடும்பத்தோடு புகலிடம் கிடைத்துள்ளது. ஏதோ ஒரு 'நாடு' என்ற பெயரிலை அவரது இயக்கக்காரர் 'ஏடு' ஒன்று நடத்துகினமாம். அதுவும் அவருக்குப் பிடிக்கேல்லையாம். தமிழரின் உரிமைக் குரல் என்று முன்பக்கத்தின் கீழே போட்டுவிட்டு, உள்ளே சிலுக்கின் படமோ போடுறது எண்டு கேட்கிறதிலை நியாயம் இருக்குத்தானே?!

தேனகத்தின் வெகுஜனப் பிரதிநிதி ஒருவருக்கு சொந்தமாக ஒரு திரையரங்கு இருக்குதாம். அது பாதிக்கப்பட்டதாகக் கூறி பல கோடி நஷ்ட ஈடாகப் பெறப்பட்டதாம். வெளிநாடு போய் அந்தப் பிரதிநிதி திரும்பிவந்தவர், வெளிநாட்டிலை அந்த கோடிகளை முதலீடு செய்து போட்டு வந்திருக்கிறார் எண்டு தகவல். அதிலை ஒரு கோடியை எண்டாலும் ரெண்டு எழுத்தாருக்கு கொடுத்திருக்கலாம் அல்லோ. வாய்ச் சொல்லில் ஆதரிச்சால் மட்டும் போதுமோ?

வெளிநாடுகளுக்குப் போன முதியவர்களுக்கு அந்த நாட்டுச் சூழல் ஒத்துவரேல்லையாம். வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பி வந்து பொத்தென்று விழுந்து படுக்கும் மகனும், மருமகளும். 'சஸ் புஸ்' என்று ஆங்கிலத்தில் பேசும் பேரப்பிள்ளைகளும். குந்தியிருந்து சுருட்டு பிடிச்சுக் கொண்டு ஊர்புதினங்களை பியச்சு உதறிப்பார்க்க வாய்ப்பில்லாத சூழ்நிலையும்... வாழ்க்கையே வெறுத்தமாதிரி இருக்கினமாம். ஏ.சி வீடுகளுக்கை எப்படிப்பாருங்கோ சுருட்டுப் புகைக்கிறது. மணம் ஒரு மாதிரியாக இருக்குமல்லோ. வெத்திலை துப்பவும் எங்கடை ஊர் முற்றம் மாதிரி அங்கே வந்து வாய்க்குமோ?

எங்கிருந்தாலும் மண்ணை மறக்க மாட்டோம் எண்டு வெளிநாடுகளில் உள்ள எங்கடை ஆக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறது சந்தோசம் தானுங்கோ. ஆனால் பாருங்கோ ரெண்டு எழுத்தார் அடிபட்டுக் கொண்டேயிருக்க வேணும் எண்டு ஒரு சிலர் நினைக்கிறதிலை ஒரு உறுத்தலும் இருக்குது. தங்கடை பிள்ளைகளை நல்ல லெவலுக்குப் படிப்பிச்சுக் கொண்டு, தாங்கள் 'சிலோன் டமிள்ஸ்' எண்டு கொலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளுறதுக்காக இங்கே உள்ள பிள்ளைகள் அடிபட்டு செத்துக் கொண்டிருக்க வேணும் எண்டு நினைக்கிறது பிழையல்லோ. பட்டம் வேண்டாம், பதவி வேண்டாம், வெளிநாடும் வேண்டாம், போய் வா மகனே, மகளே! எண்டு திருப்பி அனுப்பிவைச்ச ஒரு உதாரணம், ஒரே ஒரு உதாரணம் எண்டாலும் யாரும் காட்டினால் நல்லாயிருக்கும்.

வவுனியாவிலை வைத்து சிறுடையினரால் தடுக்கப்படும் ஆட்களிலை அரச அதிகாரிகளும் அடக்கம். யாராயிருந்தா எமக்கென்ன, தமிழராயிருந்தால் சரிதான் எண்டு நோக்காமல், எதை எப்படிச் செய்ய வேண்டும் எண்டு ஒரு பக்குவம் வேண்டாமோ?

ஹைக்கூ பாணியில் ஒரு கண்ணடக்கமான கவிதை. கலகலப்போடு கருத்துச் செறிவும் உண்டுங்கோ.

கோவில் வாசலில்
எச்சரிக்கைப் பலகை;
சாமியார்கள் ஜாக்கிரதை!
(நவதிலக்)

என்ன கைதட்டலாம் போல இருக்குதல்லோ?!



படிப்பகம்

www.padippakam.com



# கருணாநிதி வழங்கிய பணமும் வாங்க மறுத்த பிரபாகரனும்

அரசியல் தொடர்

அற்புதன் ~எழுதுவது

58

### வன்னித் தாக்குதல்கள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் வன்னிப் பிராந்திய தளபதி றேகன்,புலிகள் அமைப்பினரால் கொல்லப்பட்டமை தொடர்பாக சென்றவாரம் விபரித்திருந்தேன்.

அந்தப் பிரச்சனையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈ.பி.ஆர். எல்.எஃப். உறுப்பினர் ஒருவர் பலியானதாக குறிப்பிட்டிருந்தேன். படுகாயமடைந்தார் என்பதே சரியானதாகும்.

றேகன் பலியான பின்னர் வவுனியா தளபதியாக மதன் நியமிக்கப்பட்டார். மன்னார் தளபதியாக சுதர்ஸன் நியமிக்கப்பட்டார்.

இந்த இருவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மக்கள் விடுதலைப் படை (பி.எல்.ஏ) பிரதம தளபதி டக்ளஸ் தேவானந்தாவால் நியமிக்கப்பட்டார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்திய குழுவுக்குள் இந்த நியமனங்கள் தொடர்பாகவும் பிரச்சனைகள் ஏற்பட்டன.

பிரதிநிதிகள் எடுத்துக் கூறினார்கள்.

இலங்கை அரசின் தீர்வு யோசனைகள் இனப்பிரச்சனை தீர்வுக்கு எவ்வகையிலும் சரியாக அமையாது என்றும் விளக்கினார்கள்.

எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர்.

சந்திப்பு முடிந்தவுடன் பத்திரிகையாளர்கள் எம்.ஜி.ஆரைச் சந்தித்தனர்.

எம்.ஜி.ஆர். தனது கருத்தை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.


"இலங்கை அரசின் தீர்வு யோசனை பிரச்சனைக்கு தீர்வாகாது" என்று சொன்னார் எம்.ஜி.ஆர்.

### தலா 50 ஆயிரம்

இக்கட்டத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற மற்றொரு சம்பவமும் நினைவுக்கு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி தனது பிறந்தநாளை முன்னிட்டு ஈழப் போராளி அமைப்புக்களுக்கு நிதி வழங்க முன்வந்திருந்தார்.

நான்கு இயக்க கூட்டமைப்பான ஈழத்



ஆனாலும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் நடவடிக்கைகளில் வெற்றிகரமான கண்ணிவெடித் தாக்குதல்கள் வவுனியாவில்தான் மேற்கொள்ளப்பட்டன.

கண்ணிவெடித் தாக்குதல் தொடர்பாக இந்தியாவின் பயிற்சி முகாம்களில் நன்கு கற்றுக் கொடுக்கப்பட்டன. ஆனாலும் வேறு எந்தப் பகுதியிலும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் கண்ணிவெடித் தாக்குதல்களை நடத்தவில்லை.

வவுனியாவில் ஓமந்தைக்கும் நொச்சிமோட்டைக்கும் இடையே நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 12 இராணுவத்தினர் பலியானார்கள். அதில் ஒரு அதிகாரியும் அடக்கம்.

தேசிய விடுதலை முன்னணியில் உள்ள இயக்கங்களுக்கு நிதி வழங்குவதென்று முடிவு செய்திருந்தார்.

ஒவ்வொரு இயக்கத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபாய்களை வழங்கவும் முன்வந்தார்.

அப்போது புலிகள் தவிர ஏனைய மூன்று இயக்கங்களும் பணக் கஷ்டத்தில்தான் இருந்தன. குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ் அமைப்புக்களது நிலை மிக

மகிழ்வைத் தருகிறது." என்று அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார் பிரபா.

### ரெட்டியின் கருத்து

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக இந்தியாவின் அணுகுமுறை குறித்து இந்து ஆங்கில நாளிதழின் பிரபல விமர்சகர் ஜி.கே.ரெட்டி எழுதிய விமர்சனத்தை முன்னரும் தந்திருந்தேன்.

1985 ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஜி.கே.ரெட்டி எழுதிய விமர்சனம் இது:

"இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்த்து வைத்து, இணக்கத் தீர்வொன்றை ஏற்படுத்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி முயற்சிகளை தொடருகிறார். இந்த நல்லெண்ண முயற்சிகள் நேரானதும், மறைவானதுமான அம்சங்களைக் கொண்டுள்ளன.

காலப் போக்கில் பிரிவினைக்கு வழி வகுக்கக்கூடிய விசேட சலுகைகளை தமிழர்களுக்கு வழங்குமாறு இந்தியா வற்புறுத்தி, அதன்மூலம் நன்மையடைய இந்தியா முயற்சிக்கிறது என்று இலங்கை அரசுக்கு முன்னர் இருந்த சந்தேகம் அகற்றப்பட்டுவிட்டது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவோ அல்லது அவரது ஆலோசகர்களோ அவ்வாறான அச்ச உணர்வு நிலைப்பாட்டில் இல்லாமலிருப்பதுதான் சாதகமான நேர் அம்சம்.

அதேவேளை தற்போதைய ஐக்கியப்பட்ட அரசியலமைப்பு வரையறைக்குள்ளாகவேனும் தமிழர்களின் சட்டபூர்வ அபிலாசைகளை பூரணப்படுத்தக் கூடிய வகையில் கணிசமான அதிகாரங்களுடன் பிரதேச சுயாட்சி ஒன்றை வழங்கும் நிலையில் இலங்கை அரசு இல்லை என்பதையும் இந்தியா உணர்ந்து வருகிறது.

அரசியல் தீர்வு தாமதப்படுத்தப் படுவதாலும், இனப்பிரச்சனைக்கு விரைவான தீர்வொன்று கிட்டும் என்ற இந்தியாவின் முன்னைய எதிர்பார்ப்பு இப்போது வெகுவாகத் தளர்வடைந்துவிட்டது." என்று எழுதியிருந்தார் ஜி.கே.ரெட்டி.

முயற்சியில் குதித்தார் தொண்டமான். ஈழப் போராளி அமைப்புக்களையும், இந்திய அரசையும் சந்திக்கப் புறப்பட்டார்.

புறப்படமுன்னர் ஜனாதிபதி ஜே.ஆரை சந்தித்துப் பேசினார் தொண்டமான். 'ஓல் த பெஸ்ட்' என்று வாழ்த்தியனுப்பினார் ஜே.ஆர்.

சென்னையில் ஈழப் போராளி அமைப்புக்களின் தலைவர்களை சந்திக்க முயன்றார் தொண்டமான்.

பிரபாகரன் சந்திக்க மறுத்துவிட்டார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பும் அவரைச் சந்திப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

ரெலோ, புளொட், ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினார்.

இந்தியாவுக்கு செல்லும் போதே கையோடு ஒரு யோசனையையும் கொண்டு சென்றிருந்தார் தொண்டமான்.

தேசிய இணக்க அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதுதான் அமைச்சர் தொண்டமானின் யோசனையின் அடிப்படையாக இருந்தது.

தமிழர்களுக்கும் அரசில் பங்கிருக்கும். தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய வாய்ப்பும் இருக்கும் என்று தனது யோசனை தொடர்பாக விளக்கமளித்தார் தொண்டமான்.

நாடு திரும்பிய தொண்டமானை பத்திரிகையாளர்கள் சந்தித்தனர்.

"தீவிரவாத அமைப்புக்கள் தமிழீழக் கோரிக்கையில் உறுதியாக இருக்கின்றன." என்று கூறினார்.

"அப்படியானால் உங்கள் யோசனை என்னாகும்?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

அதற்கு அமைச்சர் தொண்டமான் சொன்ன பதில் இது: "சகல தலைவர்களும் இதனை எதிர்க்க முடியாது. இது நீதியான யோசனை. இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான இரு இனங்களுக்கிடையிலான கமிட்டியே எனது யோசனையில் அடங்கியுள்ளது."

அமைச்சர் தொண்டமானின் யோசனை தொடர்பாக சில பத்திரிகைகளில் பெரிதாகச் செய்திகள் வந்தன.

போராளி அமைப்புக்களோ அல்லது இலங்கை, இந்திய அரசுகளோ அதனை முக்கியத்துவப் படுத்தவில்லை.

### யாழ் சென்ற அகதிகள்

1985 அக்டோபரில் திருக்கோணமலையில் இருந்து வெளியேறிய தமிழ் அகதிகள் முல்லைத்தீவில் தங்கியிருந்தனர்.

அங்கிருப்பதும் பாதுகாப்பில்லை என்று கருதி படகுகள் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு சென்றனர்.

திருக்கோணமலை, நிலாவெளி, சாம்பல் தீவு, கன்னியா போன்ற பகுதிகளில் இருந்து 25 குடும்பங்கள் படகுகளில் சென்று இறங்கினார்கள். யாழ்ப்பாணத்தில் கச்சேரி நல்லூர் வீதியில் அவர்களுக்கான அகதி முகாம் அமைக்கப்பட்டது.

தமிழ் மகளிர் பேரவையினரால் அந்த அகதி முகாம் நடத்தப்பட்டது.

தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் இவைதான்.

"1983 இல் வவுனியா பகுதிப் பொறுப்பாளராகவும், கழக (புளொட்) நிருவாகப் பொறுப்பாளராகவும் தற்காலிகமாக பொறுப்பு வகித்தார் சந்ததியார்.

தனது பொறுப்புக்களை சாதகமாகப் பயன்படுத்தி வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அடிக்கடி வந்து செல்லும் விமானப் படை ஜீப் வண்டியைத் தாக்கத் தோழர்கள் சிலருக்குக் கட்டளையிட்டார்.

இத்தாக்குதலால் அரசியல் ரீதியிலும், இராணுவரீதியிலும் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று தெரிந்தும் தான் தோன்றித்தனமாகக் கட்டளையிட்டார்.

தளத்தில் நிதிப் பொறுப்பாளராக இருந்த காலத்தில் அவரது பொறுப்பில் இருந்த பல பெறுமதி வாய்ந்த பொருள் இழப்புகளுக்கு சரியான காரணங்கள் தரவில்லை.

தன்னோடு முரண்பட்ட தோழர்களை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று சித்திரவதை செய்தார்.

டேவிட் போன்றவர்களது உதவியோடு கேசவன் போன்றவர்களை பயன்படுத்தி பயிற்சி முகாம்களில் குழப்பம் விளைவித்தார்."

### குற்றச்சாட்டு

மற்றொரு பாரதூரமான குற்றச்சாட்டும் சந்ததியார் மீதும், வேறு சில உறுப்பினர்கள் மீதும் சுமத்தப்பட்டது.

சந்ததியாரும், டேவிட்டும் சேர்ந்து இயக்கத்தின் திட்டம் அடங்கிய இராணுவ வரைபடம் ஒன்றை சி.ஐ.ஏ.ஆள் ஒருவருக்கு கொடுத்துவிட்டனர் என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு.

புளொட் தலைமையால் சி.ஐ.ஏ. என்று கூறப்பட்டவர் வேறுயாருமல்ல, தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் தான்.

## தொண்டமானின் 'தேசிய இணைக்க அரசு'

### ஆறாம் கட்டையில்

வவுனியா-மன்னார் வீதியில் பம்பைமடுவிற்கும், பூவரசங்குளத்திற்கும் இடையில் இருக்கும் பகுதி 6ம் கட்டை.

அங்கு இராணுவ அணியொன்று சுற்றிவளைப்பிற்காக வந்து கொண்டிருந்தது.

இராணுவத்தினர் அங்கு வரும் தகவல் முன்கூட்டியே ஈ.பி.ஆர்.எல்.எஃப். மக்கள் விடுதலைப் படையினருக்கு கிடைத்துவிட்டது.

நிலக் கண்ணிவெடிகளை புதைத்து விட்டு காத்திருந்தனர் மக்கள் விடுதலைப் படையினர்.

அதிகாலை நேரம் என்பதால் இராணுவத்தினர் வெகு அலட்சியமாக தொடராக வந்து கொண்டிருந்தனர்.

நிலக்கண்ணிகள் வெடித்தன. டிரக்டர் வண்டியில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் பலியானார்கள்.

மொத்தம் 24 இராணுவத்தினர் பலியானார்கள். பத்துப் பேர்வரை காயமடைந்தனர்.

மதன், அசோக், ஸ்ரீதர், ரகு ஆகியோர் இத்தாக்குதல்களில் முன்னணியில் நின்று பங்குகொண்டனர்.

மதன், அசோக் இருவரும் தற்போது ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். இராமேஸ்வரன் (மதன்), மு. சந்திரகுமார் (அசோக்).

ஸ்ரீதர் ஈ.பி.டி.பி. உறுப்பினராக இருந்து 1987 இல் புலிகளால் கொல்லப்பட்டார். ரகுவும் இராணுவ நடவடிக்கை ஒன்றில் பலியானார்.

திம்பு பேச்சுவார்த்தைகள் முறிந்ததையடுத்து மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்பிய இந்திய அரசு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் உதவியை நாடியது.

நான்கு இயக்கக் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF), தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய அமைப்புக்களைச் சந்தித்து எம்.ஜி.ஆர். பேச்சு நடத்தினார்.

போர் நிறுத்தம் மீறப்பட்டதற்கு இலங்கை அரசுதான் பொறுப்பு என்பதை எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொள்ளும் வகையில்

மோசமாக இருந்தது.

மூன்று இயக்கங்களும் கருணாநிதி வழங்க முன்வந்த நிதியைப் பெறுவதற்கு உடனடியாக சம்மதம் தெரிவித்துவிட்டன.

புலிகள் அமைப்பினர் மட்டும் "நன்றி, பணம் வேண்டாம்" என்று முகத்திலடிப்பது போல சொல்லிவிட்டனர்.

அந்தச் செய்தி தமிழகப் பத்திரிகைகளில் வெளிவந்தபோது கலைஞர் கருணாநிதிக்கு பெரிய சங்கடமாகிவிட்டது.

புலிகள் அமைப்பினரும், அதன் தலைவர் பிரபாகரனும் தன்னை அவமதித்து விட்டதாகக் கருதினார் கலைஞர் கருணாநிதி.

ஒரே ஒருவருக்கு மட்டும் அந்தச் செய்தி செவிக்கு இதமானதாக இருந்தது. அவர்தான் எம்.ஜி.ஆர்.

### பிரபாவின் கணக்கு

எம்.ஜி.ஆர். அறிந்தால் மகிழ்வார் என்று தெரிந்துதான் கலைஞர் கருணாநிதி கொடுக்க முன்வந்த பணத்தை வாங்க மறுத்தார் பிரபாகரன்.

எம்.ஜி.ஆரிடம் ஒரு குணம் இருந்தது. தன்னோடு நெருக்கமாக இருப்பவர்கள் தனக்கு விரோதமான முகாமுடன் தொடர்பு வைத்திருப்பதை விரும்பமாட்டார்.

பிரபாகரனை தனக்கு நெருக்கமாக வைத்துக்கொள்ளவே எம்.ஜி.ஆர். விரும்பினார். பிரபாவும் எம்.ஜி.ஆரின் குணமறிந்து நடந்து கொண்டார்.

கலைஞர் கருணாநிதி தரப்போகும் 50 ஆயிரத்தை வாங்கினால், எம்.ஜி.ஆர் மூலமாகக் கிடைக்கும் நன்மைகளை இழக்க வேண்டியேற்படும் என்பதும் பிரபா போட்ட கணக்கு.

பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பிரபாகரனுக்கு எம்.ஜி.ஆர். வழங்கிய பல கோடி ரூபாய்கள் பிரபாவின் கணக்கை மெய்ப்பித்தன.

சின்ன மீனைப் போட்டு விட்டு பெரிய மீனைப் பிடித்துக் கொண்டார் பிரபா.

எம்.ஜி.ஆர். மறைந்த பின்னர் தமிழக முதல்வராக தேர்தலில் வென்றார் கருணாநிதி.

உடனடியாக பிரபா ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்தார்.

"உலகத் தமிழர்களது தலைவரான தாங்கள் தமிழக முதல்வராகியிருப்பது

### கட்டாய ஆள் சேர்ப்பு

"யுத்தத்தில் வெற்றியீட்ட ஒரு இலட்சம் இராணுவத்தினர் தேவை. இப்போது இருப்பதோ ஆறாயிரம் பேர்தான்." என்று 1985 அக்டோபரில் கூறியிருந்தார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி.

இதன்பின்னர்தான் 1985 அக்டோபர் மாதம் இலங்கைப் பாராளுமன்றத்தில் துணைப்படைக்கு கட்டாய ஆள்திரட்டும் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது.

அந்த சட்டமூலப்படி துணைப்படையில் சேர மறுக்கும் ஒருவர் குற்றவாளியாகச் கருதப்பட்டு 4 வருடங்களுக்கு குறையாத சிறைத் தண்டனை பெறுவார்.

பாராளுமன்றத்தில் அந்த சட்டமூலத்தை விளக்கி உரையாற்றியவர் ரணில் விக்கிரமசிங்கா. அப்போது இளைஞர் விவகார வேலைவாய்ப்பு, கல்வி அமைச்சராக பதவி வகித்தார் ரணில்.

"பேச்சுவார்த்தைகளால் பயன் இல்லாமல் போகுமானால், இராணுவத்தின் உதவியுடன் பிரச்சனைக்கு தீர்வு காண நேரும்" என்று பாராளுமன்றத்தில் அறிவித்தார் ரணில்.

கட்டாய ஆள் சேர்ப்பு சட்ட மூலத்தை சிறீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிக்கவில்லை. விவாதத்தில் பங்கு கொள்ளாமல் சபையை விட்டு வெளியேறினார்கள்.

பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான சிங்கள இனவாதிகளது வாயை அடக்கும் நோக்கத்துடனும் கட்டாய ஆள் சேர்ப்பு சட்ட மூலத்தை ஜே.ஆர் விட்டுப் பார்த்திருக்கலாம் என்று நம்பப்பட்டது.

சண்டை நடந்தால் எல்லோரும் பங்குகொள்ள வேண்டியிருக்கும் என்று மிரட்டுவது போன்ற நடவடிக்கையே அது என்றும் கூறப்பட்டது.

### தொண்டாவின் முயற்சி

திம்பு பேச்சுவார்த்தை முடிவடைந்த பின்னர் சமரச முயற்சிகளை தொடர முன்னின்றவர்களில் ஒருவர் தொண்டமான்.

இந்திய இராஜதந்திர வட்டாரங்களும் அமைச்சர் தொண்டமானை தட்டிக்கொடுத்திருந்தன. ஜே.ஆர். ஜயவர்த்தனாவும் பச்சைக் கொடி காட்டியிருந்தார்.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அந்தக் காலகட்டத்தையும், தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேறுவதையும் ஒப்பிட்டு நோக்கினால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலை போலவன்றோ இருக்கிறது.

### உட்பிரச்சனைகள்

இக்காலகட்டத்தில் ஈழப் போராளி அமைப்புக்களுக்குள் நடந்துகொண்டிருந்த பிரச்சனைகளையும் ஆங்காங்கே தொட்டுக் காட்டவேண்டியிருக்கிறது.

புளொட் இயக்க முக்கியஸ்தர் சந்ததியாரும் வேறு சிலரும் புளொட் தலைமையால் கொல்லப்பட்டதையடுத்து பலத்த விமர்சனங்கள் எழுந்தன.

'புளொட்டின் தலைமைப் பீடமே எமது தோழர்கள் எங்கே?' என்று யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

குற்றச் சாட்டுகளுக்கு விளக்கமளிப்பது போல புளொட் ஒரு பிரசுரம் வெளியிட்டிருந்தது.

அதில் சந்ததியார் தொடர்பாக புளொட்

புளொட் இயக்கத்தில் தலைமையின் வெறுப்புக்கு உள்ளானோரில் மற்றொரு முக்கியஸ்தர் டொமினிக். கேசவன் என்றும் அழைக்கப்பட்டார்.

புளொட் பயிற்சி முகாம்களில் அரசியல் வகுப்பெடுப்பதில் முன்னணியில் இருந்தவர் டொமினிக்.

அப்போது அவர் எடுத்த வகுப்புக்களில் கூறிய கருத்துக்கள் தலைமைக்கு பிடிக்கவில்லை.

ஒவ்வொரு பயிற்சி முகாமிலும் புளொட் தலைவர் உமா மகேஸ்வரனுக்கு விசுவாசமான உளவுப் பிரிவினர் இருந்தனர்.

அவர்கள் மூலமாக பயிற்சி முகாம்களில் நடப்பனவற்றையெல்லாம் அறிந்துவிடுவார் உமா.

பாரதூரமானவர்கள் என்று கருதப்படும் உறுப்பினர்களுக்கு பல்வேறு தண்டனைகள் வழங்கப்படும்.

அதில் ஒன்று உழன்றி. அது என்ன உழன்றி?

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வடக்கே அமைதியை வேண்டிய இனம் மீண்டும் அமைதியாக வாழ நினைப்பதில் என்ன குறை?

அலசுவது – இராஜதந்திரி

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள நினைப்பதில் என்ன குறை?"
இதுவே 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரசாரங்க்ள் வடபகுதியில் களை கட்டியிருந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் முடிக்கப்பட்ட பெரும் பிரசார வாசகமாக இருந்தது.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி மீது வடக்கு-கிழக்கு மக்கள் அபரிமிதமான விசுவாசத்தைக் கொண்டிருந்தன.

"ஆண்டபரம்பரைக் கதை மட்டுமல்ல; மரம்பழுத்தால் வௌவால் வரும். வடக்கு-கிழக்கு எல்லைகளைப் போட கதியால்களை வெட்டுங்கள். பொறுத்தது போதும் பொங்கி எழு தமிழா" என்ற பிரசாரக் கணைகளும் அன்று வடக்கு-கிழக்கு தமிழர்களின் மனதைத் துளைத்திருந்தன.

எனவே போராட்டம், போராட்டம் என்று குமுறி, வீட்டுக்கு வீடு இளைஞர்களின் மனதில் தீவிரவாத உணர்வலைகளை உண்டுபண்ணிய தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று அதன் தொனியையே மாற்றியிருக்கின்றது.

அத்துடன் கடந்தவாரம் ஜனாதிபதியை சந்தித்த தமிழ் அரசியல் கட்சிகளில் இடம் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இன்றைய நிலையில் தம்மால் எதுவுமே செய்ய முடியாது, அரசாங்கமே போர் நிறுத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென ஜனாதிபதியிடம் மன்றாடியிருந்தனர்.

எனவே, ஆண்டபரம்பரை மீண்டும் ஆள நினைப்பதில் என்ன குறை, என்ற வாசகத்துக்குப் பதிலாக, "யாழ்குடா நாட்டில் அமைதியாக வாழ்ந்த மக்கள் மீண்டும் அங்கே அமைதியாக வாழ நினைப்பதில் என்ன குறை?" என்று கேட்பதே தற்போது பொருத்தமானதாக இருக்கின்றது.

மக்கள் படும் அவஸ்த்தை என்பது வடக்கே கட்டு மீறிப் போயுள்ளது. இந்நிலையில் யாழ்குடாநாட்டிலிருந்தும் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வன்னிப் பகுதியில் காணிகளை எல்.ரி.ரி.ஈ.யினர் ஒதுக்கிக் கொடுத்து, அங்கு அவர்களைக் குடியேறச் செய்து வருகின்றனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குடியிருக்க வீடுகளும், விவசாயம் செய்ய காணி நிலங்களும், கல்வி பயில கல்விக்கூடங்களும், இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாடு இன்று எவருமே இல்லாத சூன்யப் பிரதேசமாக இருப்பதுடன், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை இன்று பெரும் அவலத்துக்குள்ளாகியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

மார்கழி மாதக் குளிர் காலத்தில் அதிகாலையில் துயிலெழுந்து 'திருவெம்பாவை' ஊர்வலங்களை வடக்கே நடத்திய காலங்களும் உண்டு. பெண்கள், சிறுவர்கள் இறைவன் துதி பாடி காலாற அதிகாலைப் பொழுதில் நடந்து திரிந்த வீதிகளில் இன்று வடக்கே இராணுவ வாகனங்கள் ஊர்ந்து திரிகின்றன.

அரசியல் தீர்வு, அரசியல் அணுகுமுறைகள் என்பன எவ்விதத்திலும் தற்போது சாத்தியப்படாத தருணத்தில் வடபகுதி மக்கள் அகதிகளாக அடங்கி ஒடுங்கிப் போயிருக்கக் காணப்படுகின்றனர்.

எனவே 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்' என்பது போல மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி அவர்களை நிதானமாகச் சிந்திக்கச் செய்யும் பட்சத்திலேயே ஆக்கபூர்வமான அரசியல் அணுகுமுறைகளை எதிர்பார்க்கமுடியும்.

இன்று கொழும்பில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளும் இருக்கின்றன. இக்கட்சிகள் அரசியல் அணுகுமுறைகள் குறித்து பலதரப்பட்ட வகையில் குரலெழுப்பிய போதிலும் எதுவித பயன்களும் கிடைப்பதாக இல்லை.

கடந்தவாரம் ஜனாதிபதி சந்திரிகாவைத் தமிழ் அரசியல் கட்சிகள் சந்தித்தபோது போர்நிறுத்தமொன்றைக் கொண்டு வரும்படி ஜனாதிபதியிடம் அவை கோரியிருந்தன.

ஆனால், "எல்.ரி.ரி.ஈ.யினரை பேச்சு வார்த்தைகளுக்கு உடன்படச் செய்யும்படி தமிழ் அரசியல் கட்சிகளே வலியுறுத்தவேண்டும்" என்று ஜனாதிபதி பதிலளித்திருந்தார்.

இக்கட்டத்தில் ஜனாதிபதியின் இப்பதிலும் சற்று முரண்பாடானதாகவே இருக்கின்றது. ஏனெனில் கடந்த ஆண்டில் எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுக்களை ஆரம்பித்த போதும், பின்னர் அவர்களுடன் மோதல்களில் குதித்தபோதும் ஜனாதிபதி எவ்வளவு தூரம் தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசனை நடத்தியிருந்தார் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

எல்.ரி.ரி.ஈ.ஒரு பலம் வாய்ந்த அமைப்பு; எனவே அதனுடனேயே எவ்வகையிலேனும் ஒரு உடன்பாடு செய்யப்படவேண்டுமென்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருந்து வந்தது.

ஆனால் தற்போது எல்.ரி.ரி.ஈ.யினரை யாழ்ப்பாணத்தில் பின்வாங்கச் செய்ததன் மூலம் அரசு தனது ஆளுமையை வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாகப் பலப்படுத்தியிருக்கின்றது.

எனவே அரசு தனக்கு விரும்பியதை, தான் விரும்பிய நேரத்திலேயே செய்யும் நிலைப்பாட்டை முன்பைவிட பல மடங்கு உறுதியாகக் கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.


சர்வதேச அரங்கில் இலங்கையின் பிரச்னையை ஒத்த பிரச்னைகள் பெரும்பாலும் அரசியல் ரீதியாகவே அணுகப்பட்டுவருவதை காணமுடிகின்றது.

ஆயுதப் போராட்டங்கள் யாவும் உறுதியான அரசியல் பின்னணிகளுடனேயே இடம் பெறுவதையும் நோக்க முடிகின்றது.

இந்நிலையில் அரசாங்கம் வடபகுதிமக்களின் இன்னல்களைக் களைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கைகள் விடப்படும் அதேசமயம், எல்.ரி.ரி.ஈ.யினரும் வடபகுதி மக்களை மீள அவர்களது இடங்களில் குடியமர்த்த வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

எந்த மண்ணைக் காப்பற்ற, எந்த மண்ணின் மக்களாக வாழ வடக்கு-கிழக்கு மக்கள் போராடுகிறார்களோ, அந்த மண்ணில் அவர்கள் உறுதியாக வேரூன்ற வேண்டியதே இன்று இன்றியமையாததாகின்றது.

எல்.ரி.ரி.ஈ.யினர் முழு அளவில் தம்மை ஆயுதபாணிகளாகவே வைத்துள்ளார்கள்.



# இராணுவ அழுத்தங்களை அகற்ற அரசியல் கதவுகளைத் திறக்க வேண்டிய தருணம்!



ஆனால் அவர்களது போராட்டம் விரிவான அரசியல் தீர்வை வேண்டியதாகவே இருக்கின்றது.

"வண்ணக் கிளி பறந்து சென்றபின் தங்கக் கூடு இருந்து என்ன பயன்? " என்று பழமொழி ஒன்றுண்டு. எனவே யாழ்ப்பாணத்தில் மக்கள் இல்லாத நிலையில் அப்பூமி வெறுமனே ஒரு சுடுகாடு போன்றதாகவே இருக்கும்.

இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளில் உலகில் எங்கும், எப்போதும் ஏற்ற, இறக்கங்கள் இருந்தே வந்துள்ளன.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதை கொழும்பிலுள்ள ஆட்சியாளர்கள் ஒரு பெரு வெற்றியாகக் கொண்டாடலாம். ஆனால் இவ்வெற்றி ஒரு முக்கிய இராணுவ நகர்வை மேற்கொண்டதன் மூலம் கிடைத்தவெற்றியே தவிர முழு அளவில் எல்.ரி.ரி.ஈ.யினரைத் தோற்கடித்ததன் மூலம் கிடைத்த வெற்றியல்ல.

கடந்தகால நிகழ்வுகளை எடுத்து நோக்குகையில் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை சர்வதேச சமூகம் ஏற்றிருக்கவே செய்தது. ஆனால் அப்போராட்டத்தில் ஏற்பட்ட முறைகேடுகள், சுயநலத் தன்மைகள் என்பனவே அதனை இன்று பலவீனமாக்கியுள்ளன.

எனவே இத்தகைய பின்னடைவுகள் வடக்கு-கிழக்கு தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை எவ்வகையிலும் சிதறடித்து விடக் கூடாது. அத்துடன் அம்மக்கள் இதுவரை காலமும் பறி கொடுத்த உயிர், மற்றும் உடமை இழப்புகள் எவ்வகையிலும் வீணாகிப் போய்விடக்கூடாது!

வடக்கே முன்னேறியுள்ள இராணுவத்தினரை விரைவில் மீண்டும் விரட்டியடிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போவதாக எல்.ரி.ரி.ஈ.யினர் அறிவித்து வருகின்றனர். இதற்காக மீண்டும் அவர்கள் ஆட்சேர்ப்பு, பொருட் சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கே ஆயுதப் படையினரின் உத்வேகம் என்பது பலமானதாகவே இருக்கின்றது. இதுதவிர ஆட்சியாளர்களும் வடக்கே முழு அளவிலான இராணுவ தர்பாருக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளனர்.

இந்நிலையில் அவர்களை இராணுவ ரீதியாக மீண்டும் எதிர் கொண்டு பின்னடைய வைப்பதென்பது ஒரு நீண்ட போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதாகவே இருக்கும்.

**யாழ்ப்பாணத்திலிருந்து குடிபெயர்ந்துள்ளமக்கள் ஒரு நேர உணவுக்குக் கூட பெரும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் அவர்களால் ஒரு ஆயுதப் போராட்டத்துக்கு மீண்டும் முகங்கொடுக்க முடியுமா என்பது சந்தேகமே.**

யாழ்ப்பாணத்திலிருந்து குடிபெயர்ந்துள்ள மக்கள் ஒரு நேர உணவுக்குக் கூட பெரும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் அவர்களால் ஒரு ஆயுதப் போராட்டத்துக்கு மீண்டும் முகங்கொடுக்க முடியுமா என்பது சந்தேகமே.

இதேவேளை பேரினவாத சக்திகளுக்கெதிராக இதுவரை காலமும் இராணுவ ரீதியாக எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்ட போராட்டத்தை எவரும் குறைவாக மதித்து விட முடியாது.

அப்போராட்டங்களில் குறைகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டதற்கு அவர்களே பொறுப்பாளிகள் தவிர, யாழ்ப்பாண மக்களோ அல்லது வடக்கு-கிழக்கு மக்களோ அப்போராட்டத்துக் கெதிராக செயற்பட்டார்கள் என்று கூறுவதற்கில்லை.

எனவே எல்.ரி.ரி.ஈ.யினர் இராணுவ ரீதியாக பின்னடைவைக் கண்டாலும், அவர்கள் சார்ந்துள்ள அரசியல் நிலைப்பாடு அனைத்து வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கும் பொதுவானதாகவே இருக்கின்றது.

அத்துடன் வடக்கு-கிழக்கில் ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதானால் எல்.ரி.ரி.ஈ.யினருக்கும் அது ஏற்புடையதாக இருக்கவேண்டும். ஏனெனில் அவர்களின் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள உயிரிழப்புகள் எண்ணிலடங்காதவை.

எனவே வடக்கே இராணுவ அழுத்தங்களை அகற்றுவதற்கு எல்.ரி.ரி.ஈ.யினர் அரசியல் நடவடிக்கைகளையும் ஓர் ஆயுதமாகப் பாவிக்கலாம்.

ஒரு கதவு அடைபட்டால் மறு கதவால் நுழைவதே புத்தி. எனவே இன்று வடக்கு-கிழக்கு யுத்தத்தைப் பொறுத்தவரையிலும் அரசியல் அணுகுமுறைகள் என்ற கதவைத் திறப்பதே தற்போது ஒரு தருணம் அறிந்த நடவடிக்கையாக அமைய முடியும்.

இல்லையேல் மடைதிறவாத வெள்ளம் போல வடக்கு-கிழக்குப் பிரச்னையும் நாற்றமெடுத்து சாக்கடை நீராக மாறுவதே திண்ணமாகிவிடும்.



படிப்பகம்

www.padippakam.com

15

வெடி

# தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்




டூ ரௌலியர் இல்லத்தில் கார்லோஸ் சுட்டது நான்கு பேரை.

மூவர் பொலிஸ்காரர்கள். ஒருவர் கார்லோஸின் பொறுப்பாளர் மௌக்கார்பெல்.

துப்பாக்கிச் சூடு பட்ட நான்கு பேரும் தரையில் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை வெறித்த விழிகளோடு நோக்கினான் கார்லோஸ்.

தனது கைத்துப்பாக்கியை இடுப்பில் செருகிக்கொண்டான்.

கார்லோஸ் சுடத்தொடங்கியபோதே மரியா உள்ளே ஓடிப்போய் அறையைச் சாத்திக்கொண்டு விட்டாள்.

அவள் நன்றாகப் பயந்துபோய் இருக்கிறாள். இப்போது போய் சமாதானம் செய்து கொண்டிருக்க முடியாது.

இப்போது தப்பித்தாக வேண்டும். இனித்தான் கார்லோஸ் யார் என்று உலகத்துக்கே தெரியப்படுத்த வேண்டும்.

டூ ரௌலியர் இல்லத்தின் பின்வாயில் கதவு வழியாக கார்லோஸ் வெளியேறி தெருவில் இறங்கியபோது, நான்கு பேரைச் சுட்டுத்தள்ளியதற்கு அவன் வருந்தவும் இல்லை. பதறவும் இல்லை. பயம் கொள்வும் இல்லை; என்பது அவனது நிதானமான நடையில் தெரிந்தது.

சில தூரம்தான் கார்லோஸ் நடந்திருப்பான். எதிரே பொலிஸ் கார் ஒன்று சைரன் அடித்தபடி வந்து கொண்டிருந்தது.

கார்லோஸின் அருகில் மெதுவாகி, காருக்குள் இருந்த அதிகாரி கார்லோஸை கைகாட்டி அழைத்தார்.

கார்லோஸ் நினைத்தான். 'ஓடலாமா?' 'வேண்டாம்'. அருகே போனான். இடுப்பில் கைத்துப்பாக்கி இருக்கிறது. இரண்டு குண்டுகள் பாக்கியிருக்கின்றன.

காரின் ஜன்னலால் தலையை நீட்டி அந்த அதிகாரி கேட்டார், "டூ ரௌலியர் வீதி எங்கே இருக்கிறது?"

கார்லோஸ் அந்த வீதியைக் காட்டினான். 'தாங்யூ' கார் சைரனோடு விரைந்தது. கார்லோஸின் உதட்டில் ஒரு மெல்லிய கோடாக புன்னகை மலர்ந்தது.

தனது காதலி மாஸ்மெலாவின் வீட்டுக்குப் போனான் கார்லோஸ்.

வீட்டுக்குள் போனவன் நேராகச் சென்று கட்டிலில் வீழ்ந்தான்.

மாஸ்மெலா பக்கத்தில் வந்து அமர்ந்து "களைப்பாக இருக்கிறாயே, அலைச்சலா?" என்றாள்.

அதற்கு பதில் சொல்லாமல், "பியர் கொண்டுவா!" என்றான். அவனுக்கும், தனக்குமாய் இரு கோப்பைகளில் நிரப்பிக் கொண்டு வந்தாள் மாஸ்மெலா.

மது உள்ளே போகப் போக கார்லோஸ் மாஸ்மெலாவிடம் சகல உண்மைகளையும் கொட்டித் தீர்த்தான்.

"உனக்கு அதிர்ச்சியாக இல்லையா மாஸ்மெலா? என்றான் கார்லோஸ்.

"இல்லை!"

"ஏன்?"

"முன்னரே தெரியும்! கட்டிலுக்கு அடியில் மறைத்துவைத்திருக்கும் ஆயுதங்களைக் கண்டபோதே உன்னைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டேன். கட்டிலை சுத்தம் செய்யும் போது கண்ணில் பட்டன அனைத்துமே!"

"ஓ... நீ என்னைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறாய் மாஸ்மெலா?"

"நீ திருடனல்ல. கொள்ளைக்காரனல்ல. ஏதோ ஒரு கொள்கை வைத்திருக்கிறாய். அதற்காக தீவிரமாக முயல்கிறாய். நீ சொல்ல விரும்பாதபோது நான் கேட்கக் கூடாது. நட்புக்கும் ஒரு கோடு இருக்கிறது. மீறுவது நாகரீகமில்லை. நீ என்னை விரும்புகிறாய். எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. நீ கெட்டவனல்ல என்று தெரிந்தபின்னர்தான் தொட அனுமதித்தேன். அதனால் நீ என்ன செய்கிறாய் என்று ஆராய்வது எனக்கு அநாவசியம்".

சொல்லிவிட்டு மதுவை உறிஞ்சினாள். கார்லோஸ் மதுக் கோப்பையை வைத்துவிட்டு மாஸ்மெலாவை தன் மார்புமீது சாய்த்துக் கொண்டான்.

விடிந்தபோது கார்லோஸ் உற்சாகமாக எழுந்து தினசரியைப் புரட்டினான்.

எதிர்பார்த்தது போல டூ ரௌலியர் இல்லச் சம்பவம் கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் வந்திருந்தது.

கார்லோஸ் எதிர்பாராத இரு செய்திகளும் இருந்தன.

சுடப்பட்டவர்களில் நான்கு பேருமே இறந்து போனதாக கார்லோஸ் நினைத்தான்.

ஆனால், ஃபிரான்ஸ் உளவுத்துறை அதிகாரி ஹெரான்ஸ் படுகாயத்தோடு தப்பி உயிர் பிழைத்துக் கொண்டார்.

பல பெயர்களில் நடமாடிய தனது புனைபெயரான கார்லோஸ் ஃபிரான்ஸ் பொலிசாருக்கு இதுவரை தெரியாது என்றே கார்லோஸ் நினைத்துக் கொண்டிருந்தான்.

அந்த நினைப்பைத் தவறாக்கியது பத்திரிகைச் செய்தி.

"கார்லோஸ் அன்டிரியாஸ் மாட்டின்ஸ் என்று பல பெயர்களோடு நடமாடும் பெரு நாட்டு இளைஞன்தானே கொலையாளி என்று சந்தேகம்" என்று சொன்னது பத்திரிகைச் செய்தி.

தினசரியை மடித்துப் போட்டுவிட்டு சில கடிதங்களை மளமளவென்று எழுதி முடித்து, தொலைபேசியில் சிலரோடு பேசிவிட்டு, இறுதியாக இலண்டனில் உள்ள நடியாவுடன் நேரடியாகவே பேசினான்.

"ஹலோ நீ எங்கே இருக்கிறாய்? நான் இங்கு தனியாக இருக்க ஒரே சலிப்பாக இருக்கிறது. நீ அருகில் இருந்தால் பொழுது போவதே தெரியாது." என்றாள் நடியா.

"வருகிறேன்!"

"எப்போ?"

"நெருக்கடியில் இருக்கிறேன்"

"நெருக்கடியா? யாரையாவது புதிதாக கொத்திக் கொண்டுவிட்டாயா டியர்?"

"ஜோக்கடிக்காதே நடியா. நேரில் சொல்கிறேன். முதலில் பங்களாவை காலி செய். வேறு வீடு பிடி. எனது படம் இருக்கிறதல்லவா? உடனடியாக ஒரு கடவுச்சீட்டு ஏற்பாடு செய்துவை. நான் சொல்லும் முகவரிக்கு அதை அனுப்பு!"

நடியா முகவரியைக் குறித்துக் கொண்டாள். போனை வைக்கும் போது கேட்டாள்:

"என்ன நெருக்கடி என்று சொல்ல மாட்டாயா?"

"இன்றைய தினசரிகளைப் பார்க்கவில்லையா?

"இல்லை!"

"பார்; தெரியும்."

போனை வைத்துவிட்டு தினசரியை விரித்தாள். இலண்டன் பத்திரிகைகளும் ஃபிரான்ஸ் சம்பவத்தை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

●–●–●

மௌக்கார்பெல் கொல்லப்பட்ட செய்தியறிந்து தளபதி வாடி ஹாட்டாட் கொதித்துப் போனார்.

மௌக்கார்பெல், தளபதி வாடி ஹாட்டாட்டின் நம்பிக்கையான ஆள். அவனை மலையாக நம்பியே ஐரோப்பிய நடவடிக்கைகளுக்கு திட்டமிட்டார் வாடி ஹாட்டாட்.

பத்திரிகைச் செய்திகள் மூலமாக கார்லோஸ்தான் மௌக்கார் பெல்லை கொலை செய்தான் என்பது தெரிந்தது.

இதற்கிடையே பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணிக்குள் (பி.எஃப்.எல்.பி) பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தன.

வாடி ஹாட்டாட்டின் அணுகுமுறைகள் டாக்டர் ஜோர்ஜ் கபாசுக்குப் பிடிக்கவில்லை.

தலைவருக்கும், தளபதிக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையில் பி.எஃப்.எல்.பி. இரண்டாக உடைந்தது.

தளபதி வாடி ஹாட்டாட் தனியாகப் பிரிந்து மக்கள் முன்னணி (பி.எஃப்) என்ற பெயரில் இயங்கத் தொடங்கினார்.

பி.எஃப் இயக்கத்தின் உயர்மட்டக் குழு கூடி கார்லோஸ் தொடர்பாக ஆராய்ந்தது.

"மரணதண்டனை விதிக்க வேண்டும். அதைவிடக் குறைந்த பட்ச தண்டனைக்கு இடமேயில்லை." என்பது பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயம்.

தளபதி வாடி ஹாட்டாட் அந்த முடிவுக்கு உடன்பட்டார்.

கார்லோஸை எப்படியாவது தொடர்பு கொண்டு தந்திரமாக அழைக்கும் பொறுப்பை வாடி ஹாட்டாட் ஏற்றுக் கொண்டார்.

♥ ♥ ♥

ஃபிரான்ஸ் பத்திரிகைகள் கார்லோஸ் யார் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தன.

மௌக்கார்பெல்லிடம் கைப்பற்றியிருந்த ஆவணங்களைப் பற்றி ஃபிரான்ஸ் பொலிஸ் பத்திரிகைகளுக்கு சொல்லியிருந்தது.

அதனால் கார்லோஸ் பற்றிய பல விபரங்களும் வெளியாகின.

டூ ரௌலியர் இல்லத்தில் கார்லோஸ் மறைத்து வைத்திருந்த போலிக் கடவுச் சீட்டுகளும் கைப்பற்றப்பட்டுருந்தன.

கார்லோஸின் புகைப்படத்தோடு பலநாட்டு கடவுச் சீட்டுக்கள் காணப் பட்டன.

உண்மையாகவே கார்லோஸ் எந்த நாட்டவன்? "பெரு' நாட்டவன் என்பதும் பொய். அவன் ஒரு லெபனான்காரன்" என்றது ஒரு பத்திரிகை.

"அவன் ஒரு பாலஸ்தீனியன்" என்றது மற்றொரு பத்திரிகை.

ஒரே நாளில் சர்வதேச அளவில் கார்லோஸின் படமும், பெயரும் பிரபலமானது.

"கார்லோஸ் எங்கே?" பத்திரிகைள் கேள்வி எழுப்ப, ஃபிரான்ஸ் உளவுத்துறையும், பொலிசாரும் சல்லடைபோட்டுத் தேடிக்கொண்டிருக்க,

கார்லோஸ் ஃபிரான்ஸ் விமானநிலையத்தில் இலண்டன் செல்ல தயாராகிக் கொண்டிருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஃபிரான்ஸ் பொலிசும் சுறுசுறுப்பாக இருக்காது என்று கார்லோஸுக்கு தெரியும்.

விமானநிலைய அதிகாரிகளும் எப்போதடா வீட்டுக்குப் போகலாம் என்று சோம்பலோடு இருப்பார்கள். கூர்ந்து கவனிக்க மாட்டார்கள்.

அதுதவிர, தேடப்படும் ஒருவன் துணிந்து விமானநிலையத்திற்கு வர மாட்டான் என்றே நினைப்பார்கள்

விமானத்திற்காக காத்திருக்கும்போது தனது முகத்தை மறைத்துக்கொள்ள பத்திரிகை ஒன்றை விரித்துப் பிடித்துக் கொண்டான்.

அந்தப் பத்திரிகையிலும் கார்லோஸ் பற்றிய செய்தி இருந்தது.

"கார்லோஸ் எங்கிருக்கிறான் என்றே தெரியவில்லை" என்று பொலிஸ் கையை பிரிக்கிறது.

"அவன் ஒரு மாயாவி. தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான் என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள். எங்கிருந்தாலும் சரி, அவன் இப்போது ஃபிரான்சில் இருக்கமாட்டான் என்று நம்பப்படுகிறது."

இலண்டன் செல்லும் விமானம் தயாரானது.

கார்லோஸ் தனக்குள் சிரித்துக் கொண்டான். பையோடு எழுந்தான், முதுகுப்பக்கமிருந்து ஒரு பெண்குரல், "கார்லோஸ் நில்" என்று சொன்னது. (தொடர்ந்து வரும்)

---

# ஹலோ டாக்டர்

## முகத்தை மாற்றலாம்

"வணக்கம் டாக்டர். இன்று கேள்விகள் சற்றுக் கனமாக இருக்கும். பரவாயில்லையா?"

"பரவாயில்லை, பீடிகை போடுவதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது."

"வேறொன்றுமில்லை. பிளாஸ்டிக் சர்ஜரி பற்றி இன்று கேட்கப்போகிறேன். முதல் கேள்வி ரெடி. பிளாஸ்டிக் சர்ஜரி என்றால் என்ன?"

"பிளாஸ்டிக் சர்ஜரி என்பது ஒட்டு அறுவைச் சிகிச்சை. விபத்துக்களால் சிதைந்து போன உடலின் பாகங்களை சரி செய்து கொள்ள உதவுகிறது."

"ஸ்ரீதேவிக்கு மூக்கைச் சரிப்படுத்தியதற்கும் விபத்துக்கும் என்ன சம்பந்தம் டாக்டர்?"

"அது பிளாஸ்டிக் சர்ஜரியில் அழகு படுத்தும் சிகிச்சை வகையைச் சேர்ந்தது. முகத்திலுள்ள சுருக்கங்களை நீக்கவும் முடியும். பிளாஸ்டிக் சிகிச்சையில் பல பிரிவுகள் வந்துவிட்டன. தலை, கழுத்து அறுவைச் சிகிச்சை. தீப்புண் சிகிச்சை. முக அறுவைச் சிகிச்சை என்று பல பிரிவுகள் இருக்கின்றன."

"தலை, கழுத்து அறுவைச் சிகிச்சை பற்றி சொல்லுங்கள் டாக்டர்?"

"வாய், தொண்டை, கண், காது போன்ற இடங்களில் புற்றுநோய் வந்தால் ஆரம்பநிலை என்றால் அதனைக் குணப்படுத்திவிடலாம். ஆனால் முற்றி விட்டதென்றால் அறுவைச் சிகிச்சை மூலம் புற்று நோய் வந்த இடத்தை நீக்கி விடுகிறோம். நீக்கிய இடத்தில் பெரிய துவாரம் விழுந்த மாதிரி ஆகிவிடும். அதை நிரப்ப வேண்டுமானால் பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் செய்ய வேண்டும்.

உதாரணமாக தாடைப் பகுதியில் புற்று நோய் வந்தால் தாடையையே எடுக்க வேண்டியதாகிவிடும். அப்படி எடுத்துவிட்டால் அந்த நோயாளியால் மென்று சாப்பிட முடியாது. அதனால் தாடையை பிளாஸ்டிக் சர்ஜரி மூலமாக மறு வடிவமைப்புச் செய்யலாம்."

"மார்பகப் புற்றுநோய் உள்ள பெண்களுக்கு செயற்கை மார்பகம் உருவாக்குவதாக சொல்கிறார்களே?"

"உண்மைதான். மார்பகப் புற்றுநோய் முற்றிவிட்டால் மார்பகத்தையே நீக்கிவிடுவார்கள். அவர்களுக்கு செயற்கை மார்பகம் உருவாக்கிப் பொருத்துகிறோம்."



"எப்படி?"

"மார்பகம் நீக்கப்பட்ட பெண்ணின் உடல் சதையை எடுத்தே செயற்கை மார்பகத்தை தயாரிப்போம். பிட்டத்திலிருந்து, அல்லது தொப்புளுக்கு கீழ் உள்ள அடிவயிற்றிலிருந்துதான் அதற்கான சதை எடுக்கப்படும். முன்பு அவர்களுக்கு மார்பகம் இருந்த அளவில் செய்து பொருத்தி விடுவோம்."

"சரி, தீப்புண்கள், வெட்டுக்காயம் ஆகியவை ஏற்பட்டால் ஒட்டு அறுவைச் சிகிச்சை செய்கிறீர்கள். அப்போது வேறு ஒருவரது உடல் சதையை அல்லது தோலைப் பயன்படுத்த மாட்டீர்களா?"

"சில சமயங்களில் தீக்காயம் ஏற்பட்ட குழந்தையின் அம்மாவின் தோலையோ, சதையையோ பயன்படுத்தலாம். இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். குழந்தையின் சொந்தத்தோல் வளர்ந்து வருகிறவரை, ஒரு 3-4 வாரங்களுக்கு தாக்குப்பிடிக்கும். தற்போது புதிய முறை ஒன்று வந்திருக்கிறது."

"அது என்ன டாக்டர்?"

"நம்முடைய தோலைக் கொஞ்சம் எடுத்து ஆய்வு கூடத்தில் கொடுத்தால் பெரிய ஷீட் மாதிரியாகிவிடும். அதை வைத்து நாம் விரும்புகிறபடி ஒட்டு சிகிச்சை செய்யலாம்."

"ஒட்டு அறுவைச் சிகிச்சையால் தோலில் ஏற்படும் எந்தவொரு பாதிப்பையும் குணப்படுத்தி விடலாமா டாக்டர்?"

"தோலில் மட்டுமல்ல, சதை, எலும்பு, நரம்பு எல்லாவற்றையும் குணப்படுத்தலாம். விபத்தில் விரல்கள் துண்டிக்கப்பட்டால் கூட நுண்ணிய அறுவைச் சிகிச்சை மூலம் ஒட்டவைத்து விடலாம்."

"விபத்தில் அடிபட்டவர்களுக்கு பல முறை பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்கிறார்களே?"

"அடிபட்ட இடத்தில் உள்ள அழுக்கை அகற்றுவது முதல் படி. அடுத்து மறுவடிவமைப்பு செய்யவேண்டும். இப்படி இரண்டு மூன்று முறை செய்தால்தான் குணமாகும்."

"பழையபடி உறுப்புக்கள் மாறிவிடுமா?"

"அது காயத்தின் தன்மையை பொறுத்தது. மிகவும் சிதைந்திருந்தால் கஷ்டம்தான்."

"ஓ.கே. மிகப்பிரயோசமான தகவல்கள் சொன்னீர்கள். நன்றி டாக்டர்."

---

# சர்ச்சையை வைத்து வியாபாரம்

## 740 கோடி லாபம்

இலண்டன் பி.பி.சி தொலைக் காட்சிக்கு டயானா பேட்டியளித்து பரபரப்பு ஏற்படுத்தியது யாவரும் அறிந்த செய்தி.

அந்தப் பேட்டியில் டயானா தெரிவித்த கருத்துக்கள் பற்றியே ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

இளவரசர் சாள்ஸ் வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ளதைப் பற்றி



மூச்சுவிடாத விமர்சகர்கள் டயானாவைப் பற்றி மட்டுமே விமர்சித்து தள்ளுகிறார்கள்.

ஆனால், டயானாவின் பேட்டிக்குப் பிறகு இங்கிலாந்தில் அவருக்கு ஆதரவு பெருகியுள்ளது. டயானாவுக்கு அரச குடும்பம் அநீதி இழைத்துவிட்டதாக பெரும்பாலான மக்கள் நினைக்கிறார்கள்.

அதேவேளை அரச குடும்ப பிணைப்பை உதறமுடியாமல் டயானா தடுமாறுவதும் முரண்பாடாக இருக்கிறது. அரச குடும்ப சுகமும், வசதிகளும் டயானாவுக்கு தேவையாகவும் இருக்கிறது. சாள்ஸ்சின் உறவு மட்டும் தேவையில்லை என்றால் என்ன அர்த்தம் என்று கேட்கிறார்கள் சில விமர்சகர்கள்.

எப்படியோ தனது பேட்டி மூலம் மீண்டும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார் டயானா.

டயானாவின் பேட்டியை ஒளிபரப்பு செய்தது மூலம் இலண்டன் பி.பி.சி.க்கு உலகம் முழுவதும் கிடைத்த வருமானம் 740 கோடி ரூபாய்.

டயானாவின் பேட்டியை ஒளிபரப்பப் போவதாக பி.பி.சி அறிவித்தது நவம்பர் 14ம் திகதி. அன்றுதான் சாள்ஸ் தனது 45 வது பிறந்தநாளைக் கொண்டாடிக் கொண்டிருந்தார். தனது உதவியாளர் விஷயத்தை சொன்னபோது முகம் மாறினாராம் சாள்ஸ்.

தனக்கு காதலர்களே இல்லையென்று டயானா கூறினால் அவரது காதல் லீலைகளை தொடராக வெளியிட இலண்டன் பத்திரிகைகள் காத்திருந்தன.

தனது குதிரையேற்ற பயிற்சியாளர் ஜேம்ஸ் ஹெவிட் மட்டுமே தன்னுடன் உடல் ரீதியான உறவு வைத்திருந்ததாக டயானா தனது பேட்டியில் ஒப்புக் கொண்டிருந்தார். தனது பலவீனமான ஒரு தருணத்தை அவர் பயன்படுத்திக் கொண்டார் என்று டயானா காரணம் சொன்னது மட்டும் பூசி மெழுகல்.

சமீபகாலத்தில் உலகெங்கும் உள்ள மக்கள் ஒரே நேரத்தில் ஆவலோடு காத்திருந்து கவனித்த பேட்டி டயானாவின் பேட்டிதான்.

டயானாவின் பேட்டிக்கு பின்னர் பெண்களின் அனுதாபம் அவருக்கு பல மடங்கு உயர்ந்திருக்கிறது என்று கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

எப்படியோ பி.பி.சிக்கு மட்டும் கொழுத்த லாபம். அடுத்தவரது அந்தரங்கங்களை அறியும் ஆவல் வெளிநாடுகளிலும் இருக்கத்தான் செய்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# சமத்துவம் உலாவும் இடமே!

**தகவல் பெட்டி**


கடும் கோடை வெய்யில் வாட்டிவிட்டது. தாகத்திற்கு குளிர்பானம் சாந்தி தரும். வெய்யிலும் தாகமும் மனிதருக்கு மட்டும்தானா? சிம்பன்சியாரோடு வெளியே கிளம்பிய சுட்டிப்பெண் ரோசிக்கு படு புத்திசாலித்தனம். சிம்பன்சியாருக்கும் தனக்குமாக இரு குளிர்பானங்களை வாங்கி ஒரே குடை நிழலில் இருந்து பருகும்போது கிளிக், கிளிக். மனிதருக்குள் மனிதரே பகிர்ந்து கொடுக்க வேண்டியவற்றை மறுத்துக் கொண்டிருக்கும் காலத்தில், மிருகத்தோடுகூட சமத்துவத்தை அனுசரிக்கும் ரோசியை பாராட்டலாம் அல்லவா! சமத்துவ மதித்தல் சகல பிரச்சனைகளுக்கும் ஆப்பு வைத்துவிடும்.



படத்தில் செல்வி கசியா செல்லம் கொஞ்சுவது தீக்கோழியுடன். தீக்கோழி என்றதும் சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள். அவுஸ்திரேலியாவில் வருடத்தில் குறைந்தது ஆறு பேராவது தீக்கோழியால் கொத்திக் கொலை செய்யப்படுகின்றனர். தீக் கோழியின் உடல் மட்டும் 4 அடி உயரம். துரத்தத் தொடங்கினால் நீங்கள் ஒடித்தப்பவே முடியாது. மணிக்கு 40 மைல் வேகத்தில் (60 கிலோ மீற்றர்) துரத்தும். தப்பி ஓட முடியாமல் மாட்டிக் கொண்டுதான் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட தீக்கோழியுடன் கொஞ்சி விளையாடும் துணிச்சல் இந்தச் செல்விக்கு எப்படி வந்தது? அதொன்றுமில்லை, அவர் கொஞ்சுவது தீக்கோழிக் குஞ்சுடன்தான். இளம் குஞ்சு கொலை செய்யும் கலையறியாது என்ற நம்பிக்கைதான் துணிச்சலின் காரணம்.


## கொத்திக் கொத்திக் சொல்





## வரலாற்றில் இடம் பிடித்த படம்

இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் உள்ள புகைப்படம். அப்படி என்ன ஆச்சரியம் இருக்கிறது என்று விழிகளை விரித்து தேடுகிறீர்களா? விசயத்தைக் கேளுங்கள். 1900ம் ஆண்டு ஆரம்பத்தில் அமெரிக்காவில் சிறுவர்கள் கடின வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். தினமும் 16 மணிநேர வேலை. வாரத்தில் ஏழு நாட்களும் தொழிற்சாலைகளில் கசக்கிப் பிழியப்படுவார்கள். கூலி அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். 1910ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள ஜோர்ஜியா ஆடைத் தொழிற்சாலையில் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டு பத்திரிகைகளில் பிரசுரமாகியது. பயங்கர கொடுமை என்று கண்டனங்கள் கிளம்பத் தொடங்கின. அதனால் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது குற்றம் என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்கு காரணமான இந்தப் புகைப்படம் வரலாற்றுப் படமாகிவிட்டது.





## தாயும் சேயும்

பறவைகளின் குஞ்சுகளை கூட்டோடு கூடாக காணும் பாக்கியம் பெறாதவர்களுக்கு இப் புகைப்படங்கள்தான் பாக்கியம்.

முதலாவது படத்தில் பெண்குயின் பறவையும் அதன் குஞ்சும்.

இரண்டாவது படத்தில் சிகப்பு நாரையும், அதன் குஞ்சும். எத்தனை பத்திரமாக பாதுகாக்கின்றன. உயிர்களின் பெறுமதி பறவைகளுக்கே தெரிகிறதல்லவா. ஆனால் நமக்கெல்லாம்...?!

மலைத்தொடர் ஒன்றில் உல்லாசப் பயணம் சென்ற ஜெர்மன் நாட்டு தம்பதிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. பனியில் உறைந் திருந்த ஒரு மனித உடல் கண்ணில் பட்டது. முதலில், பயந்து போனாலும் பின்னர் நெருங்கிப் போய் ஆராய்ந்தனர். ஒஸ்ரியா புதைபொருள் ஆராய்ச்சி யாளர்களுக்கு தகவல் செல்ல, அவர்களும் வந்து ஆராய்ந்தனர். 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதனின் உடலே அது என்று கண்டுபிடிக்கப் பட்டது. பனியில் உறைந் திருந்தமையால் அழியாமல் பாதுகாப்பாக இருந்திருக்கிறது.



## -5- ஆயிரம் ஆண்டுகள்



படிப்பகம்

www.padippakam.com

## இரகசியக் காதல்

கோவை சரளா மிகவும் இரகசியமாக ஒருவரைக் காதலிப்பதாக கோடம்பாக்கம் சினிமா வட்டாரத்தில் கிசு-கிசு. விசாரித்துப் பார்த்தார்கள் திருபர்கள். அவர் வீட்டில் ஒரு வாலிபர் இருப்பது தெரியவந்தது.

அந்த வாலிபர் மீதுதான் லவ்வோ? என்று கேட்டால் சரளா மறுக்கிறார். "அவர் நம்ம சொந்தக்காரருங்கோ" என்று சொல்கிறார்.

## சத்யராஜ்–பிரபு அசத்தல்

சத்யராஜ்-பிரபு இருவரும் இணைந்து நடிக்கும் சிவசக்தி படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. நெற்றியில் குங்குமத்தோடு சத்யராஜும், பிரபுவும் பிள்ளையார் கோவிலில் சிதறு தேங்காய் உடைப்பது தான் முதல் காட்சி. படத்தை இயக்குவது சுரேஸ் கிருஷ்ணா. சத்யராஜ் மீசை இல்லாமல் தோன்று கிறார். நகைச்சுவையும், வில்லத்தனமும் கலந்த பாத்திரமாக இருக்கலாம்.

## ஹீராவுக்கு அதிர்ச்சி

எப்படித்தான் கவர்ச்சியான போஸ் கொடுத்துக் கலக்கினாலும் இந்தியில் ஒரு நல்ல இடம் கிடைக்கவில்லை. துணிச் சல்கார நடிகை என்று பெயரெடுத்தது தான் மிச்சம். அதனால்தானோ என் னவோ சின்னதாய் ஒரு துணி மட்டும் போட்டுக் கொண்டு நடிக்கவே பல அழைப்புக்கள் வந்ததாம். வாழ்க்கையே வெறுத்தது மாதிரி சென்னைக்கே திரும்பிவிட்டார் ஹீரா.

## தாவூத் இப்ராஹிம்

பம்பாய் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளில் அடிப்பட்டவர் தாவூத் இப்ராஹிம். தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்படும் படம் ஒன்றுக்கு 'தாவூத் இப்ராஹிம்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

## பிரபுவின் பூரிப்பு

பெரிய குடும்பம் நூறு நாள் விழாவை சமீபத்தில் கொண்டாடியதால் மகிழ்ச்சியோடு இருக்கிறார் பிரபு.

பிரபுவும் சத்யராஜும் இணைந்து நடிக்கும் சிவ சக்தி படத்தைப் பற்றியும் நம்பிக்கையோடு பேசுகிறார் பிரபு.

"சுரேஸ் கிருஷ்ணா சிவசக்தி கதையை சொன்ன போது, சேர்ந்து நடிக்கலாமா என்று சத்யராஜிடம் கேட்டாராம் பிரபு. ஓ.கே என்று விட்டாராம் சத்யராஜ். படம் நன்றாக வரும். வரவைத்துக் காட்டுகிறோம் என்று சொல்லியிருக்கிறார் பிரபு.

தொடர்ந்தும் இரண்டு கதாநாயகர்கள் படங்களில் நடிப்பீர்களா? என்ற கேள்விக்கு, சிவசக்திக்குப் பின்னர் கொஞ்சக் காலம் தனிக் கதாநாயகன்தான். அதன் பின்னர் வேண்டுமானால் பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார் பிரபு.

பிரபு - நக்மாவோடு நடிக்கும் படம் 'பெரிய தம்பி' இரண்டு கதாநாயகிகள் இல்லையே என்று பிரபு வருதப்படக்கூடாது என்பதற்காக படப்பூஜை அழைப் பிதழில் பிரபுவின் இருபுறமும் நக்மாவின் இரு படங்களை அச்சிட்டு அசத்திவிட்டார் தயாரிப்பாளர்.

## "என்மகளை...

ஐஸ்வர்யா பே... யாகிவிட்டார். அ... அவரது கணவர்த... ஐஸ்வர்யாவை ... மகளை எனக்கு ... தமிழக சஞ்சிகை ... திருந்தார் லட்சுமி...

லட்சுமி சொ... தாகவே கூறப்படுகி... பங்களா ஒன்றில் ... களுக்கு பரிமாறு... சஞ்சிகை ஒன்று... துள்ளது.

ஐஸ்வர்யாவை ... தலைவர்கள் சி... லட்சுமி.

## ரம்பாவி...

கிட்டத்தட்ட ... இருப்பவர் நடிப்ப... படத்திலும் நடித்... கிறார். கார்த்... 'உள்ளத்தை அ... மிகத் தாராளமாக ... ருக்கிறார். கார்த்... தப்பட்ட காதல் கா... உள்ளத்தை அ... தெலுங்குப் பட... போட்டியில் கொ... கொண்டிருப்பவர் ... குறிப்பிடத்தக்க ச...

## யாரும் பார்க்கக் கூடாது

'இந்தியன்' படத்தில் கமலுடன் ஊர்மிளா நடிக்கும் காட்சிகளில் பயங்கரமான கிளு-கிளு. ஊர்மிளாவின் துணிச்சலைக் கண்டு படப்பிடிப்புக் குழுவினர் திகைத்துப் போய் விட்டார்களாம். முக்கியமான தொழில் நுட்பக் கலைஞர்கள் தவிர வேறு யாரும் படப்பிடிப்பின் போது அரங்கில் நுழைய தடை விதிக்கப்பட்டது.



பிரபுதேவா–கஜோல்–அரவிந்தசாமி
படம் : மின்சாரக் கனவு

## டாட்டா காட்ட ஆசை

'விட்ல விசேஷங்க' படத்தில் நடித்த பிரகதி சரியான வாய்ப்புக்கள் இல்லாமல் போனதால் திருமணம் செய்து கொண்டார். மோகனா அமெரிக்கா சென்று விட்டார். தற்போது வாய்ப்புக்கு அலைந்து கொண்டிருக்கும் நடிகைகளும் சரியான புளியங் கொம்பு கிடைத்தால் சினிமாவுக்கு டாட்டா காட்டலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களாம்.

பிரகதி மாங்காய் சாப்பிடுவதாக லேட்டஸ்ட் தகவல். வாரிசு உருவாகிறது.

## தேவராசி

இசையமைப்பாளர் தேவாவுக்கு ஒரு ராசி. அவர் இசையமைக்கும் படங்கள் தீபாவளிக்கு வெளியாவதில்லை. அடுத்த வருட தீபாவளிக்கு எப்படியோ?

## இயக்குநரின் வேதனை

அந்த நடிகரோடு நடிக்க ஆசை. அந்த இயக்குநரின் படத்தில் நடிக்க ஆசை என்றெல்லாம் பேட்டி கொடுப்பார்கள் சில நடிகைகள். ஆனால் ஒப்பந்தம் செய்யப் போனால் வேறு விதமாகி விடுகிறார்கள். இப்படி வேதனையைக் கொட்டியிருக்கிறார் ஒரு பெரிய இயக்குநர். அவர் வேறு யாருமல்ல, பாரதிராஜாதான். அந்திமந்தாரை படத்தில் நாசரின் ஜோடியாக நடிக்க பானுப்பிரியா மறுத்ததுதான் பாரதிராஜாவின் வேதனைக்கு காரணம்.

## பெயரில் மந்திரம்

'ப்ரியம்' படத்தில் நடிப்பதற்காக பம்பாயில் போய் தேடு தேடென்று தேடி கொண்டு வந்துள்ள நடிகையின் பெயர் மந்த்ரா. வில்லங்கமான பெயராக ஏன் சூட்டினார்கள் என்பதற்கும் விளக்கம் சொல்கிறார்கள். அவரது புன்னகை மந்திரம் ஓதுவது போல இருக்கிறதாம். ஆகவே மந்த்ரா. அடுத்த படத்தில் பெயரை மாற்றவேண்டியிருக்கும்.

## மினி சினி

* பிரபு-சத்யராஜ் நடிக்க, சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் 'சிவசக்தி' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக ரம்பாவும், சத்யராஜிற்கு ஜோடியாக ரஞ்சிதாவும் நடிக்கிறார்கள்.

* சுஹாசினி மணிரத்னம் இயக்கத்தில் அரவிந்தசாமி-அனுஹாசன் நடித்த 'இந்திரா' இந்தியில் 'பிரியங்கா' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளது.

* கே. பாலசந்தரின் 'டூயட்' படத்தில் வில்லனாக அறிமுகமாகி 'ஆசை' மூலம் பிரபலமானவர் பிரகாஷ்ராஜ். இவர் தற்போது சரத்குமார் நடிக்கும் 'அரவிந்தன்' படத்தில் மந்திரி வேடத்தில் நடித்து வருகிறார்.

* நடிகர் திலகம் வில்லனிக் ஹீரோவாக நடித்த படங்களில் ஒன்று 'திரும்பிப்பார்'. இப்போது இதே பெயரில் இராம. நாரயணன் இயக்க, சரவணன் கதாநாயகனாக நடிக்கும் படமொன்று தயாராகின்றது.

* கன்னடத்தில் பெருவெற்றி பெற்ற படமான 'போலீஸ் பவர்' அதே பெயருடன் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. தேவராஜ்-பிரேமா ஜோடியாக நடித்துள்ள இப்படத்திற்கு அம்சலேகா இசையமைத்துள்ளார்.

* ஏ.ஆர். ரகுமானின் இசையமைப்பில் 'இந்திரா' படத்தில் இடம்பெற்ற 'நிலா காய்கிறது...' பாடலைப் பாடியவர் ஹரிணி. பாடசாலை மாணவியான இவர் அண்மையில் கே.பாக்யராஜின் 'ஞானப்பழம்' படத்திலும் பாடலொன்றைப் பாடியிருக்கிறார்.

* 'தாலாட்டு' படத்தை இயக்கிய டி.கே. ராஜேந்திரன் இப்போது ஜெயராம் நடிக்கும் 'பரிவட்டம்' படத்தை இயக்கி வருகிறார். இது முடிவடைந்ததும் முரளி கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* பாரதிராஜாவின் 'கருத்தம்மா' நாயகி ராஜஸ்ரீ, பாண்டியராஜனுடன் நடித்த 'நீலக்குயில்' படத் தோல்வியால் தமிழில் வாய்ப்புக்களின்றி இருந்தார். தற்போது திடீரென நான்கு புதிய தமிழ்ப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* கமலின் 'குருதிப்புனல்' படத்தில் இயக்குநர் பி.சி. ஸ்ரீராமிடம் உதவியாளராகப் பணிபுரிந்த சரிகா கமலஹாசன் விரைவில் தனியாக படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்திற்கான கதை தயாராகிவிட்டது.

## ரஜினி வர்றார் பவனி

டிசம்பர் 12ம் திகதி ரஜினியின் பிறந்தநாள். அதனை முன்னிட்டு இந்திய தனியார் தொலைக்காட்சி ஒன்று அவரைப் பேட்டி கண்டது.

ரஜினியின் பேட்டி என்றதுமே தொலைக்காட்சிகள் முன்பாக மக்கள் கூட்டம்.

தனது முடிவை அறிவிக்கப்போகிறார் ரஜினி என்று பலத்த எதிர்பார்ப்பு. வழக்கம் போலவே புதிர் போட்டு முடித்துவிட்டார் பேட்டியை.

அரசியலுக்கு வந்தால் தனிக் கட்சி தொடங்குவேன் என்று ரஜினி கூறினார். ரஜினி ரசிகர்களுக்கு அது காதில் தேன் பாய்ந்த மாதிரி.

'தொட்டால் சிணுங்கி' படத்தில் ஒரு பாடல் வருகிறது. அந்தப் பாடலுக்கு மட்டும் பிரபுதேவா நடனக் காட்சி அமைத்துள்ளார்.

அந்தப் பாடல் வரிகள்: ரஜினி வர்றார் பவனி, அந்த சூப்பர் ஸ்டைலைக் கவனி... சிங்கம் ஒன்று நிமிர்ந்திடுச்சே...சபையில் இங்கே வணங்கிடுச்சே. ஊரை நீ ஆளலாம். தலைவனாக நீ ஆகலாம். நாளை உன் கையிலே நாடும் உன் கையிலே என்று தொடர்கிறது பாடல்.



திவ்யாதத்தி
'அமைதிப் பூங்கா' நாயகி

இது என்ன கூத்து
அதிசயமோ?
இளநீர் காய்க்கும்
கொடியிதுவோ?
பருவம் அடைந்தால்-ஒரு
பஞ்சம் இல்லை
அடடா பிரம்மன்-அவன்
கஞ்சன் இல்லை
நீயே அழகின் எல்லை.

கவிஞர் வைரமுத்து



படிப்பகம்

www.padippakam.com

# சினி விசிட்

## ...த் தாருங்கள்"

...மருந்துக்கு அடிமை ... அடிமையாக்கியவர் ... பிரபல புள்ளிகளுக்கு ...றுகிறார்கள். என் ...த் தாருங்கள் என்று ...க்கு பேட்டி கொடுத்

...ல் உண்மை இருப்ப ... சென்னையில் உள்ள ...ர்யாவை சில வி.ஐ.பி. ...ர்கள் என்று தமிழ் ...வலறிந்து பிரகரித்

...க பிரபல அரசியல் ... நாடியிருக்கிறார்

## பெயர் மட்டும் புதுசு

கார்த்திக்-ரேஷ்மா நடித்துள்ள 'கிழக்கு முகம்' பொங்கல் திருநாளுக்கு திரைக்கு வருகிறது. சுடுகாட்டில் வெட்டியான் வேலை செய்யும் பாத்திரம் கார்த்திக்குக்கு! கார்த்திக்கின் ஜோடியாக நடிக்கும் ரேஷ்மாவுக்கு பெயர்தான் புதுசு. முகம் பழசு. 'மாங்கல்யம் தந்துனானே' என்னும் படத்தில் நடித்த ஜீவாதான் இந்த ரேஷ்மா.

சீமான் படத்தில் நடித்த மந்தாகினி 'மனசு' படத்தில் ஜீவா என்று பெயரை மாற்றிக் கொண்டு நடிக்கிறார். அவர் விட்ட பெயரை இவர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்.

## சளைக்காத சங்கவி

பம்பாய் இறக்குமதிகளோடு நெஞ்சை நிமிர்த்தி மல்லுக்கு நிற்கும் துணிச்சல் அதிகம் சங்கவியிடம்.

'ரசிகன்' 'விஷ்ணு' போன்ற படங்களில் தூள் கிளப்பிய சங்கவி, தற்போது 'கோயம்முத்தூர் மாப்ளே' 'புது நிலவு' போன்ற படங்களில் பம்பாய் நடிகைகள் கலங்கிப் போகுமளவுக்கு நடித்துக் கொண்டிருக்கிறார்.

யாரோடு நடித்தாலும் விஜய் ஜோடியாக நடிக்கும் போது நெருக்கம் மிக மிக அதிகம்தான். அது ஏன் சங்கவி?

## மற்றுமொரு காட்சி


'அமைதிப்படை'யில் சத்யராஜிடம் அல்வா வாங்கும் காட்சியில் ரசிகர்களை கிறங்கடித்தவர் கஸ்தூரி. இப்போது மலையாளத்தில் இருந்து 'ரதோத்சவம்' என்னும் படம் தமிழுக்கு வருகிறது. அதில் தமிர் கடையும் காட்சியொன்றில் நடித்திருக்கிறார் கஸ்தூரி. அக்காட்சி ரசிகர்களின் மனதைக் கடையப் போகிறதாம்.

## திரைக்கு வந்துள்ள படங்கள்

தமிழ் நாட்டில் திரைக்கு புதிதாக வந்துள்ள படங்கள். 'தொட்டால் சிணுங்கி' (கார்த்திக்- ரேவதி). 'மாமன் மகள்' (சத்யராஜ்- மீனா) ஆயுத பூஜை (அர்ஜுன்- ரோஜா-ஊர்வசி) சீதனம் (பிரபு-சங்கீதா) ஜமீன் கோட்டை (கலைப்புலி ஜி.சேகரன்-மோகினி).

## ...கொடி...

...ா போலவே ...ம்பா. சிவசக்தி ... கொண்டிருக் ... ஜோடியாக ...தா' படத்தில் ...துக் கொண்டி ...ரம்பா சம்பந் ...ள் ரசிகர்களின் ... போகிறதாம். ...ல் கவர்ச்சிப் ...ட்டிப் பறந்து ...ம்பா என்பது ...ாரம்.



ராதிகா- பேபி புஜ்ஜிதா
படம் : சித்திரச் சோலை

## எம்.ஜி.ஆர். கண்ணாடியும் தொப்பியும்

டிசம்பர் 24 எம்.ஜி.ஆர் நினைவு நாள்

தமிழ்த்திரையுலகின் முதல்வராக உயர்ந்து, தமிழ் நாட்டின் முதல்வரானவர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். என்றவுடன் உங்களுக்கு உடனே என்னவெல்லாம் நினைவுக்கு வரும்? அந்தக் கறுப்புக் கண்ணாடியும், தொப்பியும் நினைவுக்கு வராமல் போகாதல்லவா.

அந்தக் கறுப்புக் கண்ணாடியும், தொப்பியும் பற்றிய சில தகவல்கள்.

எம்.ஜி.ஆர். அணிந்த கறுப்புக் கண்ணாடியை சென்னையிலுள்ள புளுபிரதர்ஸ் ஒப்டிக்கல் நிறுவனம் தான் பிரத்தியோகமாக தயாரித்துக் கொடுத்திருந்தது.

கூலிங் கிளாசிலேயே பவரும் இணைந்த கண்ணாடிகளை அவர் அணிவார்.

நீண்ட நாள் பயன் பட்ட கண்ணாடி என்றாலும் அவற்றை எம்.ஜி.ஆர். தூக்கிப் போட்டுவிட மாட்டார்.

எம்.ஜி.ஆரிடம் எப்போதும் குறைந்தது 15 கண்ணாடிகளாவது இருக்கும். வீட்டில், அலுவலகத்தில், காரில், கைப்பையில் என்று கூடுதலாக வைத்திருப்பார்.

அவர் கண்ணாடி அணிந்திருக்கும் போது அவர் கண்களை யாராலும் பார்க்க முடியாது. அந்த அளவுக்கு நாங்கள் தரும் கண்ணாடிகள் கறுப்பாக இருக்க வேண்டும் என்பார். அது அவரது எச்சரிக்கை உணர்வுகளில் ஒன்று.

பொது நிகழ்ச்சிகளில் கூட்டங்களில் அவர் கலந்துகொள்ளும் போது யாரை எங்கே பார்க்கிறார் என்பதை யாராலும் கண்டு பிடிக்க முடியாது. தனக்கு எதிராக யாராவது நடப்பதாக இருந்தாலும் அவரது அலைபாயும் கண்கள் கண்டு பிடித்துவிடும். அவர் கண்டு பிடிப்பதை பிறர் அறிய முடியாது. அதுதான் எம்.ஜி.ஆரது தனிப்பெரும் சக்தி.

கண்களுக்கும், கண்ணாடிக்கும் இருபுறமும் இடைவெளி தெரியாமல் இருக்கும் கவர்ட் கூலிங்கிளாசையே எம்.ஜி.ஆர். அணிவார்.

எம்.ஜி.ஆரது 'இமேஜிற்கு' துணை நின்றவற்றுள் ஒன்று, அவர் 1968 முதல் அணியத் துவங்கிய புசு புசுவென்ற தொப்பி.

அவருக்கு வழுக்கை இருப்பதால்தான் தொப்பி போடுகிறார் என்று விமர்சனம் செய்யப்பட்டது.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது கோவை ரயில் நிலையத்தில் மாலைபோடும் சாக்கில் அவரது தொப்பியைக் கழற்ற முயன்றார் ஒருவர். பயங்கரமான உதைதான் கிடைத்தது.

'திருடாதே' படத்தின் போதுதான் எம்.ஜி.ஆர். முடியைக் குறைத்துக்கொண்டு நடித்தார். அதற்குப் பின்னரே அவருக்கு தொப்பிகள் பொருந்தின.

படங்களிலும் தொப்பிவைத்து நடித்தால் தனக்குரிய தொப்பி எப்படி இருக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆரே யோசனை சொல்வார்.

எம்.ஜி.ஆர். தனக்கென்று விசேஷமாக தயாரிக்கப்பட்ட தொப்பிகளையே அணிந்துவந்தார்.

எம்.ஜி.ஆர். தொப்பிகள் மூலமாக வைரம் கடத்துகிறார் என்றும் அவரது எதிரிகள் விசமப் பிரசாரம் செய்தார்கள்.

எம்.ஜி.ஆர். முதல்வரானபின்னர் அவருக்கு அடிக்கடி தொப்பிகள் தேவைப்பட்டன. வியர்வையினால் கேன்வாஸ் தளர்ந்துவிடும், அதனால் மாற்றிவிடுவார்.

செம்மறி ஆட்டுக் குட்டிகளின் தோலில்தான் எம்.ஜி.ஆரின் தொப்பிகள் தயாரிக்கப்படும். வெள்ளை நிறத் தோலை சாம்பல் நிற சாயம் கொடுத்து மாற்றிவிடுவார்கள். தொப்பியின் மேலே கண்ணுக்கு தெரியாத துவாரங்கள் இருக்கும். அதனால் அதை அணியும்போது எம்.ஜி.ஆருக்கு குளுமையாக இருக்கும். இந்த தொப்பி எப்படி இருக்க வேண்டுமென்பதெல்லாம் எம்.ஜி.ஆரது யோசனையில் உதித்ததுதான்.

## மின்சார அழகிப் போட்டி

இன்று முகப்பில் இருக்கும் அழகுப் புயல் கஜோல். இந்திப் படவுலகில் கஜோலின் நடன அசைவுகள் வெகு பிரசித்தம்.

'மின்சாரக் கனவு' படத்தில் பிரபுதேவாவுக்கும் அரவிந்தசாமிக்கும்-கஜோலுக்கும் சரியான போட்டி.

'காதலன்' படத்தை தூக்கிச் சாப்பிடுமளவுக்கு மின்சாரக் கனவை இயக்கத் ...டமிட்டுள்ளார் ராஜீவ் மேனன். பணத்தை தண்ணீராய் இறைக்கத் தயாராக இருக்கிறது ...பி.எம். பட நிறுவனம்.

மின்சாரக் கனவில் கஜோல் பல கோணங்களில் அழகு காட்டி அசத்தப் போகிறார். ஏற்கனவே பம்பாய் இறக்குமதியான நக்மா கதி கலங்கவைத்துக் கொண்டிருக்கிறார். இந்தியனில் மனிஷா கொய்ராலாவும், ஊர்மிளாவும் கவர்ச்சிப் போட்டியில் ...த்திருக்கிறார்கள்.

இதற்கிடையே பிரபுவோடு அமைதிப்பூங்காவில் நடிக்க பம்மாயிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள ...சாரம் திவ்யாதத். இயக்குநர் எப்படி வேண்டுமென்று எதிர்பார்க்கிறாரோ அப்படியே ...க்கத்தயார் என்று பகிரங்க அறிக்கைவிட்டுக் கொண்டு வந்திருக்கிறார். திவ்யாதத். ...நகிலுள்ள படத்தை பார்த்துவிட்டு திவ்யாதத் நிறைய வைத்திருக்கிறார் துணிச்சலை என்று ...ப முடிகிறதல்லவா.

கஜோல்-திவ்யாதத் இருவரில் அதிக வலுவுள்ள மின்சாரம் பாய்ச்சப் போவது யார் ...பதுதான் லேட்டஸ்ட் போட்டி.. இன்றைய முரசின் முகப்பையும், நடுப்பக்கத்தையும் ...பிட்டுப் பார்த்தால் நமக்கென்னவோ திவ்யாதத் முன்னணியில் இருப்பதாகப்படுகிறது. ...ி இயக்குநர்களின் சாமர்த்தியத்தைப் பொறுத்து படங்கள் வெளியானபின் முடிவு தெரியும்.

## சுவலட்சுமியின் பிடிவாதம்

'ஆசை' படத்தில் கதாநாயகி சுவலட்சுமிக்கு குரல் கொடுத்தவர் ரேவதி. தனது குரலை சற்று மாற்றிக்கொண்டு குரல் கொடுத்திருந்தார் ரேவதி.

'ஆசை' படநாயகி சுவலட்சுமி வித்தியாசமானவர். கவர்ச்சி காட்ட மாட்டேன் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார். அதனால் அவர் வீட்டுப் பக்கம் தயாரிப்பாளர்கள் காலை வைக்காமல் இருக்கிறார்கள். தற்போது வாணி மஹால் படத்தில் விக்னேஷோடு ஜோடி சேர்ந்து நடித்துக் கொண்டிருக்கிறார், சுவலட்சுமி. சுவலட்சுமிக்கு கோடம்பாக்கம் வட்டாரம் சூட்டியுள்ள பட்டம். 'பிழைக்கத் தெரியாதவர்.'

## மன்சூருக்கு மகிழ்ச்சி

'தாயகம்' படத்தில் மன்சூரலிகானுக்கு நல்ல தீனி போட்டிருக்கிறார்கள். அதாவது கனமான பாத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பூரித்துப் போயிருக்கிறார் மனிதர். விஜயகாந்த் செய்த சிபாரிசுதான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று வாய் நிறையப் புகழுகிறார். அருண்பாண்டியன், நெப்போலியன் ஆகியோரும் நடிக்கின்றனர். ஆனாலும் தனக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது என்கிறார் மன்சூரலிகான். 'தாயகம்' பொங்கல் வெளியீடாக வெளிவரலாம் என்று தெரிகிறது.



ஜெயராம்- வினிதா
படம் : புது நிலவு



நாசர்-ஊர்வசி
படம் : அருவா வேலு


படிப்பகம்

www.padippakam.com

# குடும்பத் தலைவிகள் கவனிக்க!

## இடுப்புவலிக்கும்-முதுகுவலிக்கும் தீர்வு

பெண்களுக்கு-அதிலும் குடும்பத்தலைவிகளுக்கு அடிக்கடி ஏற்படும் தொந்தரவுகளில் முதுகுவலியும் ஒன்று. பொதுவாக, நாம் எப்படி உட்கார்ந்திருக்கிறோம், எப்படி நிற்கிறோம் என்பதைப் பொறுத்தே உடல் வலியும், முதுகுவலியும் ஏற்படுகின்றன.

நிற்கும்போது அல்லது உட்கார்ந்திருக்கும் போது உடலின் பல்வேறு பாகங்கள் ஒன்றுக்கொன்று எந்த விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்பதே நிலை (Posture) எனப்படும். ஓய்வாக இருக்கும் போதோ, இயக்கத்தில் இருக்கும் போதோ உடலின் சமநிலையைக் காக்க குறைந்தளவு சக்தி செலவிடப்பட்டால் அதுவே நல்ல நிலையாகும்.



நம்மில் பலர் நமது உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கும் வகையில் உட்காருகிறோம், நிற்கிறோம், இயங்குகிறோம். நாம் என்ன வேலை வேண்டுமானாலும் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் தசைகளிலும் முதுகெலும்பிலும் குறைந்தளவு அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடியதே நல்ல நிலையாகும்.

வீட்டு வேலைகள் செய்து கொண்டிருக்கும் போது தகுந்த நிலைகளில் உடலை அமைத்துக்கொள்ள வேண்டும். முன்னோக்கி வளைவதும் நீண்ட நேரம் தொடர்ந்து வேலை செய்வதுமே பெண்களுக்கு முதுகு வலி ஏற்படக் காரணமாக இருக்கின்றன. முன்னோக்கி வளைந்து எந்தப் பொருளையும் தூக்குவது கூடாது. தொடர்ந்து 20 நிமிடங்களுக்கும் மேலாக வளைந்து கொண்டிருப்பதும் கூடாது. பெண்கள் அதிக அளவு வளைவதற்குத் தேவையே இல்லாத விதத்தில் அடுப்பங்கரை மேடைகளை ஏற்ற உயரத்தில் அமைக்க வேண்டும்.

முதுகு வலியையும், இடுப்பு வலியையும் தவிர்க்க அடிவயிறு, முதுகு தொடர்புடைய உடற்பயிற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். உடலமைப்பு ஒழுங்கு தவறி அமைந்திருப்பது, உடல் உழைப்பு அதிகம் இல்லாத வாழ்க்கை முறை, நடக்கும் போது - நிற்கும் போது - உட்காரும் போது உடல் தகுந்த நிலையில் அமையாமை போன்ற காரணங்களாலும் முதுகுவலி ஏற்படுகின்றது. மிகவும் எடை அதிகமான பொருட்களைத் தூக்குவதும் பெண்களுக்கு முதுகுவலி ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று.

தகுந்த நிலையில் அமர்வது, நிற்பது, நடப்பது என்பதை நாள்தோறும் செய்து பார்த்துப் பழகுவதன் மூலம் அதை நாளடைவில் ஒரு பழக்கமாகவே ஆக்கிக் கொண்டு விடலாம்.

## கண்ணீர் அலங்காரம்

காதலியைச் சந்திக்க முடியாத இரவு வேதனையானது.

இரவு எவ்வளவு நீளமானது என்பது அப்போதுதான் தெரிகிறது.

அந்த இரவு நீண்டுகொண்டே போகிறது. அதற்கு முடிவுமில்லை: விடிவுமில்லை.

பிரிவு இரவில் அவன் துயரத்தால் துடித்தான்.

இருள் வெள்ளத்தை நீந்திக் கடக்க முடியாமல் அதில் மூழ்கித் தத்தளித்தான்.

காதலியைச் சந்திக்கும் போது இதே இரவு எவ்வளவு இனிமையாக இருந்தது.

அப்போது இந்த இருள் காதலர்களின் அந்தரங்கத்திற்காக இடப்பட்ட கரும்பட்டுத் திரை மறைப்பாய் இருந்தது.

இப்போதோ ஆலகால விஷத்தின் கருமையாக இருக்கிறது.

அப்போது நிலா கள் வார்க்கும் வெள்ளிக் கோப்பையாக இருந்தது.

இப்போதோ வெள்ளை நெருப்புக் கொள்ளியாக இருக்கிறது.

அப்போது நட்சத்திரங்கள் மெத்தையில் தூவிய ஒளி மலர்களாக இருந்தன.

இப்போதோ அவை கிரணங்களாய் குத்தும் முட்களாக இருக்கின்றன.

அவன் கண்ணீர் வடித்தான்.

அவன் நினைத்தான்- என்னை வேதனை செய்த இரவே! இதோ, என் கண்ணீரால் உன்னை அலங்கரிக்கின்றேன்.

விளக்குகளாலோ, நிலா நட்சத்திரங்களாலோ கூட உன்னை இப்படி அலங்கரிக்க முடியாது.

ஏனெனில் இவை வெறும் கண்ணீர்த் துளிகள் அல்ல; காதற் கடலின்- முத்துக்கள்.



**அப்துல் ரகுமான்**

வருங்காலத்தில் நீ என் நினைவுக்கு வரும்போது என் காதல் முத்துக்களாய் அலங்கரிக்கப்பட்ட நீ மற்ற எந்த இரவையும் விட அழகாயிருப்பாய்.

புகழ்பெற்ற பெருங் கவிஞர் ஃபைஸ் அஹமத் ஃபைஸின் கவிதை இது:

பிரிவு இரவே! உன்னால்
நான் பட்ட வேதனை கொஞ்சமல்ல
ஆனாலும் என் கண்ணீர்
உன் வருங்காலத்தை
அலங்கரித்து விட்டதல்லவா?

## சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது— சுகந்தினி)

### மசாலா பாகற்காய்

சிறிய பிஞ்சுப் பாகற்காய் - 10
மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
மிளகாய்த் தூள் - 1 தேக்கரண்டி
மல்லித் தூள் - 4 தேக்கரண்டி
காய்ந்த மாங்காய்த் தூள் - 2 தேக்கரண்டி
மசாலாத் தூள் - 1/4 தேக்கரண்டி
வறுத்துப் பொடித்த பெருஞ்சீரகம் - 1/2 தேக்கரண்டி
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**

பாகற்காயின் மேலுள்ள கரடுமுரடான பகுதியை லேசாகச் சீவிக்கொள்ளவும். முழுவதும் பிளந்து விடாமல், நெடுவாக்கில் வெட்டவும். பாகற்காயின் உள், வெளி இரு புறங்களிலும் உப்பைத் தடவி இரண்டு மணிநேரம் வெயிலில் வைக்கவும். பிறகு பாகற்காயை எடுத்துப் பிழிந்தால் அதிலுள்ள நீர் வெளியேறிவிடும்.

இப்போது மேலுள்ள மசாலாப்பொடிகளை நன்றாகக் கலந்து பாகற்காயினுள் அடைத்து ஒவ்வொரு பாகற்காயையும் தனித்தனியாக நூலால் கட்டவும். அப்போது தான் வதக்கும்போது மசாலாப்பொடிகள் வெளியே வராது. வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி எல்லாப் பாகற்காயையும் போட்டு மூடி விடவும். அடுப்பை மிதமாக எரிய விடவும். பாகற்காய் கொஞ்சம் வதங்கியபின் மூடியை எடுத்து கரண்டியால் மெதுவாகக் கிளறிக் கொடுக்கவும். கொஞ்சம் மொறுமொறுப்பானவுடன் அடுப்பிலிருந்து எடுத்து நூலை அவிழ்த்து விடவும்.

இதைச் சோற்றுடன் சாப்பிட சுவையாக இருக்கும். இது நான்கு நாட்கள் வரை கெட்டுப்போகாமல் இருக்கும்.

## சின்னப் பாப்பாவுக்கு என்ன வருத்தம்?

சின்னப் பாப்பாவுக்கு நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைவு என்பதால் ஏதாவது ஒரு நோய் அவ்வப்போது தலைகாட்டும். சளி, இருமல், மலச்சிக்கல்-இப்படி. அவைகளைச் சரி செய்ய 'குட்டி' வைத்தியங்கள் கைவசம் இருந்தால் செலவும் குறைவு, பலனும் அதிகம்.

★ **இருமல்:** பசும்பாலைக் காய்ச்சி இளம் சூடாக இருக்கும் போது சிறிது மஞ்சளைத் தூவி, வடிகட்டிக் கொடுக்கலாம்.

★ **மார்புச்சளி:** தேங்காய் எண்ணெயில் கற்பூரம் போட்டுக் காய்ச்சி அதை மார்பு மற்றும் முதுகுப் பகுதியில் சூடு பறக்கத் தேய்க்க வேண்டும். எருமைப் பாலைத் தவிர்ப்பது நலம்.

★ **மலச்சிக்கல்:** கொதிக்கும் நீரில் பத்து உலர்ந்த திராட்சைகளைப் போட்டு நன்கு பிசையுங்கள். பிறகு நீரை மட்டும் வடிகட்டி, சிறிது சீனி சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

★ **வயிற்றுப்போக்கு:** கொதிக்க வைத்த நீரை நன்கு குளிர வைத்து வடிகட்டிக் கொடுக்க வேண்டும். சேமியாவை நன்கு வேகவைத்து, அந்தக் கஞ்சியில் சீனி போட்டுக் கொடுக்கவும். வயிற்றுப் போக்கு இருக்கும்போது எதையும் சூடாகக் கொடுக்காதீர்கள்.

## அரங்கு நிறைந்த ஒலிம்பிக்

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிக்கு இன்னும் ஒரு வருடம் இருக்கின்றது. அதற்குள் அனைத்துப் போட்டிகளுக்குமான டிக்கெட்டுகளும் அடிபிடியில் விற்றுத் தீர்ந்து விட்டன.

"40 இலட்சம் டிக்கெட்டுகள் பல மாதத்திற்கு முன்பே விற்றுத் தீர்ந்து விட்டன. இனி டிக்கெட் இல்லை" என்று அங்கு தினமும் அறிவிப்புச் செய்கின்றனர். இது வரை எந்த ஒலிம்பிக் போட்டிக்கும் இப்படி டிக்கெட்டுகள் விற்பனை ஆனதில்லை. இது ஒரு புதுச் சாதனையாகக் கருதப்படுகிறது.

இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால் அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா சார்பில் போட்டியிடும் வீரர்கள், வீராங்கனைகளின் குடும்பத்தினருக்குக்கூட டிக்கெட்டுகள் கிடைக்காமல் போய் விட்டதுதான். வீரர்கள் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் நிர்வாகம் இல்லை என்று கைவிரித்து விட்டது.





படத்தில் உள்ள சந்தெர்ஸ் அமெரிக்காவைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை ஆவார். இவர் நிச்சயம் தங்கம் வெல்வார் என்று இப்போதே சொல்லத் தொடங்கி விட்டனர்.

"அதைக் கேட்கக் கேட்க மனதுக்கு சந்தோஷமாக இருந்தாலும் நான் தங்கம் வெல்வதை நேரில் பார்க்க என் பெற்றோர்களுக்கு டிக்கெட் கிடைக்கவில்லையே," என்று இவர் தினமும் வருந்திக்கொண்டிருக்கிறார்.

## இப்படித்தான் போட வேண்டும்

★ தலைவலிக்காகப் போட்டுக் கொள்ளும் மாத்திரைகளை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது. இதனால் வயிற்றுப்புண் ஏற்படும். சிறிது பாலுடன் சாப்பிடலாம்.
★ எப்பொழுதும் மாத்திரையுடன் கோப்பி குடிக்கக் கூடாது.
★ உடலை இளைக்கச் செய்யும் மாத்திரைகளை மாலை ஐந்து மணிக்குப் பின்னர் சாப்பிடக் கூடாது.
★ கருவுற்ற பெண்கள் டாக்டரின் அனுமதியின்றி மாத்திரைகளைச் சாப்பிடக் கூடாது.
★ விட்டமின் மாத்திரைகளை அதிகமாகச் சாப்பிடுவது கெடுதல்.
★ குழந்தைகளுக்குத் தூக்கத்தில் மருந்தைக் கொடுக்காதீர்கள்.



★ வாகனங்கள் ஓடும் போதும், இயந்திரங்களின் அருகே வேலை செய்யும் போதும் மருந்து சாப்பிடாதீர்கள்.

★ மருந்துகளைக் குளிர்ந்த இடத்திலேயே வையுங்கள்.
★ குழந்தைகளுக்கு பேதி மருந்து அடிக்கடி கொடுக்காதீர்கள்.
★ சாதாரண தேமல், காயம் ஆகியவற்றிற்கு பென்சிலின் போன்ற மேல் பூச்சுக்களைத் தடவாதீர்கள்.
★ நீங்கள் சாப்பிட்டு உங்கள் உடம்புக்கு ஒத்துக்கொண்ட, ஒத்துக்கொள்ளாத மருந்துகளின் பெயர்களை டயரியில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.
★ கண்ணாடிப் போத்தலில் உள்ள மருந்துகளின் உள்ளே கண்ணாடி உடையாமல் உள்ளதா எனப் பார்த்துக் கொள்ளுங்கள்.
★ மருந்துகளின் உபயோகப்படுத்தும் காலம் எவ்வளவு வருடம் எனப் பார்க்கவும்.
★ மருந்துகளைக் கரண்டியில் அளவாக எடுத்து பிறகு நீர் கலக்க வேண்டுமானால் கலந்து சாப்பிடவும்.
★ மருந்து-மாத்திரைகளைத் தனித்தனியாக வைத்துக்கொண்டு நேரப்படி சாப்பிட வேண்டும்.

## பெண்ணின் வளர்ச்சி நிலைகள்



சாதாரணமாகப் பெண் குழந்தைகள் ஒரு வயதில் அல்லது எட்டு வயதில் வருஷத்திற்கு இரண்டு அங்குலம் என்ற கணக்கில்தான் வளருவார்கள். ஒன்பதாவது வயதில் உயர வளர்ச்சி சிறிது தாமதப்படுகிறது. ஒன்பது பத்து வயதுகளில் வருடத்திற்கு ஒன்றரை அங்குலம்தான் வளருகிறார்கள்.

பதினொராவது வயது முதல் வருடத்திற்கு மூன்று அங்குலம் அளவு கூட அதிகபட்சமாக வளரத் தொடங்கிவிடுவார்கள். மொத்த உயரமும் 20 வயதுக்குள் பூர்த்தியாகிவிடுகிறது.

இருபத்தியோரு வயதுக்குப் பின்னரே பெண் இல்லற வாழ்வுக்கு உடல், உளரீதியாக தகுதியடைகிறாள்.

## பளுதூக்கும் வீராங்கனைகள்

### மல்லேஸ்வரி—குஞ்சராணி



இந்தியாவின் வீராங்கனைகளான மல்லேஸ்வரி, குஞ்சராணிதேவி ஆகியோர் உலகில் பளுதூக்கும் வீராங்கனைகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர்.

உலகப் பளுதூக்கும் அமைப்பின் அதிகாரபூர்வ பத்திரிகை அதனை அறிவித்துள்ளது.

சமீபத்தில் தென்கொரியாவில் நடைபெற்ற ஆசியப் போட்டியில் மல்லேஸ்வரியும், குஞ்சராணியும் தங்கம் வென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவரும் குவித்துள்ள வெற்றிகளின் எண்ணிக்கை சர்வதேச அளவில் அதிகமாக இருப்பதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

சர்வதேசப் போட்டிகளில் குஞ்சராணி 12 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார். ஆசியப் போட்டியில் முதல் தங்கம் வென்ற இந்திய வீராங்கனையும் அவர்தான்.

இஸ்தான்புல்லில் நடைபெற்ற உலக பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டியில் மல்லேஸ்வரி பட்டம் வென்றார். 54 கிலோ எடைப்பிரிவில் மல்லேஸ்வரி அதிகபட்சமாக 197.5 கிலோ பளுதூக்கி முதலிடத்தில் இருக்கிறார்.

குஞ்சராணி 46 கிலோ எடைப்பிரிவில் அதிகபட்சமாக 170 கிலோ பளுதூக்கி முதலிடம் பெற்றுள்ளார். குஞ்சராணி இந்திய பொலிஸ் பிரிவில் இன்ஸ்பெக்டராக பணியாற்றுகிறார்.

## டெண்டுல்கருக்கு மற்றொரு விருது

இந்தியாவில் ஆண்டு தோறும் சிறந்த கிரிக்கெட் வீரர்களை தெரிவுசெய்து 'சன்கிரேஸ் மபத்லால்' விருது வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த நாலு வருடமாக இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வருடத்திற்கான மபத்லால் விருது சச்சின் டெண்டுல்கருக்கு கிடைத்துள்ளது.

அதன் மூலம் ரூபா ஒரு இலட்சம் பரிசுத்தொகை டெண்டுல்கருக்கு கிடைத்துள்ளது.

இது தவிர கடந்த வருடம் உள்நாட்டு- மற்றும் சர்வதேச போட்டிகளில் சிறப்பாக விளையாடியதற்காக இந்தியாவின் பல்வேறு நிறுவனங்கள் டெண்டுல்கருக்கு பரிசுகளை வழங்கியுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் ஒரு இலட்சம் ரூபா.

அஜய் ஜடேஜாவுக்கு 35 ஆயிரம் ரூபாயும், அசாருதீனுக்கு 34 ஆயிரம் ரூபாயும் பரிசுத் தொகையாகக் கிடைத்திருக்கிறது. பல தனியார் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து அந்தப் பரிசுத் தொகைகளை வழங்கியுள்ளன.

'மபத்லால்' விருதை பெற்றுள்ளது மூலம் டெண்டுல்கரின் புகழ் மகுடத்தில் மற்றொரு வைரக்கல் பொறிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டெண்டுல்கரை கப்டனாக்க கவாஸ்கர் படாதபாடு பட்டு வருகிறார். அசாருதீன் மீது கவாஸ்கர் நடத்தி வரும் விமர்சனத் தாக்குதல்களுக்கு டெண்டுல்கரின் பதில் என்ன?



"அசாருதீனுடன் எனக்கு நல்ல உறவு இருக்கிறது.. நல்ல மரியாதையும் இருக்கிறது. நாம் இருவரும் கலந்தாலோசித்தே செயற்பட்டு வருகிறோம். கவாஸ்கர் சொல்லும் கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்துக்களாகும்.

அசாருதீன்மீது நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அவரை கப்டனாக நீடிப்பதில் எனக்கொன்றும் வருத்தமில்லை. கப்டன் பதவி லேசுப்பட்டதல்ல. அதனை அசாருதீன் திறமையாகச் செய்து வருகிறார்" என்று கூறியுள்ளார் சச்சின் டெண்டுல்கர்.

ஆனாலும் கவாஸ்கர்மீது டெண்டுல்கருக்கு இருக்கும் பிரியம் ஒன்றும் இரகசியமானதல்ல. அதனால் கவாஸ்கர் சொல்வதையெல்லாம் டெண்டுல்கர் ஆதரிப்பார் என்று அர்த்தமுமல்ல.

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 18

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

★ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
★ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
★ பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
★ முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com




## பண்டிகைகள்



ஒன்றையொன்று
மென்று
விழுங்கும்
விலங்கினம்.....

விதிவிலக்கல்ல;
மனிதனும்
விலங்கினமே!

ஆயிரமாயிரம்
ஆண்டுகளிடையே....
மானிட மந்தைகளுக்கு
வழிகாட்டியாய்,
சில
மானுடங்கள்.

இன்னும்
எத்தனையோ
மனித ஆசான்கள்
மரணித்துப் போனார்கள்;
கூடவே
மனிதமும்.....!

அத்தனை பேருக்கும்
விழா எடுப்போம்;
பிறப்புக்கும்
இறப்புக்குமாக.

விடியும்வரை
கொண்டாடுவோம்;
விருந்துண்போம்;
மற்றுமொரு
பண்டிகை தினத்தை
எதிர்பார்த்து.....!

இன்னும் இன்னும்
புடவைக்
கடைக்காரனுக்கு மட்டும்
சந்தோசமாக......!

கருங்கொடியூர் கவியூரன்.

## இனிதாய் ஒரு கனவு

நாலா பக்கமும்
நாறிய
என் நாடு
வசந்தத்தை
வளம் படுத்திக் கொண்டது...!
கருணாரத்னவின்
மகளுக்கும்....
கனகசபையின்
மகனுக்கும்...
அபூபக்கரின்
பேத்திக்கும்....
அய்யாத்துரையின்
பேரனுக்கும்.....
திருமணம் இனிதாய்
நிறைவேறியது...!
வணக்கஸ்தலங்கள்
ஒன்றாயின...!
மதங்கள் மறுப்புத்
தெரிவிக்காமல்
மவுனமாய் கலந்தன...!
மொத்தத்தில்
எம்மதமும் சம்மதமாய்
போனது...!
கண்டியில் கலகலப்பாய்
தமிழும்...
யாழ்ப்பாணத்தில்
சிங்களமும் சிரித்தன...!
உயிரினும் மேலான
அடையாள அட்டை
அட்ரலை தொலைத்தது..!
ஆட்சியில்
சுமனவீரவும், சுந்தரலிங்கமும்.
சுல்தானும்
அமரும் வேளை
எங்கிருந்தோ
கேட்டவெடிச்சத்தம்
என்
இனிய கனவை
கலைத்தது...!

கரம்பைஎம்.எச்.எம்ய.ஹரிஸ்-புத்தளம்.

## மாங்காய் மடையர்களுக்கு...



உயிர் போகும்
பிரச்சனைகள்
ஊர் முழுக்க
இருக்கையிலே
காதல்,காதலென்று
காலதேய அலையும்
மாங்காய் மடையர்களுக்கு...!

♣

சினிமாவில்
வருவதுபோல
காதல் என்றும்
சந்தோஷமானதல்ல...

♣

கட்டிப்பிடிப்பதும்,
முத்தம் கொடுப்பதும்,
மரத்தைச் சுற்றி
ஓட படிப்பதும்,
புற்தரையில்
மணிக்கணக்கில்
உருண்டு புரள்வதும்
சினிமாவுக்கு
பொருந்தும்;
வாழ்க்கைக்கல்ல!

♣

நீங்களாக ஒன்றை
காதல் என்பீர்கள்...
கற்பனை செய்வீர்கள்
காலம் கடந்தபின்
'தோல்வி' எனச்
சொல்லி
தாடி வளர்ப்பீர்கள்!
"கவிதை" எனச்
சொல்லி
ஒப்பாரி வைப்பீர்கள்!

♣

கவனியுங்கள்...!
காதல் என்பது
தேடினால்
கிடைக்காது!!

எம்.சுரேஷ்.

## கடியரங்கம்



"செடியில் பூக்காத பூ என்ன பூ?"
"ஷாம்பூ"

♣

"கடையிலே போய் ஐந்து சாமான்கள் வாங்கிவரச் சொன்னேன்; நாலுதான் வாங்கி வந்திருக்கான்."
"யார்?"
"என் ஒன்றுவிட்ட தம்பி."

♣

"ஹிட்லர் படம் எடுத்திருந்தா என்ன பெயர் வைத்திருப்பார்?"
"எவன் செத்தா எனக்கென்ன?"

♣

"எங்கள் டி.வி.யில் வரிவரியாக் கோடு வருது?"
"பட்ஜெட் சமயத்திலே அப்படித்தான் வரும்"

♣

"பொதுத் தேர்தல் நடக்குமா?"
"எப்பவும் நடக்காது. அதுக்குத்தான் கால் இல்லையே!"

♣

"ஒரு சின்னப்பாலம். சைக்கிள்தான் போகமுடியும். ஆனால் லொறிக்காரர் போயிட்டார்."
"எப்படி?"
"லொறியை விட்டு இறங்கி."

♣

**ஆசிரியர்**-தாமரை இலையில் ஏன் தண்ணீர் நிற்பதில்லை?
**மாணவன்**-தண்ணீருக்குக் கால் இல்லையே, அதுதான்.



♣

**அவர்** -ஏங்க, சோறு எங்கே விக்கும்?
**மற்றவர்**-தொண்டையில்.

♣

"புகைப்படத் தொழில் முன்னேற எது தேவை- திறமையா? அதிஷ்டமா?"
"இரண்டுமேயில்லை; கமராதான்."

♣

**மனேஜர்**-அலுவலகத்துக்கு அடிக்கடி தாமதமாய் வருகிறாயே, உன் பெயர் என்ன?
**அவன்**-'சிலோ' சனா!

♣

**அவர்**-அந்த ஆள் ஏன் குதிச்சு குதிச்சுக் கும்பிடுகிறார்?
**மற்றவர்**- அவர் ஒரு பக்தி'மான்'.!!

♣

**அவன்**-சட்டை புதுசா இருக்கே, தீபாவளிக்கு எடுத்ததா?
**நண்பன்** -இல்லை, எனக்கு எடுத்தது.

♣

"குஷ்புவின் இனிஷியல் என்ன தெரியுமா?"
"என்ன?"
"என்"
"எப்படிச் சொல்கிறாய்?"
"கூடையிலே என்ன பூ...குஷ்பு, 'என்'குஷ்பு என்று பாடறாங்களே."

♣

"பொலீஸ் மரியாதை கொடுக்கும் பாடகர் யார் தெரியுமா?"



"தெரியாதே."
"எஸ்.பி,பாலசுப்பிரமணியம்."

♣

"அதிஷ்டமில்லாத நகரம் எது?"
"லக்-நோ."

♣

**அவள்** -என்ன இண்டர்வியூ பண்ணாமல் என் முகத்தையே பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்?!!
**அதிகாரி**-இது 'நேர்முக' த் தேர்வும்மா. கொஞ்சம் பேசாமல் இரு.

♣

**காதலன்**- கண்ணே என் நெஞ்சைத் தொடுற மாதிரி ஒரு வார்த்தை சொல்லேன்?
**காதலி**-பனியன்.

♣

**அவன்**-நீர் இல்லாத ஆறு எது?
**நண்பன்**-இலக்கம்-ஆறு(6).

♣

**அவன்**-பேய்க் கதை எழுத்தாளர் என்ன சொல்லிவிட்டுப் புறப்படுவார்?
**நண்பன்**-தெரியாதே
**அவன்**-'பேய்'ட்டு வர்றேன்னு.

♣

**கலா**-துரு துருவென்று இருக்கும் ஆட்களுக்கு என்ன செய்யலாம்?
**மாலா**-மண்ணெண்ணெய் போடலாம்.,

## நீ எனதானால்...!

அனேகமாய்
என் "டைரியின்"
எல்லாப் பக்கங்களிலுமே
உன்னைப் பற்றியே
எழுதுவேன்!
❤X❤
என்
இதயத்திண்ணையில்
ஊத்துண்டுகிடக்கும்
காதல் தேன்துளிகளில்
நிறையவே
உன்
ஞாபக ஈக்களோ
மொய்த்துக்கிடக்கும்!

என்
உடம்பிலுள்ள
ஒவ்வொரு
உரோம நுனிகளும்
உனக்காகவே
வியர்வைத்துளிகளை
விரும்பிச் சுரக்கும்!
❤X❤
அந்திவானத்தின்
அழகையொத்த
உன்
முகவெட்டினையும்

மேகத்தைப்பிளந்து
பளிச்சிடும்
மின்னல் கீற்றுகள்
மாதிரியான
உன்
கண்சிமிட்டல்களையும்
தென்றல் காற்றில்
அசைந்தாடும்
கொடியினைப் போன்ற
உன் அசைவினையுமே
அடிக்கடி
நான்
அசைபோடுவேன்!
❤X❤
சுருங்கக்கூறின்,
பனிக்குடம் சுமந்து
பரவசமுறும்
புல் நுனிகள் மாதிரி
உன்
நினைவுகள் சுமந்தே
நான்
நிம்மதிபெறுவேன்.

காவத்தமுனை-ஹாருன்.

## மருண்டு நெழியும் மானுடப் புழுக்கள்



அந்திப்பொழுதின்
கருக்கலுக்குள்
அர்த்த ராத்திரி
கண்சிமிட்டும்....!

தூக்கம் கலைந்த
தெருவிளக்குகள்
மாய்ச்சல் முறித்து
மாறிப்படுக்கும்....!

ஊரே
உயிர்ப்பை இழந்த
ஊதற் பிணமாய்
உறங்கிக் கிடக்கும்....!

உதிர்பார்க்காது
எங்கோ சப்தம் கேட்க
காதைப் பிளக்கும்
அவலக் குரல்கள்....!

கலைந்து சிதறும்
பறவைக் கூட்டம்
அலைச்சல் கொண்டு
அபயம் தேடும்....!

ஊரைத் தேடி
தெரு நாய்க் கூட்டம்
ஊளையிட்டு
அபாயம் அறிவிக்கும்....!

கரியாய்ப் போன
இரவுக் காட்டில்
மருண்டு நெழியும்
மானுடப் புழுக்கள்....!

வாகன சப்தம்
வருவது கேட்டு
வாசற்கதவுகள்
தாழ்ப்பாள் போடும்....!

பதற்றம் கொண்ட
பருவப் பூக்கள்
ஊரின் நடுவே
ஒன்றாய்க் கூடும்....!

என்ன நடக்கும்
எந்த நேரம்
என்று சனங்கள்
ஏங்கித் தவிக்கும்....!

திண்ணைக் கட்டில்
சுருண்டு படுத்தும்
கண்ணை இமைகள்
மூடமறுக்கும்....!

ஓரிரவுக்குள்
ஓராயிரம் யுகங்களை
நினைவுறுத்திட
நெருப்பாய்
உதிர்த்தும்....!

சற்றிவளைப்பில்
ஒன்று கூடி
இரையறுக்கும்
மனித மந்தை....!

-ஓட்டமாவடி இஸ்மாயில்-



## அகதி வாழ்வு



ஆகாயம் எங்கள் வீடு
நிலா வெளிச்சத்தில்
எம் வாழ்வு...!

நீரும், இரத்தமும்
ஒன்றாய் ஓட
விரியும் ஆயிரம் விழிகள்
உறக்கமின்றி அழும்.....!

இடியோசை கேட்டு
அள்ளிக் கொண்டோடும்
அன்னையின் துயரும்
இதய அவலமும் கண்டு
இடர் கூட துயர் கொள்ளும்.

பள்ளம்–மேடு ஒன்றாகும்.
அத்திவாரமே மிஞ்சும்.

மனித ஓலம் கேட்டு
பூக்கள் இதழ் உதிர்க்கும்.
காற்றும் இங்கு
கண்ணீர் சிந்தும்.....!

உயிர் வரை
பசி உதைக்கும்.

மழை வெள்ளம்
ஒரு பக்கம்;
பசி மயக்கம்
மறு பக்கம்;
திசை தெரியாத
இருள் நீள
தொடரும் துக்கம்!

ஜெயந்தி ஜெய்சங்கர்,
கொழும்பு-13

## சபா நாயகி

காதல் சபைக்கு
நான் ஒரு
கவன ஈர்ப்புத் தீர்மானம்
கொண்டு வருகிறேன்...!
கண்ணீர் வெள்ளத்தில்
கரைந்து கரைந்து
என் கன்னச் சம வெளி
காணாமல்
போய்க்கொண்டிருக்கிறது...

நெஞ்சம் மட்டும்
உன் நினைவாலேயே
மூழ்கிக் கொண்டிருக்கிறது...
காற்று வீசும் போதெல்லாம்
நெருப்பு வளர்வதைப் போல்
உன்னைப் பற்றிய
கனவுகள் எழும்போதெல்லாம்
எனக்குள்ளே
கவலைதான்
பெருகிக் கொண்டிருக்கிறது...

கணங்கள்
உன் நினைவுகளாகவே
மலர்ந்து போயின...
நாட்கள்
உன் கனவுகளாகவே
கலைந்து போயின!
நெஞ்சம்!
நெஞ்சம்
உன் நிழல்களாகவே
உதிர்ந்து போயின!

இப்போது....
இழப்பின் சோகம்
என்னிதயத்தை சிதைக்கிறது....!
பழகியோர் மத்தியில்
அந்நியப்பட்ட துன்பம்
என்னை வதைக்கிறது!
இன்னும்
கண்டன முறைப்பாடு ஒன்றும்
என் கணக்கில் இருக்கிறது.....!

உன் தந்தையின்
கோப நெருப்பில்
இந்த
ஏழையின் இதயம்
இறந்து கிடக்கிறது....
எனினும்
நீ என்னை
தொடாமலேயே
தொலைந்து போயிருப்பதும்

என்னிதயத்தில்
இருந்து கொண்டே
என்னை நீ
வதைப்பதும்
உன் காதல் சபையின்
நியாயத் தீர்ப்பா...? சொல்...!

எம்.ஏ. இசார்தீன்,
அட்டாளைச்சேனை-10.

## இந்த வாரம் உங்கள் பலன்

(24.12.95 முதல் 30.12.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | -சூரியன், புதன், வியாழன், வெள்ளி. |
| மகரம் | -செவ்வாய். |
| கும்பம் | -சனி. |
| மீனம் | -கேது. |
| கன்னி | -இராகு. |

★ சந்திரன்-மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணத் தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| சனி- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்- உறவினர் மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | காலை 7 மணி |
| புதன்- பணவரவு, செய்தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் குறை கேட்டல், மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- முயற்சி பலிதம், பணவரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| புதன்- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- முயற்சி பலிதம், தொழில் வருத்தி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| திங்கள்- முன்னேற்றம், வீண் குறை கேட்டல். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணத் தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, பணவரவு. | மு.ப. 9 மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 10 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- மனக் கவலை, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பெரியோர் பகை. | பி.ப. 2 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- தூரஇடப் பயணம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- எதிர்ப்பு குறையும், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| சனி- பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முன்னேற்றம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- கௌரவக் குறைவு, காரியத்தடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மனமகிழ்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- பணக் கஷ்டம், கடன் படல். | காலை 6 மணி |
| வெள்ளி- பெண்கள் சகாயம், மனப் பயம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் நஷ்டம், பணமுடக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், காரியத்தடை. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ச்சி தடை, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- இடர் நீங்கும், கவலை குறையும். | காலை 6 மணி |
| சனி- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மனப் பயம். | காலை 6 மணி |
| புதன்-தூர இடப் பயணம், செய்தொழில் விருத்தி. | மு.ப. 9 மணி |
| வியாழன்-பண வரவு தடை, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, வீண் குறை கேட்டல். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன் - தொழில் உயர்ச்சி, செய்தொழில் நன்மை. | காலை 6 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனச்சஞ்சலம். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்சி. | காலை 6 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் துயர், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| வியாழன்-பயனுள்ள செயல், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- எதிர்ப்பு நிலை, மனக் கவலை. | காலை 7 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)


| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, வீண் குறை கேட்டல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| புதன்- காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வெள்ளி - தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## சின்னத்தம்பி படியடா!

சின்னத் தோணி போல வானில்
பிறை நிலவு நவழுது
கண்ணைச் சிமிட்டி நட்சத் திரங்கள்
மெல்ல மெல்ல அழைக்குது.

தென்னங் கீற்று மெல்ல ஆடி
சின்னக் கிளியை எழுப்புது
வண்ணக் கனவு கலைந்த தென்று
காகம் ஒன்று கரையுது.

சின்ன விளக்கில் சின்னத் தம்பி
என்ன அங்கே படிக்கிறான்?
சிந்தை தனை எங்கோ விட்டுக்
கண்ணை மட்டும் பதிக்கிறான்!

என்ன உலகில் நிகழ்ந்த போதும்
இனிய தம்பி படியடா!
உன்னை உலகம் வாழ்த்தும் நாளை:
எடுத்து வை நல் அடியடா!

க.கோணேஸ்வரன்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஏன் பயம் இல்லை



ஓர் ஊரில் அமரநாதர் என்ற சாது ஒருவர் இருந்தார். இவர் மிகுந்த தெய்வ பக்தி கொண்டவர். அமரநாதர் அவ்வூர் மக்களுக்கு ஆன்மீக விஷயங்களையும், நல் உபதேசங்களையும் கூறி வருவார். இவருக்கு சின்மயானந்தா என்ற சீடன் இருந்தான்.

ஒரு சமயம் அமரநாதரும், சின்ம யானந்தரும் பக்திச் சொற்பொழிவாற்று வதற்காக அடுத்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்கள் சென்று கொண்டிருந்தது கொடிய மிருகங்கள் வசிக்கும் ஒரு காட்டுப்பாதை. அந்த வழியில் ஒரு சிறு ஆலயம் இருப்பதைக் கண்டார் சாது.

"சின்மயானந்தா! இந்தப் பயங்கரக் காட்டில் ஒரு ஆலயம் இருக்கிறது பார்த்தாயா? இந்த இடங்களில் திக்குத் திசை தெரியாமல் தவிக்கின்ற மக்களின் உள்ளங் களில் இறைவனைப் பற்றிய ஞாபகத்தை ஏற்படுத்த இந்த ஆலயம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. நாம் இங்கிருந்து பூசை செய்து விட்டுச் செல்ல லாம்," என்றார் சாது.

அந்த ஆலயத்தின் முன்னால் உள்ள மரத்தின் கீழே அமர்ந்த சாது கண்களை மூடி இறைவனைத் தியானிக்கத் தொடங் கினார்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. சாது ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். சீடன் அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது- சலசலவென்று செடி கொடிகள் அசையும் சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையைப் பார்த்தான் சீடன்.

ஒரு பெரிய சிங்கம் அவர்களை நோக்கி கர்ஜித்தவாறு வந்தது.

"ஐயோ சிங்கம், சிங்கம்," என்று கத்திய சீடன் விருட்டென்று ஓடி அருகில் இருந்த மரத்தில் ஏறிக் கொண்டான்.

ஆழ்ந்த தியானத்தில் இருந்த சாதுவுக்கு, சீடன் கத்திய சத்தமும், சிங்கத்தின் கர்ஜனை யும் கேட்டது. ஆனாலும் அதைக் கேட்டு அவர் அஞ்சவில்லை. சிறிதளவு சலனம் கூட ஏற்படவில்லை. தொடர்ந்தும் இறை வனைத் தியானித்துக் கொண்டே இருந்தார்.

சிங்கம் அவர் அருகே வந்து அவரை உற்றுப் பார்த்தது. அந்தக் காட்சியை மரத்தின் மேல் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்த சீடனுக்கு இரத்தம் உறைந்து விட்ட உணர்வு.

'ஐயோ சிங்கம் குருவை அடித்துக் கொன்று தின்னப் போகிறதோ?' என்று நினைத்துப் பயந்தான்.

ஆனால் அவன் நினைத்தது போல் எதுவும் நடக்கவில்லை.

சிங்கம் சாதுவைச் சில வினாடிகள் பார்த்து விட்டு அமைதியுடன் திரும்பிச் சென்றது.

அது போய் நீண்ட நேரத்திற்குப் பின் சீடன் மரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

இறைவழிபாட்டை முடித்த சாது, சீடனைப் பார்த்து,

"சிஷ்யா புறப்படலாமா?" என்று கேட்டார்.

"குருவே! சற்று நேரத்திற்கு முன்பு ஒரு பெரிய சிங்கம் வந்தது. நல்லவேளை நம்மை ஒன்றும் செய்யாமல் திரும்பிப் போய் விட்டது. அது வந்து சென்றதை இப்போது நினைத்தாலும் பயமாக இருக்கிறது." என்றான் சீடன்.

பிறகு அவனே தொடர்ந்து, "சிங்கம் வந்ததை அறிந்தும் எப்படிக் குருவே சிறிது கூடப் பயப்படாமல் அப்படியே இருந்தீர்கள்?" என்று கேட்டான்.

அதற்குப் புன்னகை ஒன்றையே பதிலாக அளித்த சாது திடீரென்று, "ஆ..." என்று அலறியபடி தனது காலைத் தூக்கினார்.

சீடன் பதறிப் போய்,

"என்ன குருவே? என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"ஒரு எறும்பு கடித்து விட்டது" என்றார் சாது.

"குருவே! கொடிய விலங்கான அவ்வளவு பெரிய சிங்கம் வந்தது தெரிந்தும் பயப்படாத தாங்கள், இந்த அற்ப ஜந்தான எறும்பின் கடிக்கு அலறுகிறீர்களே!" என்று கேட்டான் சீடன்


அதற்கு அமரநாதர்,

"சிஷ்யா! சிங்கம் வந்த போது நான் கடவுளோடு சேர்ந்திருந்தேன். அதனால் எனக்குப் பயம் வரவில்லை. ஆனால் இந்த எறும்பு கடித்தபோது நான் ஒரு மனிதனோடு அல்லவா சேர்ந்திருக் கிறேன். அதனால் தான் அலறி விட்டேன்" என்றார்.

மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள வேறுபாட்டை அப்போது தான் உணர்ந் தான் சீடன் சின்மயானந்தா.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!





மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.12.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 122
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 119

பரிசுக்குரியவர்:
ஜே. மேரி வேணி ஷாமினி
குட்ஷெபேட் கொன்வேன்ற் கொழும்பு-13.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| வே. ரஜீவிதா<br>இல 131, கருணைபுரம், வாழைச்சேனை. | நியோமி மரியநாயகம்<br>புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை. |
| ரி.கிஷாந்தினி<br>சக்கடத்தார் வீதி, களுவாஞ்சிகுடி. | முகமட் சிபான்<br>மத்திய கல்லூரி (தேசியபாடசாலை), அக்குறனை. |
| ஆர். எவ்.பிர்தௌசியா<br>முஸ்தபாமுஸ்லிம் விதியாலயம் உள்பதபிடிய. | எம். மொஹமட் பறூஜான், கரு/ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை-பாணந்துறை. |
| பீ. தீபன்<br>க/கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி. | ஷகிலா மோகறூவ்<br>இல.11/5 ஜெயசுந்தர லேன், நாவலபிட்டி. |
| சூ. ரூபினி குரூஸ்<br>புனித அந்தோனியார் ம.வி., மூதூர். | மு.இ.மு. ஷாம் ஷிஹாட் முஸ்லிம் கலவன் பாடசாலை, அக்கரைப்பற்று-06. |

## செய்து பாருங்கள்



### மணற் கடிகாரம்

கடிகாரம் கண்டு பிடிக்கப்படாத காலத்தில் எல்லாம் இந்த மணற் கடிகாரம் தான் பயன்படுத்தப்பட்டது. இந்த மணற்கடிகாரத்தை இப்போது நாம் செய்யப் போகிறோம்.

மூடியுள்ள இரண்டு பிளாஸ்டிக் போத்தல்களில் கொஞ்சம் மணலை எடுத்துக்கொள்ளுங்கள். இப்போது சின்னத் துளை ஒன்றை இரண்டு மூடிகளின் நடுவிலும் போட்டுக்கொள்ளுங்கள். இப்போது படத்தில் உள்ளது போல் ஒரு போத்தல் மீது மற்றொன்றைக் கவிழ்த்து வையுங்கள். மேல் போத்தலில் இருந்து கீழ்ப் போத்தலுக்கு மணல் வருவதற்கு எவ்வளவு நேரமாகிறது என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள். இதுதான் மணற்கடிகாரம்.

நீங்கள் நேரம் குறித்து விளையாடும் போது இந்த மணற்கடிகாரத்தை வைத்துப் பார்க்கலாம்.

## நாடுகளும் சின்னங்களும்

| நாடு | சின்னம் |
|---|---|
| இலங்கை | வாளுடன் சிங்கம் |
| இந்தியா | சிங்கத்தின் தலைகள் |
| அமெரிக்கா | தங்கத்தடி |
| அவுஸ்திரேலியா | கங்காரு |
| அயர்லாந்து | ஹாப்ராக் மலர் |
| ஃபிரான்ஸ் | அல்லி |
| பிரிட்டன் | ரோஜா |
| கனடா | வெள்ளை அல்லி |
| டென்மார்க் | கடற்கரைச்செடி |
| ஈரான் | ரோஜா |
| ஜப்பான் | கூட்டுப் புழுக்கூடு |
| பாகிஸ்தான் | பிறை |
| ஸ்பெயின் | கருடன் |

## வாரம் ஒரு நாடு

### ஜப்பான்

| | |
|---|---|
| தலைநகர் | -டோக்கியோ |
| மக்கள் தொகை | - 12.52 கோடி |
| மொழி | - ஜப்பானிஸ் |
| எழுத்தறிவு | -99% |
| சமயம் | -ஸின்டோயிசம், பௌத்தம் |
| நாணயம் | -யென் |
| தனி நபர் வருமானம் | -19,642 டொலர். |

வரலாறு:

ஸிம்மு சக்கரவர்த்தியால் கி.மு. 660 இல் ஜப்பான் உருவாக்கப்பட்டதாக பழங் கதைகள் கூறுகின்றன. தொடர்ந்து மன்ன ராட்சி. முதலாம், இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் பங்கு கொண்டது. 1945 ஒகஸ்ட் 14ல் அமெரிக்காவுக்குக் கீழ் அடங்கியது. 1951ல் சான்பிரான்ஸிஸ் கோவில் வைத்து ஏனைய 48 நாடுகளுடன் ஜப்பான் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதைத் தொடர்ந்து 1952 ஏப்ரல் முதல் ஜப்பான் ஒரு சுய அதிகாரமுள்ள தனி நாடானது. அரசியல் நிர்ணய சபை (டயட்) இரண்டு அமைப்புக்களுடையது. இதன் ஆலோசனை யின் பேரின் சக்கரவர்த்தி பிரதமரை நியமிக்கிறார்.

பொருளாதாரம்:

மின்னியல், தொழில் நுட்பவியல் மற்றும் மோட்டார் வாகனத் தயாரிப்பில் அதி உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. வேதிப் பொருட்கள், துணிவகைகள் மற்றும் காகிதத் தயாரிப்பில் முன்னணி வகிக்கிறது. விவசாயத்திலும் குறிப் பிடத்தக்க தன்னிறைவு பெற்றுள்ளது. நெல், கோதுமை போன்றவை முக்கிய உற்பத்திகள். தங்கம், வெள்ளி மற்றும் செம்புச் சுரங்கங்கள் உள்ளன. சுற்றுலா முக்கிய வருமான மூலகங்களுள் ஒன்று.



உலகில் அதிக ஆயுள் உள்ளவர்கள் ஜப்பானியப் பெண்களே. இவர்களின் சராசரி வயது 82 ஆகும்.

## பூகம்பத்தில் சிக்கிய மாடு



அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவில் 1906ம் ஆண்டு பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. அப்பொழுது திடீரென்று நிலம் பிளந்துவிட்டது. அங்கே புல்மேய்ந்து கொண்டிருந்த ஒரு மாடு உள்ளே விழுந்து விட்டது. பிளந்த அந்த நிலம், அதே வேகத்தில் மூடிக் கொள்ள, மாட்டின் வால் மட்டும் வெளியே நீட்டிக் கொண்டு இருந்தது.

## ஒருவரிச் செய்திகள்

1. வரிவிதிப்பு இல்லாத நாடு-வடகொரியா.
2. காக்கைகள் இல்லாத நாடு-சிங்கப்பூர்.
3. ஆறுகள் இல்லாத நாடு-சவூதி அரேபியா.
4. பாம்புகள் இல்லாத நாடு-அயர்லாந்து.
5. வருமான வரி இல்லாத நாடு-குவைத்.
6. பிரதமரும், மந்திரிகளும் இல்லாத நாடு-சுவிற்ஸர்லாந்து.
7. இராணுவமே இல்லாத நாடு-ஹோஸ்டாரிக்.
8. பூட்டானில் டெலிவிஷன் இல்லை.
9. ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளில் தொழில் அமைச்சகம் இல்லை.
10. ஆபிரிக்காவிலும், அவுஸ்திரேலியா விலும் கரடிகள் இல்லை.

## கைரேகை



1901 ஜுலை மாதம் இங்கிலாந்தில், குற்றவாளிகளுக்கு மோசமான நாள் துவங் கியது. ஸ்கொட்லண்ட் யார்ட்டில் உள்ள லண்டன் பொலிஸ் அலுவலகத்தில் குற்றவா ளிகளின் கைரேகைகள் முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டது அப்போது தான்.

# விலை உயர்ந்த குற்றம்

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

பார்க்கர் ஸ்மித் உடனே வாசலருகில் நின்ற வர்களைக் கைகாட்டி அழைத்து, டெலிபோனுடன் இணைந்த ஸ்பீக்கர் சிஸ்டத்தை ஆன் செய்து, "வெஸ்லி, நீயா?" என்றார்.

"என்னை மன்னித்து விடுங்கள். தன் வாழ்நாளில் ஒருவனின் கற்பனைக்கு மீறிய தொகை அடையக் கூடிய சந்தர்ப்பம் வருமென்றால், அவன் மனம் மாறத்தான் செய்வான். மறுபடி மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்," என்ற வெஸ்லியின் குரலை மூவருமே பெரிய ஒலியில் கேட்டார்கள்

"வெஸ்லி, நான் சொல்வதை....."

தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்க... விரயமாகத் தட்டிப் பார்த்து விட்டு, "எண்ணி நான்கே நாட்களில் அவனைப் பிடிக்கவில்லை எனில் உயிர் வாழத்



தகுதியற்றவன். இதே நியுயார்க்கில்தான் எங்கோ ஒளிந்து கொண்டு பேசுகிறான். நான்கே நாட்கள்!"

"ஆல் த பெஸ்ட் மிஸ்டர் பார்க்கர்" என்று அவர்கள் புறப்பட்டார்கள்.

அவர்கள் போனதும் கதவைச் சாத்திவிட்டு, உள் அறைக்கு வந்து, கட்டிலில் படுத்திருந்த ரெய்ஸா அருகில் அமர்ந்து, அவள் நெற்றியைத் தடவி, "மிகவும் வலிக்கிறதா ரெய்ஸா?" என்று புன்னகைத்தார்.

★★★★

சென்னை

மாலை வெயில் பூமிக்கு மஞ்சள் நீராட்டு நடத்திக் கொண்டிருக்க.... ஜனங்கள் வெற்றிகரமாக ஞாயிறைக் கொண்டாட வாகனங்களில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டு வந்து பீச்சாங் கரையில் நிறுத்திக் குழந்தைகளைக் குதிரையேற்றம் பழக்கினார்கள். காதலிகளை சுதந்திரமாக அத்து மீறி உணர்ந்து பார்த்து "ஹவ் ஸாஃப்ட் யு ஆர் டார்லிங்" என்று வெள்ளையன் மொழியில் பொய்யாக வியந்தார்கள். ஈரக்காற்றை வாங்கிக் கொண்டு காதுக்குள் விட்டுக் கொண்டு சிலிர்த்துக் கொண்டார்கள்.

"சொல்லு சுசி?" என்றான் காரை விட்டு இறங்காத பரத்.

"என்ன சொல்றது?" என்றாள் காரின் பானெட்டின் மேல் அமர்ந்துகொண்டு கால்களை மாறி மாறி அசைத்துக் கொண்டு சுசிலா. தலையை ஒரு கொத்தாக வாரிப் பின் மண்டையில் இறுக்கியிருந்தாள். அதனால் முதுகெல்லாம் அலைவீசிக் கொண்டிருந்தது கூந்தல். ஜீன்ஸ் பாண்ட்டுக்குள் லூசான மஞ்சள் சட்டையை செலுத்தியிருந்தாள். பவர் இல்லாத தோசை சைஸ் கண்ணாடி அணிந்திருந்தாள்.

அருகே டயர் வண்டியில் மிளகாய்த் தோரணம் தொங்க பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் அவள் சட்டையின் முதுகில் 'OTHER SIDE OF THE HILLOCKS' என்று படிக்க வசதி செய்தது.

வாங்கின பஜ்ஜீயைக் கொண்டு, "இன்ஸ்பெக்டர் நியூட்டன்கிட்டே பேசினதிலேர்ந்தும், அந்த மிரட்டல் கேஸட்டைக் கேட்டதிலேர்ந்தும் நீ தெரிஞ்சிக்கிட்டது என்ன?"

"போலீஸ் இந்தக் கேஸ்ல ஒரு மி.மீ. கூட முன்னேறலை. கேஸட்டை ரெக்கார்டிங் தியேட்டர் எடுத்துப் போய் பெரிசா ஒலிக்க விட்டுக் கேட்டிருக்காங்க. ப்ரயோஜனமில்லை. ஜீவானந்தத்தைத் தொல்லைப் பண்ணிருக்காங்க. பணப் பார்சலை வாங்கிட்டுப் போனவன் காரைப் பத்தியோ, முஞ்சைப் பத்தியோ எதுவும் தேறலை. அன்னைக்கு நிகழ்ச்சி அமைச்சவங்களை, இன்னும் வந்தவங்களைப், போனவங்களை, கடலை வண்டிக்காரன், இளனி விக்கிற அம்மான்னு தொன்னூத்தி ரெண்டு பேரை விசாரிச்சதிலே ஒரே ஒரு தகவல் கிடைச்சிருக்கு. அது... இந்தக் கடத்தல்ல போட்டோகிராஃபரா நடிச்ச ஆசாமி நடுவில ஸ்டேஜை கிளிக் செஞ்சிட்டு, முதல் வரிசையில் உட்கார்ந்துக் கிட்டான்றதுதான். இதனாலேயும் ஒண்ணும் உபயோகம் இல்லை. அவன் எந்த வரிசையில உக்காந்திருந்தா நமக்கென்ன? கடத்திக்கிட்டுப் போன கார் நம்பரை யாராச்சும் பார்த்தாங்களா? கிடையாது. ஹோப்லெஸ் கேஸ் பரத். ஒரு வாரமா போலீஸே முழி பிதுங்குது."

"சுசி அன்னைக்கு நிகழ்ச்சிக்குப் போனேதானே? எந்த வரிசைல உட்கார்ந்தே?"

"மூணாவது வரிசைல"

"நீ அந்த போட்டோகிராஃபரை கவனிச்சியா?"

"ஒரே ஒரு ஆள் போட்டோ எடுத்திருந்தா கவனம் பட்டிருக்கும். ஏழெட்டுப் பேரு நின்னு எடுத்தாங்களே"...

"வீடியோ கவரேஜ் இருந்திச்சா?"

"நியூட்டன் விசாரிச்சதா சொன்னாரே. விழாக்காரங்க எடுத்த போட்டோஸ் பூரா பார்த்துட்டதாவும் சொன்னாரே... ஆடியன்ஸை போட்டோ எடுக்கலைன்னாரே..."

"சீக்கிரம் பஜ்ஜியை முடிச்சிட்டு வா சுசி. அந்த நிகழ்ச்சி அமைப்பாளர் ரத்தினத்தைப் பார்க்கலாம்."

"பாத்து?" என்று குதித்து இறங்கினாள். சுற்றி வந்து அவன் அருகில் அமர்ந்து கொண்டு டேஷ் போர்டிலிருந்து துணி எடுத்துக் கை துடைத்துக் கொண்டாள். வாக்மெனை அணிந்து கொண்டாள்.

பரத் ஸ்டார்ட் செய்து புறப்பட்டு வரிசையில் சிலை மாந்தர்களைக் கடந்து, பாலம் கடந்து, "ஏய், இன்னிக்குக் கொஞ்சம் தூக்கலா மேக்கப் செஞ்சிருக்கியா, காரை ஓரமா நிறுத்திட்டுப் பாஞ்சிடலாம்னு இருக்கு" என்றான்.

"ம்?" என்றாள் பாட்டுக்குத் தலையசைத்துக் கொண்டு.

"நல்ல வேளை! கேக்கலையா?"

★★★★

ரத்தினம் கூடத்தில் உட்கார்ந்து சிலேட்டில் பூனை வரைந்து தன் குழந்தைக்குக் காட்டிக் கொண்டிருந்தவன் கொடியில் இருந்து துண்டு உருவிக் கொண்டு போர்த்திக் கொண்டு, "என்ன வேணும் சார்?" என்றான்.

"சரவணகுமார் கடத்தப்பட்டது சம்மந்தமா விசாரிச்சிக்கிட்டிருக்கோம். ஐ ஆம் பரத். அன்னைக்கு எத்தனை பேர் ஃபோட்டோ பிடிக்க வந்தாங்க நிகழ்ச்சியை? அது மட்டும் சொல்லுங்க."

"உக்காருங்க சார். உக்காருங்க தங்கச்சி. பாபு! உள்ளே போயி..."

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம் சார்."

"என் சட்டையைச் கொண்டாரச் சொன்னேன். போடா கொண்டா. சார், நான் எல்லாப் பத்திரிகைக்கும் அழைப்பு போஸ்ட் பண்ணிருந்தேன். எங்க ஃபோட்டோ கிராஃபர் தவிர ஆறோ, ஏழோ வந்திருந்தாங்க. கல்கில கவர்ஸ்ரோறி பண்றதா கே.வி. ஆனந்த்னு ஒரு போட்டோ கிராஃபரும், ரிப்போர்ட்டரும் வந்திருந்தாங்க. மற்ற யாரையும் எனக்கு அறிமுகமில்லை."

மேலும் சில கேள்விகள் கேட்டுக்கொண்டு எழுந்து, "பக்கத்தில் போன் எங்க இருக்கும் சார்?"

"மாடி வீட்ல இருக்கு. ரெண்டு ரூபா கேப்பாங்க. என்னமோ லாட்ஜ் மாதிரி."

"பரவால்லை கொடுத்துடலாம்."

மாடி வந்து முதலிலேயே பணம் கொடுத்து விட்டு...

"ஹலோ, ஆனந்த் இருக்காரா? பேசச் சொல்லுங்களேன்."

காத்திருந்த போது டிவியில் கறுப்பு வெள்ளைப் படத்தில் சௌகார் ஜானகி அழுது கொண்டிருந்தார். பார்த்துக் கொண்டிருந்த அம்மாவும் விசும்பிக் கொண்டிருக்க...

"ஹலோ ஆனந்த், மூன்லைட் பரத் பேசறேன். நினைவிருக்கா? ஒண்ணுமில்லை. போனவாரம் சரவண குமார் நிகழ்ச்சியைக் கவர் செஞ்சி போனிங்களே, அது சம்மந்தமா போலீஸ் உங்களை வந்து பார்த்தாங்களா? எதுவும் கேட்டாங்களா?"

"இல்லையே..."

"சரி. நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. அன்னைக்கு ஆடியன்ஸை ஒரு ஸ்நாப் கூடத் தட்டலையா நீங்க?"

"இல்...இருங்க. ஒண்ணு தட்டினதா நினைக்கிறேன். டெவலப் பண்ணி தேவையானதை செலக்ட் பண்ணினது போக மிச்சம் டிராயர்லதான் இருக்கு. லைன்ல இருந்தா பார்த்துச் சொல்றேன்."

"இருக்கேன். ப்ளீஸ்.."

நாகேஷ் தமாஷ் பண்ணிக் கொண்டிருக்க... அம்மா விசும்பலை நிறுத்துவதாக இல்லை. அடுத்த சீனுக்காக அழத் தயாராக இருக்க..

"ஆமாம் சார். ஒரு ஷாட் அடிச்சிருக்கேன்."

"முதல் வரிசை தெளிவா இருக்கா பாருங்க."

"முழு வரிசையும் கவராகலை. ஒரு பகுதி தான்."

"வீட்ல டார்ச்சும் இருக்குதில்லே? ஒரு ஹெல்ப்! அந்த நெகடிவை எட்டுக்குப் பத்து இல்லைன்னா அதுக்கும் கூட கொஞ்சம் பெரிசா ஒரு காப்பி போட முடியுமா? இதோ இப்பவே வந்து வாங்கிக்கறேன். நைஸ் ஆஃப்யு"

புறப்படும்போது, "வர்றேண்ணா" என்றாள் சுசிலா.

காரில், "நான் தான் சரவணகுமாரைக் கடத்தப் போகிறவன்னு எழுதிக் கழுத்தில மாட்டிக்கிட்டு அவன் முதல் வரிசைல உக்காந்திருப்பான்னு நினைக்கிறிங்களா பரத்?"

"இப்படி டிஸ்கரேஜ் செய்யறதானா, இங்கேயே இறங்கிக்க. அதுசரி, காலைல வடபழனிக்கு எதுக்குப் போனே?"

"வாஹினில ஸ்க்ரின் டெஸ்ட் எடுத்தாங்க. ஹாலிவுட் படத்தில நடிக்கிறேன் பரத். தெரியாது? முதல்ல ஹீரோயின் ரோலுக்குத் தான் பார்த்தாங்க. நீ இவ்வளவு ட்ரெஸ் போட்ருக்கே, சரியா வராதுன்னுட்டாங்க. அப்புறம்..."

"அறுக்காதே சுசி. தாங்கலை."

★★★★

ஆனந்த் அந்தப் படத்தை பத்துக்கு பனிரெண்டு சைசில் பிரிண்ட் போட்டிருக்க... "இதோ" என்றான் அவசரமாக பரத்.

கழுத்தில் காமிரா மாலை அணிந்து அமர்ந்திருந்த சுபாவைக் "காமிரா மாட்டினவனெல்லாம் பையனைக் கடத்தினவனா? இவனுக்குப் பக்கத்திலே உக்காந்திருக்கிற இந்த ஃபாரினர் கூடத்தான் காமிரா மாட்டியிருக்கான்."

"இரு சுசி. அவசரப்படாதே. இந்த முதல் வரிசையிலே இதிலே கிட்டத்தட்ட இருபதுக்கு மேற்பட்ட நபர்கள் கவர் ஆகியிருக்காங்க. இதிலே காமிரா மாட்டின தமிழ் ஆளு இவன் ஒருத்தன்தான். கடத்தினவன் ஃபாரின் ஆசாமி கிடையாது. மேடைக்குப் பக்கமா வந்து போட்டோ எடுத்துட்டு, வந்து நாற்காலில உக்காந்துக் கிட்டதா ஸ்டேட்மெண்ட்டு. பார்க்கலாம். நேரா ஜீவா சாரைப் பார்த்துட்டு, நியூட்டனையும் பார்த்துடலாம். தாங்க் யு ஆனந்த். இதுக்கு அவசியம் பில் அனுப்புங்க. வர்றோம்."

ஜீவானந்தம், கொடுக்கப்பட்ட பூதக் கண்ணாடி வழியாக சுபாவை மேலும் பெரிது படுத்திப் பார்த்து, "இவன் சாயல்தான்னு நினைக்கிறேன். கார்ல உக்காந்த நிலையிலே சைடு போஸ்ல தான் பார்த்தேன். அதிக வெளிச்சமில்லை." என்றார்.

நியூட்டன் தன் உதவி ஆஃபிஸரை உடனே அழைத்து எல்லா போட்டோகிராஃபர்களையும் விசாரித்து விட்டோம் என்று பொறுப்பில்லாமல் சொன்னதற்குத் திட்டி விட்டு, "இதைப்பிரதிகள் எடுங்க. போட்டே கிராஃபரைத் பார்த்ததா சொன்ன ரெண்டு மூணு பேரை மறுபடிப் போய் "இதைக் காட்டி இவங்கதானான்னு கேளுங்க." என்றார்.

"அப்புறம் சார், இவனுக்கு ரெண்டு பக்கத்திலேயும் உட்கார்ந்திருக்கிறவங்க யாருன்னு விசாரிச்சி அவங்களை விசாரிக்கிறது நல்லதுன்னு படுது. அவன் அவங்கக்கிட்டே ஏதாவது பேசியிருக்கலாம். தன்னைப் பத்தி சகஜமா எதையாச்சும் சொல்லியிருக்கலாம். ஒரு சின்ன பாய்ண்ட் கூட அவன் இருக்குமிடத்தைத் தெரிவிக்கலாம்" என்றான் பரத்.

"யு ஆர் ரைட். நான் உடனே இதுக்கு டெப்யூட் பண்ணி அனுப்பறேன். ரொம்ப ஒத்துழைக்கிறிங்க. சந்தோஷம்."

"கிடைச்ச தகவலை நாளைக்கு எனக்குத் தெரியப் படுத்தினா நானும் சந்தோஷப்படுவேன் சார்."

"ஷ்யூர். ஐ'ல் டு. சுசிலா, உன்னைப் பார்க்கிறப்ப எனக்கு என் வந்தனா நினைவுதான் வருது. இதே முகம். இதே மாதிரி மூக்கு."

"வந்தனா எந்தக் காலேஜ் சார்?"

"காலேஜா? வந்தனா என் வைஃப்! என்ன ஒரு வித்தியாசம்? ஷி ஈஸ் ப்ளாக். ஆனா, ப்ளாக் ஈஸ் எ ப்யூட்டி யு நோ."

"வாஸ்தவம் சார். புஸ்தகத்தில வெள்ளைக் கலர்லயாப் பிரிண்ட் செய்றாங்க? மாதவி கூட கறுப்பு தான் சார்."

"மாதவி? யாரு? உங்க...."

"நோ. நோ. என் ஸ்டாஃப். வர்றோம் சார்."

சுசிலா புறப்படும் முன், "உங்க வைஃப் ஜீன்ஸ் போடுவாங்களா சார்?" என்றாள்.

"நோ, நோ சேலையைத் தவிர வேற எதுவும் உடுத்த மாட்டா."

"ஜாக்கெட் கூடவா?" என்று விட்டு ஓடி வந்து விட்டாள். "நாட்டி கர்ள்" என்று முதுகில் கேட்டுக் கொண்டு.

கார் ஓடும் போது, "நானும் பார்த்துக்கிட்டே இருக்கேன். என்ன கொஞ்ச நாளா மாதவி, மாதவின்னு பேச்சு பூரா நெடியடிக்குது? இந்த மாசத்தோட சம்பளம் கொடுத்து நிறுத்திடட்டுமா? அவளை?"

"ஒரே பசுமையா? அப்ப நான்?"

"நீ டார்க் பசுமைன்னு வச்சிக்கலாம். அது விளைச்சல்னா, இது அமோக விளைச்சல்ன்னு வச்சிக்கலாம்" என்று அவள் தொடையில் கை வைக்க...

"முதல்ல கையை எடுத்துக்கலாம்." என்றாள்.

★★★★

பம்பாய்.

சௌபாத்திக் கடற்கரையில் நடமாட்டம் தவிர்த்த இடத்தில் பெட்ஷீட் விரித்துப் படுத்துக் கொண்டிருந்தான் மார்ட்டின்-ஆஷா மடியில். ஆஷா அவன் மார்பு ரோமங்களில் விரல் நண்டு நடக்க விட்டுக் கொண்டிருக்க, அவள் கழுத்துச் செயினைப் பல்லால் கடித்துக் கொண்டே, "ஆஷ், நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்றான்.

"இந்த தாடியோடயா?"

"இல்லை, ஷேவ் பண்ணிட்டு."

"புதுசா என்ன அனுபவம் கிடைச்சிடும் மார்ட்டின்?"

"யோசிச்சுப் பார்த்தா ஒண்ணுமில்லைதான் ஆஷ்."

"பின்னே எதுக்கு?"

"நீயும், நானும் எப்பவும் பக்கத்திலேயே இருக்கலாமே..."

"அலுத்துப் போய்டாது?"

"கல்யாணம் பண்ணிக்கிட்டவங்கெல்லாம் அலுத்துப் போயிடறாங்களா?"

"சிலர் சொல்லிக்கிறாங்க. சிலர் சொல்லிக்கிறதில்லை. ஆனா அதான் நிஜம் மார்ட்டின். ஒரு சில கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு சகிச்சிக்கிறாங்கன்னு நினைக்கிறேன். எனக்குக் கட்டுப்பாடு பிடிக்கலைப்பா. பொய் இல்லாத பழக்கம் தான் புடிச்சிருக்கு. நீ தொடற முதல் பொம்பளை நான் இல்லைன்னு எனக்குத் தெரியும். என்னைத் தொடற மொத ஆம்பளை நீ இல்லைன்னு உனக்கும் தெரியும். எப்பவோ சந்திக்கிறோம். பிரிஞ்சிடறோம். அடுத்த சந்திப்புக்கான எதிர்பார்ப்போட காத்திருக்கிறோம். இந்த த்ரில், இந்த சுதந்திரம் எனக்குப் பிடிச்சிருக்கு."

"ஆஷ், நீ சொல்றதென்னமோ சரிதான். ஆனா அத்தனைப் பொண்ணுங்களை விட உன் மேல ஒரு தனி..."

"லவ்வா?"

"சொல்லத் தெரிலை. ஈடுபாடுன்னு வச்சிக்கயேன். உடம்புக்காக மட்டும் நான் உன்னோடப் பழகலை. அதுக்கு மேல..."

"மார்ட்டின், மழை வருது."

எழுந்து கொண்டார்கள். பெட்ஷீட்டை மடக்கி, பொருள்களைச் சேகரித்துக் கொண்டார்கள். புறப்பட்டு வாடகைக் காருக்கு வந்தார்கள்.

"அடுத்து எங்க ஆஷ்?"

"உன் பாஸ் பங்களா வேணாம் மார்ட்டின். ஃபார் எ சேன்ஞ்... ஹோட்டல் போலாம்."

டிக்-டாக் என்னும் ஏழு மாடி ஹோட்டல் வந்தார்கள். அறையெடுத்ததும், மார்ட்டின் படுக்கையில் புகை பிடித்துக் கொண்டு காத்திருக்க... "குளிச்சுட்டு வந்துடறேன்" என்று சென்றாள். துண்டு மட்டும் கட்டிக் கொண்டு 'கண்ணின் மணியே, கண்ணின் மணியே' என்று பாடிக் கொண்டு ஆஷா வெளியே வந்தபோது...

அறையின் கதவுத் தட்டலுக்கு, மார்ட்டின் எழுந்து, ஒருக்கழித்துத் திறந்து "என்ன" என்று முகம் பார்த்துக் கேட்பதற்கும் முன்பாகவே, கதவைப் படீரென்று தள்ளி, அந்த எதிர்பாராத்தள்ளலில் நிலை தடுமாறி மார்ட்டின் கீழே விழ, உள்ளே வந்து கதவைச் சாத்தினான் சுபா.

"ஏய், ஏய்...என்ன இது?" என்று மார்ட்டின் எழ முயற்சிப்பதற்கு முன், ஷு அணிந்த கால் சரியாக அவன் கழுத்தில் அமர்ந்தது. சுபாவின் கையில் இப்போது பிஸ்டல் இருந்தது.

"ஒரே அழுத்து அழுத்தினேன்னா, நீ செத்தே. ஏய், வாடி இங்கே" என்றான்.

உடம்பில் ஒரு துண்டு மட்டும் கட்டிக் கொண்டிருந்த ஆஷா வினாடிகளில் நிகழ்ந்த எதிர்பாராத சம்பவத்தில் அதிர்ந்து நிற்க... (தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: ஏ. பத்மநாதன்
வயது: 33
முகவரி: SAFAT, P.O.BOX-28871, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை விளையாட்டு.

பெயர்: வி.சத்திய மூர்த்தி
வயது: 23
முகவரி: நானு ஓயா டிவிஷன், தலவாக்கெல்லை.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்.

பெயர்: எஸ்.அன்பரசன்
வயது: 24
முகவரி: BREMGATNER STR-28 8003 ZURICH, SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ்.பத்மினி
வயது: 17
முகவரி: 2ம் குறுக்கு, திராய் மடுக் கொலனி, முகத்துவாரம், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ்.அப்துல் ரஹீம்
வயது: 26
முகவரி: 13. கலாவெவ வீதி, கலேவெல.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஐ.அப்துல் நஸார்
வயது: 25
முகவரி: P.O.BOX-1475 MEDINA MUNAWWARAH, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எவ்.நூரூல் அஸ்மியா
வயது: 24
முகவரி: P.O.BOX-7715 CODE NO-22088. NO-2, SALAMIYA, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்கள்.

பெயர்: எம்.யோகநாத்
வயது: 19
முகவரி: 20/3, அப்பர் கிப்சன் வீதி, கெலேகல, நுவரெலியா.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ்.சேகர்
வயது: 22
முகவரி: 72/2, எம்.எம்.வீதி, மருதானை, கொழும்பு.10.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், பேனாநட்பு.

பெயர்: வை. ராஸி அகமட்
வயது: 21
முகவரி: முகிதீன் லேன், தைக்கா நகர், அட்டாளைச்சேனை 15
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். பவாஸ்
வயது: 19
முகவரி: 87, நெடுங்குளம் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பேனாநட்பு, முத்திரை சேகரித்தல்.

பெயர்: ஏ. முகமட் அஸ்ஹர்
வயது: 17
முகவரி: 136, தபாலக வீதி, ஆலங்குளம்-17, இறக்காமம்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

www.padippakam.com

"அடேயப்பா! எவ்வளவு புத்தகங்கள்?" என்று வியந்து கொண்டே அந்தப் புத்தகங்களைக் குனிந்து நோக்கினான் ரீபின். "இந்த மாதிரிக் காரியத்திலே ரொம்பக் காலமாய் ஈடுபட்டிருக்கிறீர்களா?... ம்... சரி, உன் பேரென்ன?" என்று சோபியாவிடம் திரும்பக் கேட்டான்.

"ஆன்னா இவானவ்னா" என்றாள் அவள்: "பன்னிரண்டு வருஷ காலமாய் வேலை செய்கிறேன். ஆமாம், எதற்காகக் கேட்டீர்கள்?"

"முக்கிய காரணம் ஒன்றுமில்லை: அது சரி, சிறைக்கும் போயிருக்கிறீர்களா?"

"ஆமாம்."

"பார்த்தாயா?" என்று கண்டிக்கும் குரலில் சொன்னாள் தாய். "நீ முதலில் எவ்வளவு முரட்டுத்தனமாய் நடந்து கொண்டாய்....!"

"என் பேச்சைக் கண்டு வருத்தப்படாதே, அம்மா" என்று பல்லைக் காட்டிச் சொல்லிக்கொண்டே அவன் ஒரு புத்தகக் கட்டை வெளியில் எடுத்தான்: "சீமான்களுக்கும் முஜீக்குகளுக்கும் ஒட்டவே ஒட்டாது. இரண்டு பேரும் எண்ணெயும், தண்ணீரும் மாதிரி."

"நான் ஒன்றும் சீமாட்டியல்ல; நான் ஒரு மனிதப்பிறவி!" என்று சிரித்துக் கொண்டே மறுத்தாள் சோபியா.

"இருக்கலாம்" என்றான் ரீபின். "நாய்கள் கூட ஒரு காலத்தில் ஓநாய்களாகத் தானிருந்தன என்று சொல்லுகிறார்கள். சரி, நான் போய் இவற்றை ஒளித்து வைத்து விட்டு வருகிறேன்."

இக்நாதும் யாகவும் தங்கள் கைகளை நீட்டிக் கொண்டே அவன் பக்கமாக வந்தார்கள்.

"நாங்களும் அதை பார்க்கலாமா?" என்றான் இக்நாத்.

"எல்லாம் ஒரே மாதிரிப் புத்தகம் தானா?" என்று சோபியாவிடம் கேட்டான் ரீபின்.

"இல்லை. வேறுவேறு. சில பத்திரிகைகளும் இருக்கின்றன."

# மக்சீம் கார்க்கி

# தாய்

# 56

"அப்படியா?"

அந்த மூன்று பேரும் தங்கள் குடிசைக்குள் விரைந்து சென்றார்கள்.

"இந்த முஜீக் ஓர் உருகிக் கொண்டிருக்கிற பேர்வழி!" என்று ரீபினைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டே சொன்னாள் தாய்.


"ஆமாம்" என்றாள் சோபியா. "இவனது முகத்தைப் போன்ற வேறொரு முகத்தை நான் பார்த்ததே இல்லை. ஒரு தியாகியின் முகம் போலிருக்கிறது. சரி, நாமும் உள்ளே போகலாம். நான் அவர்களைக் கவனித்துப் பார்க்க விரும்புகிறேன்."

"அவனது முரட்டுத்தனமான பேச்சால் நீங்கள் புண்பட்டுப் போகாதீர்கள்" என்று மெதுவாகச் சொன்னாள் தாய்.

சோபியா சிரித்தாள்.

"நீலவ்னா, நீங்கள் எவ்வளவு அன்பானவர்!"

அவர்கள் வாசலுக்குச் சென்றதும், இக்நாத் தலையை உயர்த்தி அவர்களை விருட்டெனப் பார்த்தான்; தனது சுருண்ட தலைமயிரைக் கலைத்து விட்டுக் கொண்டே, மடியில் கிடந்த பத்திரிகையைப் பார்க்கத் தொடங்கினான். ரீபின் கூரை முகட்டிலுள்ள ஒரு கீறல் இடைவெளி வழியாக விழும் சூரிய ஒளிக்கு நேராக, ஒரு பத்திரிகையை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தான்.



படிக்கும் போது அவனது உதடுகள் மட்டும் அசைந்தன. யாகவ் முழங்காலிட்டுத் தனக்கு முன்னால் குவிந்து கிடக்கும் பிரசுரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தாய் ஒரு மூலைக்குச் சென்று உட்கார்ந்தாள். சோபியா அவளுக்குப் பின்னால் வந்து நின்று, தாயின் தோள் மீது ஒரு கையை வைத்தவாறே, அவர்களது நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"மிகயீல் மாமா, அவர்கள் முஜீக்குகளான நம்மைச் சீண்டி விடுகிறார்கள்" என்று எங்கும் பார்க்காமல் யாகவ் அமைதியாகச் சொன்னான். ரீபின் அவனை நோக்கிச் சிரித்தான்.

"அவர்கள் நம்மை நேசிக்கிறார்கள். அதனால்தான்!" என்றான் ரீபின்.

இக்நாத் ஆழ்ந்த பெருமூச்சு வாங்கிக் கொண்டே தலையை உயர்த்தினான்.

"இதோ எழுதியிருக்கிறது கேள்: 'மனிதனாயிருந்த விவசாயி இப்பொழுது மாறிப்போனான். மனித குணங்களையெல்லாம் இழந்துவிட்டான்.' ஆமாம், அவன் மனிதனாகவே இல்லை தான்!" அவனது தெளிந்த முகத்தில் திடிரென ஒரு கருமை ஓடிப் பரந்தது; அந்த வாக்கியத்தைக் கண்ட அவனது மனம் சிறுத்ததுபோல் தோன்றியது; "அட புத்திசாலிகளா, என் உடம்புக்குள்ளே புகுந்து கொண்ட நீங்கள் ஒரு நாள் பொழுது சுற்றி வாருங்கள், அப்போது தெரியும் நிங்கள் எப்படி இருப்பீர்கள் என்று."

"சரி, நான் கொஞ்ச நேரம் படுக்கப் போகிறேன்" என்று சோபியாவிடம் கூறினாள் தாய். "எனக்குக் களைப்பாயிருக்கிறது. அதிலும் இந்த நாற்றம் என்னைக் கிறக்குகிறது. சரி, நீங்கள் என்ன பண்ணப் போகிறீர்கள்?"

"நான் ஓய்வெடுக்க விரும்பவில்லை."

தாய் ஒரு மூலையில் முடங்கிப் படுத்தாள், உடனே தூங்கத் தொடங்கிவிட்டாள். சோபியா அவள் அருகில் உட்கார்ந்து அந்த மனிதர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்; தாயின் தூக்கத்தைக் கலைக்க வரும் தேனீக்களையோ குளவிகளையோ கையால் விரட்டி விட்டுக் கொண்டிருந்தாள். அரைக் கண்தூக்கத்தில் சோபியா தனக்குச் செய்யும் சேவையைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சியுற்றாள் தாய்.

ரீபின் அங்கு வந்து கரகரத்த குரலில் மெதுவாகக் கேட்டான்:

"தூங்கிவிட்டாளா?"

"ஆமாம்."

அவன் அங்கு சிறிது நேரம் நின்றவாறே தாயின் முகத்தையே பார்த்தான்; பிறகு பெரு மூச்சு விட்டுவிட்டு மெதுவாகச் சொன்னான்:

"மகன் சென்ற மார்க்கத்தில் தானும் பின்பற்றிச் செல்லும் முதல் தாய் இவள் தான் போலிருக்கிறது!"

"சரி. அவளைத் தொந்தரவு பண்ணக் கூடாது. நாம் வெளியே போகலாம்" என்றாள் சோபியா.

"சரி. நாங்களும் வேலைக்குப் போக வேண்டியதுதான், உங்களோடு பேசிக் கொண்டிருக்க வேண்டுமென்று தான் விருப்பம். ஆனால், நமது பேச்சை மாலையில் வைத்துக் கொள்ளலாம். டேய், பையன்களா! புறப்படுங்கடா!"

அவர்கள் மூவரும் சோபியாவை அங்கேயே விட்டு விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள்.

"நல்லதாய்ப் போயிற்று. இவர்கள் நட்புரிமையோடு பழகிக்கொள்கிறார்கள்" என்று நினைத்தாள் தாய்.

அந்தக் காட்டுப் பிராந்தியத்தின் நெடி மணத்தோடு, தார் நாற்றத்தையும் சுவாசித்தபடி அப்படியே தூங்கி விட்டாள் தாய்.

❁❁❁

அந்தத் தார் எண்ணெய்த் தொழிலாளிகள் தங்களது அன்றைய வேலை முடிந்த உற்சாகத்தோடு திரும்பி வந்தனர்.

அவர்களது பேச்சுக் குரல் தாயை எழுப்பிவிட்டு விட்டது; அவள் எழுந்திருந்து, புன்னகை செய்து கொண்டும் கொட்டாவி விட்டுக்கொண்டும் வெளியே வந்து சேர்ந்தாள்.

"நீங்களோ வேலைக்குப் போனீர்கள், நானோ இங்கே சீமாட்டியைப்போல் செல்லமாகத் தூங்கினேன்" என்று கூறிக்கொண்டே அவர்களை வாஞ்சையோடு பார்த்தாள்.

"அதற்காக உன்னை மன்னித்துவிடலாம்" என்று சொன்னான் ரீபின். அவனது அமித சக்தியைக் களைப்பு ஆட்கொண்டு விழுங்கி விட்டது, எனவே அவன் சாந்தமாக இருந்தான்.

"இக்நாத்! கொஞ்சம் தேநீர் சாப்பிட்டால் என்ன? நாங்கள் இங்கே, எங்கள் வீட்டு வேலைகளை ஒவ்வொருவராக முறை வைத்துச் செய்கிறோம். சாப்பாடும் தேநீரும் தயாரிப்பது இன்று இக்நாதின் வேலை, அவனது முறை."

"இன்று நான் என் முறையை யாருக்காவது தாராளமாக சந்தோசமாக விட்டுக் கொடுக்கிறேன்" என்று கூறிக் கொண்டே அவன் அடுப்பு மூட்டுவதற்காகச் சுள்ளிகளையும் சிராத்துண்டு விறகுகளையும் சேகரிக்க ஆரம்பித்தான்.

"நமது விருந்தாளிகளோடு இருப்பதற்கு நீ ஒருவன் மட்டுமே விரும்பவில்லை!" என்று கூறிக்கொண்டே எபீம் சோபியாவுக்கு அருகில் உட்கார்ந்தான்.

"நான் உனக்கு உதவுகிறேன், இக்நாத்" என்றான் யாகவ். அவன் அந்தக் குடிசைக்குள்ளே சென்று ஒரு ரொட்டியை எடுத்து வந்து, துண்டு துண்டாக நறுக்கி மேஜைமீது வைத்தான்.

"கேட்டாயா? யாரோ இருமுகிறார்கள்" என்றான் எபீம். ரீபின் தன் காதுகளைத் தீட்டிக்கொண்டு கூர்ந்து கேட்டான், தலையை அசைத்துக் கொண்டான்.

"அவனேதான். அந்த உயிருள்ள சாட்சியம்தான் வருகிறது" என்று சோபியாவிடம் சொன்னான் அவன்: "என்னால் மட்டும் முடியுமானால், நான் அவனை ஊர் ஊராக அழைத்துச் சென்று, ஒவ்வொரு சந்திலும் அவனை நிறுத்தி, அவன் பேச்சை எல்லா ஜனங்களும் கேட்கும்படி செய்வேன்: அவன் எப்பொழுதும் ஒரே விஷயத்தைத் தான் சொல்லிக் கொண்டிருப்பான். ஆனால் அவன் பேச்சு எல்லோரும் கேட்க வேண்டிய பேச்சு."

மஞ்சள் வெயில் கறுத்தது; அமைதியும் அதிகமாகியது; அவர்களது பேச்சுக் குரலும் தணிந்தது. சோபியாவும் தாயும் மிகுந்த களைப்பினால் மெல்லமெல்ல அசைந்து வேலை செய்யும் அந்த முஜீக்குகளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்; அவர்களும் பதிலுக்கு அந்தப் பெண்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காட்டுக்குள்ளிருந்து ஒரு நெடிய கூனிப் போன உருவம் கம்பை ஊன்றிக் கொண்டே வந்தது. அந்த மனிதனின் சிரமம் நிறைந்த சுவாசத்தை அவர்கள் அனைவருமே கேட்க முடிந்தது.

"வந்து விட்டேன்" என்று சொல்லி முடித்தான் அவன். அதற்குள் அவனைக் குத்திருமல் அலைத்துப் புரட்டியது.

அவன் ஒரு பழங்கந்தையான நீளக் கோட்டை அணிந்திருந்தான், அந்தக் கோட்டு கால் வரையிலும் தொங்கிக் கொண்டிருந்தது. அவனது அமுங்கிப்போன வட்டமான தொப்பிக்குக் கீழே சிலிர்த்துக் குத்திட்டு நிற்கும் மஞ்சள் நிற ரோமங்கள் தெரிந்தன. அவனது மஞ்சள் பாரித்த ஒட்டிய முகத்தில் மெல்லிய தாடி அழகு செய்து கொண்டிருந்தது. அவனது உதடுகள் நிரந்தரமாகத் திறந்து காணப்பட்டன. அவனது கண்கள் ஆழ்ந்து குழிந்து இருண்டு பள்ளத்தில் பதிந்து ஜுரத்தில் பிரகாசித்தன.

(தொடர்ந்து வரும்)

# "கோழிக்கடைக்காரன்"

நிச்சயமற்ற நாட்கள் தொடர்ந்தும் வந்துகொண்டுதான் இருந்தன. அன்றும் அப்படித்தான் ஒரு பொழுதுவிடிந்தது.

அவன் வேலைக்குப் போவதற்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

"மாமா, இண்டைக்குச் சனிக்கிழமை தானே? எத்தனை மணிக்கு வருவியள்?" மது அவனிடம் கேட்டாள்.

"எதுவும் திட்டமிட்டுச் சொல்ல முடியாது; நாட்டு நிலைமை அப்படி. வேளைக்கு வரப்பார்க்கிறன்!!"

✱✱✱

சொன்னது போலவே நடந்தது.

"அடையாள அட்டையைத்தாரும்"

கொடுத்தான்.

"கொழும்பிலை எவ்வளவு காலம் இருக்கிறீர்?"

"பத்து வருஷம்"

"கொழும்பு விலாசத்தோடைதான் அடையாள அட்டை கிடக்கு. ஆனால் பிறந்த இடம் கரவெட்டி. உம்மை விசாரிக்க வேணும் ஸ்ரேசனுக்கு வாரும்"

இந்த மொழிபேசும் இனத்தில் பிறந்தது தான் குற்றம் என இவ்வளவு காலம் நினைத்திருந்தான். இப்போது தான் புரிந்தது யாழ்ப்பாணத்தின் எங்கோ ஒரு மூலையில் பிறப்பது கூட குற்றம் என்று.

✱✱✱

உள்ளே அவன் தள்ளப்படும்போது ஏற்கனவே மூவர் அந்த பத்தடி நீளமும் ஆறடி அகலமும் கொண்ட அறையினுள் அடைபட்டிருந்தனர். ஒருவனின் முகத்தில் மட்டும் சிறிது வாட்டமிருந்தது. மற்ற இருவரும் எதுவிதமான சலனமுமில்லாமல் இருந்தனர்.

அவனுக்கு வரவேற்பு மிக அமைதியாகவே இருந்தது. புதியவர்கள் சந்திக்கும் போது- அதுவும் இப்படியான ஒரு இடத்தில் சந்திக்கும்போது ஏற்படும் மயான அமைதி.

"அம்மா, ஐயோ என்னாலை தாங்கேலாமல் கிடக்கு: என்னை வெளியிலை விடச் சொல்லுங்கோ" வாட்டமாக இருந்த அந்த 'சந்தேகக்கைதி' அமைதியை உடைத்தான்.

"ஏன் உங்களுக்கு என்ன செய்யுது. அடிச்சவையோ?"

அவன் ஒரு கேள்வியுடன் அவர்களுக்கு அறிமுகமானான்.

"சீச்சீ.... எனக்கு மூண்டு நாளா வயித்து வலி. மருந்து எடுத்துக் கொண்டு திரும்பி வரேக்கை பிடிச்சுக் கொண்டு வந்து உள்ளுக்குப் போட்டு விட்டார்கள்?"

"ஏன்?"

"உது விசர்க்கேள்வி" நோயின் தாக்கம் கோபமாக வெளிவந்தது. "எங்களைப் பிடிச்சுக் கொண்டு வாறதுக்கு ஒரு காரணம் வேணுமே?"

"அதுசரி"

"நான் வேலை முடிஞ்சு நடந்து வந்து கொண்டிருக்கேக்கை கரவெட்டியிலை பிறந்தது குற்றமெண்டு சொல்லிப் பிடிச்சுக் கொண்டு வந்து உங்களோடை போட்டிருக்கினம்."

"பாப்பம் என்ன நடக்குதெண்டு." அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"நான் ஒரு நகைக்கடையிலை வேலை செய்யிறன். எங்களுக்கு வந்த ஒரு ஓடரை செய்யக்குடுக்க பட்டடைக்குப் போகேக்கை வழியிலை வைச்சு பஸ்ஸாலை இறக்கி கூட்டிவந்து அடைச்சிருக்கு." என்றான் ஒருவன்.

"உங்கடை ஊர் எது?"

"மட்டக்களப்பு. ஆனால் பன்ரண்டு வருஷமா கொழும்பிலை தான் இருக்கிறன். வீட்டுக்குப் போய் கிட்டத்தட்ட ஐந்து வருஷமாகுது".

"நீங்கள்?"


"நான் ஒரு முஸ்லிம் ஹோட்டலிலை வேலை பார்க்கிறேனுங்க, முதலாளியோட மகன் ஆஸ்பத்திரியிலை இருக்கிறாரு. அவரைப் பாக்கப் போறச்சே புடிச்சுட்டாங்க."

"உங்கடை ஊர் எது?"

"தலவாக்கொல்லை."

வயித்துக்குத்து புவனலிங்கமும், நகைக்கடை ஈஸ்வரனும், முஸ்லிம் கடை கணேசனும், கரவெட்டியில் அவனும் ஒருவருக்கொருவர் அறிமுகமாகினர்.

சிறிது அமைதி நிலவியபோது புவனலிங்கத்துக்கு வயித்துவலி மீண்டும் தலை தூக்கியது போல அனுங்கினான். அங்கு நிலவிய நீண்ட நேர அமைதியை அவனது அனுக்கம் குலைத்துக் கொண்டிருந்தது.



# அஸ்வதி

அவர்களுக்கு அடுத்த அறையில் நீண்ட நாட்களாக இருக்கும் 'சந்தேக நபர்'கள் கொடுத்த புத்தகங்களில் ஒன்றை அவன் படித்துக் கொண்டிருந்தான். பொழுது போவதற்கு மட்டுமல்ல மனது சோர்ந்து போகாமல் இருப்பதற்கும் அசோகமித்திரனின் 'இருவருக்குப் போதும்' உதவி செய்தது. புத்தகத்தில் லயித்திருந்தவனை ஒரு திறப்புக் கோர்வை எழுப்பிய ஒலி சிறிது சந்தோஷப்பட வைத்தது.

"எங்களை வெளியிலை விடப் போயினமோ?"

"சீ அப்படியிருக்காதுங்க. யாரையாச்சும் புதுசாக்கொண்டு வருவார்கள்."

கணேசன் சொன்னது போலவே நடந்தது. புதிதாக ஒருவன் தயங்கித்தயங்கி வந்தான். கதவு திறந்ததும் உள்ளே வந்தான். அழுக்கான காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தான். அங்கங்கு ரத்தக் கறைகளும் கூட. அவனிலிருந்து வீசிய நாற்றம் குடலைப்பிடுங்கியது.

உள்ளே இருந்தவர்களுக்கு அவனைக் கண்டது அருவருப்பாய் இருந்தது. கணேசனுக்கும் புவனலிங்கத்திற்கும் நடுவில் காணப்பட்ட இடைவெளியில் வந்து உட்கார்ந்தான்.

அவர்கள் இருவரும் விலகி இடம் விடுவது போல இருந்த இடத்தை விட்டு எழும்பி நின்றனர்.

அவன் இருந்த அழுக்குக்கு அவனிடம் கதைக்கக்கூட அவர்களுக்கு அருவருப்பாயிருந்தது. இருப்பினும் கணேசன் ஆரம்பித்தான்.

"என்ன நடந்தது?" நீ...நீங்கள் போன்ற பதங்களில் எதனைப் பாவிப்பது என்பது தெரியாமல் கேள்வி மொட்டையாக இருந்தது. தக்கிமுக்கி ஏதோ சொன்னான். சரியாகப் பேசக்கூடத் தெரியாத முட்டாள் போல இருந்தான்.

தான் கிரகித்துக் கொண்டவற்றை கணேசன் மற்றவர்களுக்குச் சொன்னான். "இவனோட பேரு சந்திரனாமுங்க. கொச்சிக்கடைல ஒரு கோழிக்கடைல வேல பார்க்கிறானாம். கடைலேந்து ரீ குடிக்க வெளியில போனப்போ புடிச்சுக் கொண்டு வந்திருக்காங்க."

"இவன்ரை உடம்பிலையிலும் சட்டையிலும் ரத்தத்தைப் பாத்துப் போட்டு இவனை ஒரு கொலைகாரன் எண்டல்லோ நினைச்சுப் போட்டன்" வயித்துவலியை மறந்து நக்கல் அடித்தான் புவனலிங்கம்.

கோழிக்கடைக்காரன் மனவளர்ச்சியும் குன்றியவனாகவே இருந்தான். அதனால் அவனுக்கு முன்பாகவே மற்றவர்கள் அவனை மிக மோசமாக விமர்சனம் செய்தார்கள். நீண்ட நேரம் அவனைப் பற்றியே பேச்சு இருந்தது.

அவன் அமைதியாக இருந்தான்.

அவனில் வீசிய துர் நாற்றம் தாங்காத கரவெட்டியான் தனது கைக்குட்டையால் மூக்கை மூடிக்கட்டிக்கொண்டான்.

கணேசனும், புவனலிங்கமும், ஈஸ்வரனும் மூலைக்கொருவராக முடங்கிக் கொண்டனர்.

கோழிக்கடைக்காரன் அமைதியாக இருந்தான்.

புவனலிங்கத்தின் மெல்லிய அனுக்கம் கொஞ்சம் கொஞ்சமாக பெரிதாகி அவனை இருக்கவும் விடாமல் நிற்கவும் விடாமல் படுக்கவும் விடாமல் பாடாய்ப் படுத்தியது. துடித்தான், நெளிந்தான், எந்த விதமான பலனுமிருக்கவில்லை.

முகத்தை மூடியபடி கரெவட்டியான் ஒரு மூலையில் இருந்தான். தூங்குவது போல பாசாங்கு செய்தான் கணேசன். புத்தகத்தோடு இரண்டறக்கலந்தவன் போல் இருந்தான் ஈஸ்வரன்.

புவனலிங்கம் துடித்துக் கொண்டிருந்தான்.

கோழிக்கடைக்காரன் எல்லோரையும் சுற்றிப்பார்த்துவிட்டு உதறிக் கொண்டெழுந்தான்.

துர்நாற்றத்தால் அனைவரும் முகத்தைச் சுழித்தனர். எழுந்தவன் புவனலிங்கத்தின் அருகில் போய் அமர்ந்து அவனது முதுகையும் வயிற்றையும் தடவிக் கொடுத்தான்.

"கொளக்.....கொளக்....." புவனலிங்கத்தின் வாந்தி கோழிக் கடைக்காரனது கைகளில் நிரம்பியிருந்தது. அதனை அப்படியே கக்கூசுக் கோப்பையினுள் போட்டுக் கையைக் கழுவினான்.

மீண்டும் வந்திருந்து முதுகைத் தடவினான்.

மூக்கை மூடிக்கட்டியவனிடத்திலும், புத்தகம் படித்துக் கொண்டிருந்தவனிடத்திலும் நித்திரை போல பாசாங்கு செய்தவனிடத்திலும் ஏதோ ஒரு விதமான துர்நாற்றம் வீச ஆரம்பித்திருந்தது.

கோழிக்கடைக்காரன் புவனலிங்கத்தின் முதுகைத் தடவிக் கொண்டிருந்தான். புவனலிங்கம் நன்றாக உறங்கிப் போயிருந்தான். ●



படிப்பகம்

www.padippakam.com

# மரப்புலி

அறை முழுவதும் உடுபுடவைகள், புத்தகங்கள், போட்டோ அல்பங்கள் அனைத்தும் அலங்கோலமாகச் சிதறிக் கிடந்தன. ஊசி முனையாய்க் குத்தும் குளிரிலும் மூர்த்தி மாஸ்டரின் உடம்பெல்லாம் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. அந்த அறையில் அவர் நடந்து நடந்து களைத்தவராய் நிலத்தில் முகம் குப்புறக் கிடந்த டிரங்குப் பெட்டியை நிமிர்த்தி அதன் மேல் உட்கார்ந்தார். அவர் முகத்தில் வடிந்த வியர்வை வாயில் உப்புக் கரித்தது. வேட்டித் தலைப்பால் முகத்தைத் தேய்த்துத் துடைத்துக் கொண்டார்.

சற்று நேரத்துக்கு முன்னால் நடந்து முடிந்த அந்தப் பயங்கர நாடகத்தை நினைவுத் திரையில் போட்டுப் பார்த்தார் மூர்த்தி மாஸ்டர். 'செக்கிங்' என்று நுழைந்த போலிசார் அறையில் இருந்த எல்லாப் பொருட்களையும் அள்ளித் தரையில் வீசினர். போட்டோ அல்பத்தைச் சல்லடை போட்டவர்கள் அதிலிருந்த புகைப்படம் ஒன்றைக் காட்டி மூர்த்தியையும் மாலதியையும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைந்தெடுத்தனர். அவர்கள் கொடுத்த எந்த விளக்கத்தையும் ஏற்கப் போலிசார் மறுத்து விட்டனர்.

மூர்த்தி மாஸ்டரின் நினைவு மூன்று ஆண்டுகளைப் பின்னோக்கித் தாவியது. அவர் நாவலப்பிட்டிப் பாடசாலை ஒன்றுக்கு மாற்றலாகி இருந்தார். இடத்துக்குப் புதியவரானாலும் அங்கே ஸ்ருடியோ நடத்தும் சுந்தரம், மூர்த்தி மாஸ்டரின் பாலிய நண்பனாயிருந்ததில் மிகுந்த சந்தோசப்பட்டார். ஓய்வுப்



ரூபராணி

பொழுதில் சுந்தரத்திடம் போவதைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அன்றும் வழமை போல் நண்பனின் ஸ்ருடியோவுக்குச் சென்ற மூர்த்தி மாஸ்டர் கண்டகாட்சி அவர் இதயத்தை வருடியது. அழகும் சாந்தமும் ஒரு கலவையாக வடிவெடுத்த இளம் பெண் ஒருத்தி மரத்தால் செதுக்கிய புலியைக் கட்டி அணைத்த வண்ணம் போட்டோவுக்குப் போஸ் கொடுத்துக் கொண்டிருந்தாள். இதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தி மாஸ்டர், அந்தப் பெண்ணே தனக்கு மனைவியாக வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார், செயலிலும் இறங்கினார். சுந்தரத்தின் உதவியுடன் மூர்த்தி மாஸ்டர் தான் விரும்பியபடியே மாலதியைக் கரம் பற்றினார்.

அந்த இனிய நாளுக்குக் காரணமாக அமைந்த நினைவுச் சின்னந்தான், போலிஸ் கைப்பற்றிய அந்தப் புகைப்படம். புகைப்படக் கண்காட்சியில் முதற் பரிசைத் தட்டிக் கொண்ட படமும் அதுதான். அப்போது மூர்த்தி மாஸ்டருக்குச் சுவாரஸ்யமாக இருந்த அனுபவம் இப்போது சித்தரவதையாக மாறுமென்று யார் கண்டது? போலிஸ் கண்களுக்கு மரப்புலி நிஜப்புலியாகத் தெரிந்ததோ என்னவோ, மாலதி பெண் புலியாகி, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள் என்பது உண்மையாகிவிட்டது. மூர்த்தி மாஸ்டர் அழுது அழுது அப்படியே மயங்கிப் போனார் என்பதற்கு நான்கு சுவர்களுந்தான் சாட்சி. ●

# எதிரொலிகள்

ஆத்மராஜா ரூத் சந்திரிக்கா

ஸ்நேகமாய் புன்னகைத்தாள். அப்பாடா, வழித்துணை கிடைத்தாயிற்று. சந்தியில் நின்று வினாடிக்கு வினாடி ரம்புக்கனை றூட்வேன் பார்த்துச் சலித்தாயிற்று. மெதுவாக அடியெடுத்து என்னருகே வந்தாள். "மே...கொயத யண்ட யண்ணே" உதிர்ந்தது. "கமத்தவத்த!" "ஓ மமத் ஏபத்த யங் அப்பி பயிங் யமு!" தலையசைத்தேன். இருவரும் சமாந்தரமாய் நடக்க ஆரம்பித்தோம். நீண்ட நேர மௌன இறுக்கத்தை நானே தளர்த்தினேன். "ஒயாக்கே நம?" "ஷமிக்கா திலக்!" "வட கரன்னவாத?" "ந...ந, இகணகன்னவா!" தலை தூக்கிப் பார்த்தாள். மெலிதாகப் புன்னகைத்துக் கேட்டாள்:

"ஒயா...தெமழத...?" 'ஜீ....ஸ.....ஸ்' சிலிர்த்துக் கொண்டேன். என்ன நாசண்டாப்பா இது, என்ரை மூஞ்சியில 'நீ ஒரு தமிழிச்சி' என்று போஸ்டர் கீஸ்டர் ஏதும் ஒட்டியிருக்குதோவென்று அவசரமாகத் தடவிப் பார்த்தேன். உடல் திதிங்கிணத்தோம் போட மனம் பதறத்தொடங்கியது. என் அவஸ்தை அவளுக்கெங்கே புரியப் போகிறது!

'எப்படிராப்பா இந்தச் சண்டாளி என்னை இனங்கண்டாள்?' குழம்பிப் போனேன். நான் இந்த உண்மையைப் பொத்திப் பொத்திப் பாதுகாத்து புவத்தெனியவில் நிம்மதியாய் வாழுற வாழ்க்கைக்கும் மண்விழுந்தாச்சு. இதென்ன சீரழிவு கடவுளே? என் மனவோட்டம் புரிந்தவள் போல பட்டெனச் சொன்னாள், "மட்டத்



கிராளப்பா' வியந்தேன்.

"நீங்கள் யாழ்ப்பாணமோ?" சுர்ர் என்றது. என் அடிவயிறு ஜில் விட்டது. 'சே இண்டைக்கு வெள்ளனை ஆரிலயப்பா முழிச்சனான்?' "பிறந்தது அனுராதபுரம், வளர்ந்தது மட்டக்களப்பு, படிச்சது கல்முனை, வாழ்றது கேகாலை.. இனி எங்க எங்கவோ?"

தெமழ தண்ணவா!" ஆச்சர்யமானேன்.

"ஹோமத தண்ணே, இகணகத்தத?" சிரித்தாள்.

"இல்லையில்லை. எனக்கொரு தமிழ்க் கூட்டாளி இருக்கு. அதனால பழகிற்றன்" என்றாள்.

'சா... என்ன வடிவாய் தமிழ் கதைக்

"நான் நம்ப மாட்டன். நீங்கள் சஞ்சீவன் போலத்தான் தமிழ் கதைக்கிறீங்கள்."

'சஞ்சீவனோ...ஆர்ராப்பா அந்தப் பரதேசி? அவனைப்போல நான் தமிழ் கதைக்க' யோசித்து சபித்தேன்.

அவளே சொன்னாள் "சஞ்சீவன் யாழ்ப்பாணம்."

"ஆ....அப்பிடியா- எப்படித் தெரியுமாளை?"

"பெனிதெனியவில் எங்கட வீட்லதான் போடிங்காய் இருந்தவர். ஈஃபக்கள்ற்றி."

"ஓ... அப்படியா?"

"அவரைத் தான் திருமணம் செய்யப் போறன்."

"அடிச்சக்கை...பிறகென்ன; எனக்கு மிஞ்ச உறவு சொல்ல ஒரு ஆள் அகப்பட்டாச்சு" சந்தோஷமாய் சிரித்தாள்.

"இப்ப சஞ்சீவன் எங்க?"

"யாழ்ப்பாணத்திலதான்"

"யவ்னால எவடம்?"

"அராலி"

அரண்டு போனேன்.

"அங்குதான் கொஞ்சம் பிரச்சினை–ஷெல்லடி– இடம் பெயர்ந்திருப்பினம் போல" அவள் விழிகள் நீர் திரையிட்டுக் கன்னமேடுகளில் சிதறியதும் எனக்குச் சங்கடமானது. 'காதலாகிக்... கசிந்து.... கண்ணீர் மல்கி...' வரிகள் ஞாபகமானது. இது எப்பேர்ப்பட்ட விந்தை.

வடக்கில் அடிபிடி பாய்ச்சல் ஷெல் என்றதும் நான் பதறுகிறேன் உறவுகளை நினைத்து. மாமி, செந்தில், செவ்வேள், பாரதி குடும்பம், சரவணமாமா குடும்பம் இது உறவுத் துடிப்பு.

ஆனால் நான் ஷமிக்கா போல் அழுவதில்லை. ஷமிக்கா அழுகிறாள். நடுத்தெருவில் நின்று ,அராலியில் இருக்கும் சஞ்சிவனுக்காக அழுகிறாள். இது எப்பேர்ப்பட்ட நேசம்...? இவள் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா? இந்தச் சமாந்தரங்கள் இரண்டும் எப்போதாவது சந்திக்குமா...? நிறைய நிறைய வினாக்கள் என்னுள் எழுந்தன.

"நீங்கள் யவ்னாக்குப் போவீங்களா?" திடீரெனக் கேட்டாள்.

"யவ்னா போறது இலேசுப்பட்ட விஷயமா? ஒரு இறுதி யாத்திரைபோலத்தான். எத்தினை தடை தாண்ட வேணும், எத்தினை பதில்கள் சொல்ல வேணும். அதுவும் எங்கட வயசாக்கள் போய்வாறது வலு கஷ்டம்" என்றேன். யதார்த்தத்தை விளக்கி.

"சொந்தக்காரர் இருக்கிறார்களா?" என்றாள் ஆவலாய்,

"ஓமோம்",

"எனக்கிந்த உதவியைக் கட்டாயம் செய்வீங்களா?" என் கரம் பற்றினாள்.

"சொல்லுங்கோ-முடியுமெண்டால் கட்டாயம் செய்வன்."

"சஞ்சீவனிட்ட இருந்து கடிதம் வந்து நாலு மாசமாகிப்போச்சு, நான் படுற அவஸ்தையை வார்த்தையில சொல்லேலாது, இந்த அட்ரசை எழுதி ஆளை விசாரிச்சுப் பார்க்கச் சொல்றீங்களா?"

"ஓம்...கட்டாயம்" அட்ரஸை வாங்கிப் பிரித்தேன்.

★★★

வீடு போய் அவசரமாய் செவ்வேளுக்கொரு கடிதம் எழுதிப் போட்டேன், விஷயம் விளக்கி.

ஷமிக்கா அடிக்கடி என்னைச் சந்திக்க வந்தாள், நிறைய அழுதாள். சஞ்சலப்பட்டாள். என்னுள்ளும் இலேசாக சந்தேகம் வலுக்கத் தொடங்கியபோது செவ்வேளிடமிருந்து பதில் வந்தது.

நான் எதிர்பார்த்து அஞ்சிய பதில்!

இடம் பெயரும் போது மாண்டு போன பொது மகனில் சஞ்சீவனும் ஒருவன் என்றிருந்த சிறியதொரு பத்திரிகைத் துண்டு. காட்டுவோமா... விடுவோமா? எனத் தடுமாறி இறுதியில் சொல்லாமல் மழுப்புவது நல்லதென எண்ணி மறைத்து விட்டேன். அவள் துடிப்பதை இரசிப்பதில் எனக்கு உடன்பாடில்லை.

வருவான் எனும் நம்பிக்கையிலாவது வாழட்டும் எனத் தீர்மானித்தேன்.

"சஞ்சீவனில்லாட்டில் நான் உயிர் வாழ மாட்டனப்பா" என்றாள். நான் அதிர்ந்து போனேன். என் பதிலுக்கு காத்திருந்து காத்திருந்து காலங்களோடிய போது என்னை சந்தேகிக்கத் தொடங்கினாள்.

என் முகமாற்றம் கண்டு சொன்னாள்:

"நீ உண்மையை மறைக்கிறாய் போலத் தெரியுது. சஞ்சீவனுக்கு என்னவோ நடந்திட்டுதே?" என் கரம்பிடித்துக் கெஞ்சினாள்.

நான் மூச்சு விடவில்லை. அழுகையோடே போனாள். போன வேகத்தில் திரும்பி வந்தாள். கரத்தில் ஒரு தமிழ்ப்பத்திரிகை. நான் விக்கித்துப் போனேன். அதில் சஞ்சீவன் நினைவஞ்சலி புகைப்படதோடு!...ஓ...வென அழுதபடி ஓடினாள்..

சடுதியில் மௌனமாகிப் போனாள்.

தற்கொலை! ஒரு முழக்கயிற்றில் முடிவைத் தேடிக் கொண்டாள்.

'ஓ..வடக்கின் யுத்தத்தின் பாதிப்பு இங்கேயுமா....? அங்கு சிதறும் எத்தனை எத்தனை சஞ்சீவன்களுக்காய் இங்கு எத்தனை எத்தனை ஷமிக்காக்கள் அழியப் போகிறார்களோ...!' என் விழிகள் நழுவி வேதனைச் சுனையில் நனைந்தன.

# வீடுவரை

சவூதிக் கணவன் அனுப்பும் பணம் வங்கியில் இலட்சங்களாய்ப் பெருகியமை ஷகிலாவை மகிழவைத்தது. பூரித்துப் போனாள்.

மாதம் இரண்டாயிரத்து சொச்சத்தை வைத்து வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வாழ்க்கையை தள்ளிக்கொண்டுபோன காலங்களை அவள் மறந்தும் நினைத்துப் பார்ப்பதில்லை. அத்தனை வெறுப்பு!

எப்படியோ எதையெதையோ விற்றுக் கிற்று கடன்பட்டு கணவனை வெளிநாட்டுக்கு



அனுப்பிவைத்தாள் ஷகிலா. அவனும் போய் சுளையாக சம்பாதித்தனுப்பவே ஷகிலாவுக்கு பெருமை பிடிபடவில்லை.

இரண்டு வருட திருமண வாழ்வு; பிள்ளைகளில்லை. அது வசதியாய்ப் போயிற்று அவளுக்கு. இஷ்டத்துக்கு சேலைகள் வாங்கி அடுக்கினாள். நகை நட்டுக்கள் பெருக்கினாள். சொகுசாய் வாழ்ந்தாள். ஆனால் வங்கியில் பணம் போடவும் மறக்கவில்லை.

குருவிக்கூடு போலுள்ள சிறிய வீட்டை புதுப்பிக்க இல்லை-புதிய மொடலில்- அமெரிக்கன் ஸ்டைலில் பெரிதாக்கிக் கட்ட வேண்டும் என்ற நினைப்பு மனதுக்குள் உதிக்கவே ஷகிலா செயல்படுத்த முற்பட்டாள். முதலில் அதுபற்றி கணவனுக்கு கடிதம் பறந்தது.

"வேண்டாம். நான் அங்கு வந்ததும் யோசித்து முடிவெடுப்போம்" என சுருக்கமாய் தடை விதித்துவிட்ட கணவனை நினைத்து கோபப் பட்டுக்கொண்டாள். பெரிய வீடு கட்டி தோழிகளுக்கு காட்டி பெருமையடித்துக்கொள்ள சந்தர்ப்பம் வாய்க்காத கோபம். "வரட்டும் அவர். நான் நினைச்சதை முடிச்சே தீருவேன்" என சங்கற்பம் செய்து கொண்டாள்.

ஷகிலா போட்டனுப்பிய அத்தனை பொருட்களையும் "லிஸ்ட்டை" வாசித்து வாசித்து ஒன்றும் தவறாது கட்டிக்கொண்டு வந்தான் அவள் கணவன். மனைவியின் குணம் அவனுக்கு தெரிந்த ஒன்றாயிற்றே.

"என்னங்க...இந்த சின்ன வீட்டை பெரிதாக்கி கட்டுவோம்னு சொல்றேன். கேட்க மாட்டேன்றீங்களே... நல்லா பாருங்க...

ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி

இ..... இது பழைய காலத்து மொடல்... ஹஸ்பண்ட் வெளிநாடு போய் வந்தார்னு சொல்லவே வெட்கமாருக்கு. பாருங்க... மத்தவங்க வீடெல்லாம் எப்படியிருக்கு! நம்ம வீடு மட்டும் இப்படி குருவி கூடாட்டம்...." ஷகிலா இழுத்தாள்.

அவள் கணவன் தலையில் கைவைத்துக் கொண்டான். அவள் சொன்னால் சொன்னதுதான். மறுபேச்சேது? "அநியாயம்.. இன்னும் பத்து வருஷம் கழிச்சு வந்திருக்கலாம். கொண்டு வந்த காசெல்லாம் போட்டு பிஸினஸ் பெரிதாக்கலாம்னு பார்த்தா நீ அதுக்கு முன்னால இப்படி பிளான் போட்டுட்டே.. ம.. என்ன செய்ய.. நான் வாங்கி வந்த வரம் இது..." அலுத்துக் கொண்டான் அவன்.

ஷகிலா வேலையில் இறங்கினாள். வீட்டை எந்த டிசைனில் கட்டுவதென தீர்மானிப்பதிலேயே ஏகப்பட்ட களேபரம் ஆயிற்று. முடிவாக ஷகிலா ஒன்றை தேர்ந்தெடுத்தாள். யாவரும் அதையே ஆமோதிக்க வேண்டியதாயிற்று.

ஆனால் அவள் கணவனுக்கோ அதில் இஷ்டமில்லை. அவர்களது வீடு பிரதான வீதியோரம் அமைந்திருந்தது. நகரின் முக்கிய பிரதேசம். நகர சபையின் அனுமதி கிடைப்பது கஷ்டம். எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் அவன். அவள் கேட்பதாயில்லை. இரண்டு மாடிகளுடன் பல்கனி வேறு வைத்து அமெரிக்கன் ஸ்டைலில் வீடு.

அவன் நினைத்தபடியில்லை. என்ன அதிர்ஷ்டமோ நகரசபையின் அனுமதி கிடைத்து விட்டது. ஷகிலா பூரித்துப்போனாள். நிர்மாண வேலைகள் ஆரம்பமாயின.

ஷகிலா வீடு தேடி வந்திருந்த தன் பழைய தோழி சஹானாவிடம் புதிய வீட்டு பிளானைக் காட்டினாள் "ஐயோ..என்ன மொடல்டி இது! நல்லாவேயில்லை. வேறு மாதிரி கட்டினா நல்லாருக்கும்" என அவள் முகத்தைச் சுளிக்க – பிடித்தது சனி.

ஷகிலா- "இந்த மொடல் சரிவராதுங்க.. இந்தா.. இந்த மொடல் நல்லாருக்கும்.." என வேறொரு வரைபடத்தைக் காட்ட அவள் கணவன் அதிர்ந்தான். "பைத்தியமா உனக்கு.. வேலை வேற தொடக்கியாச்சு.. இப்ப போய் இப்படி உளர்றியா?" கத்திவிட்டான் அவன்.

ஷகிலா அதை கணக்கிலெடுக்கவேயில்லை. அவள் பாட்டுக்கு தன் இஷ்டப்படி செயல்பட்டாள். அவன் பேசாமலிருந்து விட்டான்.

நாட்கள் ஓட ஓட கட்டிடம் வளரலாயிற்று. உருவாகி வரும் தன் வீட்டைப் பார்த்துப் பார்த்து பூரித்தாள் ஷகிலா. வீடும் முழு உருப்பெற்று கம்பீரமாய் தலை நிமிர்ந்தது.

அன்று ஒரு நாள். ஒரு நோட்டீஸ் வந்தது. நகரசபையிலிருந்து. தங்களிடம் அனுமதி பெற்ற வரைபடமல்லாது வெறொரு வரைபடத்தின்படி வீடு கட்டப்பெற்றிருப்பதால் அதை அனுமதிக்க இயலாதெனவும் அறிவித்தல் கிடைத்து குறிப்பிட்ட நாட்களுக்குள் வீட்டை இடித்து விடுமாறும் கோரப்பட்டிருந்தது.

ஷகிலா திகைத்தாள், திணறினாள். அவள் கணவனோ மௌனமாய் சிரித்துக் கொண்டான்.

# முறிக்காத முருங்கை!

ஸாலி இப்னு நபீலா

என் ஊரில் இருந்து ஆறுகிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கும் ஓர் அழகிய கிராமம் பாலமுனை.

ஊரின் வாயாக மீனோடைக்கட்டும், வயிறாக கிழக்கே கடலும், காலாக தெற்கே திராய்க்கேணியும், பாலமுனையின் பரிமாணம் அலகாகும். இங்கு உள்ள மின்ஹாஜ். ம.வித்தியாலயத்தில் நான் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றுகின்றேன். ஆசிரியர் பற்றாக்குறையுள்ள ஒரு பாடசாலை. ஆதலால், ஒவ்வாரு வகுப்பிலும் குறைந்தது அறுபது பிள்ளைகள் காணப்படுகின்றனர். அங்குள்ள ஆசிரியர்களில் மிகக்கூடுதலாக அடிப்பது நான்தான். ஒரு சேர் பிள்ளைக்கு அடித்தால், பெற்றோர் வேலிக்கு மேலால் பாய்ந்து வருவார்கள்.

நாட்டின் நிலை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டன. இதனால் சகல ஆசிரியர்களையும் போல, எனக்கும் மிகவும் சிரமமாகயிருந்து. எவ்வாறு பொழுதைப் போக்குவது என்று தெரியாமல் திண்டாடினேன். நாளாக.. நாளாக எனக்கும் பழகிப்போனது. பாடசாலை ஆரம்பித்தால் மீண்டும் படிப்பிப்பதை நினைக்கும்போது சற்று அலுப்பாயிருக்கிறது.

நேற்று நான் சம்பளம் எடுப்பதற்காக பாடசாலைக்கு போவதற்கு பஸ்ஸில் போய் இறங்கினேன். இறங்கி பாடசாலையை நோக்கி நடந்தேன். அழுகைச் சத்தம் கேட்டது. வழியின் ஓரத்தில் இருந்த வீட்டில் உள்ள பிள்ளைகள் யாரோ அடிக்க அழுகின்றார்கள். அந்த வீட்டில் உள்ள பிள்ளைகள் என் பாடசாலையில்தான் படிக்கிறார்கள். அவர்களின் பெற்றோர் என்னோடு நன்றாகப் பழகுவார்கள். உள்ளே போவதா..? இல்லையா.. என்று யோசித்தேன். உள்ளே சென்றேன். என்னைக் கண்டதும் கம்பை எறிந்து விட்டு "வாங்கோ சேர்" என்றவாறு அருகே வந்தாள். "என்ன நடந்தது?" என்றேன்.

"கஸ்ரப்படுத்தினாங்க அதான் கோபம் வந்துற்று" என்றவாறே மஜீபாவின் தாய் என்னிடம் சொன்னாள்.

"எப்பயாம் சேர் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிறது...? இப்போது திறந்து நடத்தொண்ணாதா...?"

அதைக் கேட்டுவிட்டு எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இந்த கிராமத்தின் பெற்றோர் திடீரென்று வளர்ச்சியடைந்து விட்டார்களா...? அதுவும் பள்ளிக்கூட கல்வியிலே அக்கறை செலுத்தும் அளவுக்கு. ஆயிரம் கேள்விகள் என் மனதில் எழுந்தாலும் அவற்றை மூடி வைத்து விட்டு, "ஏன் அப்படிக்கேட்கிறீர்கள்?" என்று வித்தியாசமான தொனியில் கேட்டேன்.

"இந்த ஆறு மாடுகளையும் வைத்துக் கொண்டு எங்களால் மேய்க்க முடியாது சேர். அதான் படிப்பிக்காவிட்டாலும் பரவாயில்லை பள்ளிக்கூடத்தை திறந்து நடத்துங்கோ. இவனுகளை வீட்டிலே வைத்துக் கொண்டு நடத்துற அட்டகாசத்தை தாங்க முடியாது. கத்திக்...கத்தி...தொண்டையும் போய்விட்டது."

எனக்கு சிரிப்பு வந்தது. சிரித்தேன்.

"ஏன் சிரிக்கிறீர்கள்...? சம்பளத்தோட



லீவு தந்தா சிரிப்பெயள்தானே?"

"அதற்கு இல்லை நான்சிரித்தது."

"அப்படியா...? ஏன்...?"

"நீங்கள் ஆறு பிள்ளைகளை வைத்துக் கொண்டு உங்களால அடக்கொண்ணாம இரிக்க. அதுவும் ஒரு வாப்பாவின் பிள்ளைகள். ஆனா.. நாங்க ஒவ்வொரு வகுப்புலயும் அறுபது பேர். அதுவும் அறுபது வாப்பாவுக்கு பிறந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டு எப்படி கஸ்ரப்படுகிறோம் என்று யாராவது நினைக்கிறீர்களா..?" என்றேன்.

"உண்மைதான் சேர் நீங்க சொல்வது!"

"அதுக்குள்ள ஒரு பிள்ளைக்கு, அவன் செய்ற அட்டகாசம் தாங்கொண்ணாம கையை நீட்டி ஒரு அடி அடிச்சமாக்கும், அடிச்சி அடுத்த நிமிசமே, உம்மாவும் வாப்பாவும் வேலிக்கு மேலால பாஞ்சுக்கிட்டு வந்து எங்களுக்கு அடிக்க வந்துருவியள். இப்ப விளங்குதுதானே, நாங்க எப்பிடி கஸ்ரப்படுற மெண்டு......?"

"ஓ...ஓம்...லீவு வந்தாத்தான் வாத்திமாரின் அருமை விளங்குற."

"கிள்ளாத கீரையும், முறிக்காத முருங்கையும், ஒழுங்காவராது. எப்பிடியோ யோசிச்சி செய்யுங்கோ." என்றவாறே பாடசாலையை நோக்கி நடந்தேன். ஏதோ ஒரு பொன் மொழியையே உதிர்த்தியது போல, வாயில் விரலை வைத்துக்கொண்டு நான் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# மறப்பதால்

## இலக்கிய நயம்

## நினைத்தாய்



செவ்வேளுக்கு இப்போதெல்லாம் வேட்டையாடுவதில் விருப்பமே இருப்பதில்லை.

கையில் வில்லெடுத்து காட்டுக்கு ராஜாவாகத் திரிந்தவனுக்கு வில்லைத் தொடவே வெறுப்பாகவிருக்கிறது.

சல சலத்து ஓடும் நதிக்கரையில் சம்மணமிட்டு, விழிகளை மூடி, நெச்சு நிமிர்த்தி நிஷ்டையில் இருப்பது போல அமர்ந்திருந்தான். அம்பும், வில்லும் கவனிக்கப்படாமல் அருகில் கிடந்தன.

மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து மெல்ல மெல்ல வெளியேற்றிக் கொண்டிருந்தான்.

மனது ஒரு நிலையில் இல்லாதபோது மூச்சுப் பயிற்சியில் ஈடுபடு. மனது ஒருமுகப்படும். காட்டுக்குள் சந்தித்த ஒரு யோகி சொல்லிக் கொடுத்துவிட்டுப் போன பயிற்சி.

குறிவைத்தால் இலக்கு மட்டும் தான் கண்ணில் படவேண்டும்.

மனம் தெளிவாக இருந்தால் தான் விழிகள் அலைபாயாது.

விழியும், மனமும் ஒன்றாகும் போதுதான் இலக்கு கைப்படும். வெற்றி பெறும் கனவு மெய்ப்படும்.

தருவது **ரசிகன்**

அதுவும் அந்த யோகி சொன்னது தான்.

செவ்வேளுக்கு இப்போதெல்லாம் குறி சரியாகவே அமைவதில்லை.

முன்னரெல்லாம் வைத்த குறி தவறுவதேயில்லை.

காரணம் அவன் தேடவேண்டியதும் இல்லை. காரணம் அவன் மனது முழுக்கவும் வியாபித்திருக்கும் அவள்.

மானுக்கு குறிவைத்தால், மான் அவளாகத் தெரிகிறது.

வேங்கைக்கு குறி வைத்து அம்பு தொடுத்தால், அம்பு அவள் விழிகளை நினைவூட்டித் தொலைக்கிறது. இழக்க மனமின்றி அம்பை பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டி இருக்கிறது.

இப்போது மனதை ஒருமுகப்படுத்த நினைத்தால், நினைவெங்கும் அவளின் பாதச் சிலம்போசை கேட்கிறது.

மனம் கலைகிறது குட்டையைக் குழப்ப மீன் மேலே வருவது போல, மனக்குளம் சலனமுற, அவள் நினைவே கிளர்ந்தெழுகிறது.

'மறந்துவிடு அவள் மன்னன் மகள்' என்று மனதுக்கு செய்தி அனுப்பினால், வான்நோக்கி எய்த அம்பாக அது திரும்பி வருகிறது.

காணவே கூடாது அவளை என்று தனக்குத்தானே கட்டளை போட்டுக் கொள்ளும்போது, கண்டேயாக வேண்டும் என்ற வேட்கை, இரைதேடும் வேங்கை போல இதயத்தில் எழுகிறது.

செவ்வேள் தலையை உதறிக் கொண்டான்.

மறப்பதில்லை. காதலைத் துறப்பதுமில்லை என்று மனதுக்குள் ஓங்கி ஒரு உறுதி செய்து கொண்டான்.

மூடியிருந்த விழிகளுக்குள் அவள் வெற்றிப் புன்னகை சிந்தினாள்.

"ஆறில்லாத ஊருக்கு அழகு பாழ்; நீயில்லாத என் நெஞ்சுக்கு நிம்மதி பாழ்" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

மனதுக்குள் சொல்வதாக நினைத்து சற்றே உரக்கவே சொல்லிவிட்டான்.

கொல்லென்ற சிரிப்பொலி பூட்டியிருந்த விழிக்கதவுகளை உடைத்துத் திறந்தது.

திறந்த விழிகளின் எதிரே அந்த தேவ சுந்தரி.

சிலம்போசை இதமா, செவ்விதழின் சிரிப்போசை இதமா? முன்னது செயற்கை. பின்னது இயற்கை. இயற்கையே அழகு இயற்கையே இனிது.

'கட்டுப்பட மறுக்கும் இரு பலா மார்பில். கண்களே வியக்கும் ஒரு நிலா முகத்தில். கனவுக்குள் புதைக்க அழைக்கும் ஒரு உலா இரு விழிக்குள். சிந்தைக்கு சிறகு முளைக்கும் ஒரு விழா இவள் வரவில்.' செவ்வேள் உலை இரும்பானான்.

"நேற்றுப் பார்த்த முகம்தானே. இன்றென்ன அதிசயமான பார்வை."

கேட்டபடியே அருகமர்ந்தாள் அழகுச் சிலை.

"தினம் ஒருவிதமாய் தெரிகிறாய் எனக்கு. பெண் ஒரு புதிர் என்பது பொய்யல்ல என்று புரிகிறது எனக்கு."

அவள் புறமாய் சாய்ந்து தன் தோளில் அவள் முகத்தை தாங்கிக் கொண்டான்.

"நல்ல வைரம்!"

"என்ன?"

"தோள்தான்" என்றாள்.

அவள் வியக்க அவனுக்குள் உற்சாக நதி உடைப்பெடுத்துப் பாய்ந்தது.

அவளின் முகம் நிமிர்த்தி, "எடுக்கட்டுமா?" என்று கேட்டான்.

"கேட்டுப் பெறுவதல்ல உரிமை."

"கேட்காமல் தருவதும் உரிமைதானே?"

அவன் பதில் திருப்பியடிக்க, சட்டென்று அவன் கழுத்தை தன் கரங்களால் வளைத்து, உதடுகளை இதழ்களால் மூடினாள்.

"போதுமா?" என்றாள், விழிகளில் நிரம்பி வழிந்தது போதை கலந்த பார்வை.

"என் உரிமையை உறுதி செய்ய வேண்டாமா?" கேட்டான்; கேட்ட மறு கணமே அவள் இதழ்களை சிறையிட்டான். இடதுகரம் நழுவி துகில் தொட பொய்யாக தடுத்து மனதுக்குள் வரவேற்றாள்.

கரம் செய்த விஷமம் பொறுக்காமல் பூவுடல் சிலிர்த்தது. பொன்னுடல் மேலும் வெட்கத்தில் சிவந்தது.

விடுபட்டு விலகி, துகில் சரி செய்து, "இன்று இது போதும். இதுவே அதிகம்தான்." என்றாள்.

"தேவையானது கடலளவு. தேடிக் கிடைத்தது கையளவு"

"இரக்கப்பட்டது தவறுதான்!"

"என்ன இரக்கம்?"

"பாவம் அதிக நேரம் காத்திருந்தீர்களே என்றுதான்!"

"ஆமாம், ஆமாம்"

"என்ன ஆமாம்; தாமதித்துத்தான் வந்தீர்களோ?"

"இல்லையில்லை. அப்போதே வந்தேன். நீ வர தாமதமானதால், உன்னை நினைக்கத் தொடங்கினேன். நீயே வந்தாய் நேரில்!"

செவவேள் சொல்லி முடிக்கவில்லை. சீறினாள். முகம் சிவந்தாள். மறு நொடியே உடைந்து அழத் தொடங்கினாள்.

செவ்வேளுக்கு ஒன்றுமே புரியவில்லை ஆதரவாய் முதுகு தொட்டான்.

"தொடவேண்டாம்" என்று அழுகையூடே சினந்தாள்.

"ஏன், என்ன நடந்தது இப்போது?"

குலுங்கி அழுதவள் கண்ணீர் சிந்தும் விழிகளோடு கேட்டாள்;



"நினைத்தேன் வந்தாய் என்று சொன்னீர்களா இல்லையா?"

"சொன்னேன்!"

**"மறப்பு என்ற ஒன்று இருந்தால் தானே நினைப்பு என்ற ஒன்று வரும். நினைப்பை மறைக்கும் திரையே மறப்பு. அந்த திரையை எப்போதாவது விலக்கிப் பார்ப்பதே நினைப்பு. அந்த திரை விழுந்தது எப்படி? நீர் என்னை மறந்தது எப்படி? எப்படி? ஏன் மறந்தீர்? ஏன் மறந்தீர்."**

ஆறுதல் சொல்லி அணைக்கப் போனவனை தள்ளிவிட்டு தாவியோடினாள் தோகை மயிலள்.

அந்த ஊடலைத்தான் திருவள்ளுவர் சொல்கிறார் இப்படி.

**"உள்ளினேன் என்றேன்மற்று என் மறந்தீர்**
**-என்றென்னைப்**
**"புல்லாள் புலத்தக் கனள்."**

அதிகாரம் – 132. குறள்–1316

## குறுக்கெழுத்துப் போட்டி இல–132

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | |
| | ■ | 4 | | | | ■ |
| | ■ | | ■ | 5 | | 6 |
| 7 | | | | ■ | ■ | |
| ■ | 8 | | ■ | 9 | 10 | |
| ■ | | ■ | 11 | ■ | | |
| 12 | | | | | | ■ |

### இடமிருந்து வலம்

01. அறிவும், அனுபவமும் உள்ள இவர்களை இளையவர்கள் கனம் பண்ண வேண்டும்.
03. உள்ளுணர்வு அதிகரித்தாலும் ஏற்படும் இதை, மதுபானத்தின் மூலமும் பெறுகின்றனர்.
04. ஒரு விழாவைத் தொடக்குவதற்கான அறிகுறி.
05. பிரிட்டிஷ் மகாராணியின் இதில் ஒரு பகுதியை இப்பொழுது பணம் கொடுத்துப் பார்க்க அனுமதியுண்டு.
07. இது ஒரு அடையாளம்.
09. இவன் எல்லாவற்றையும் தொலைத்து விடுவான்.
12. சிறார்களுக்கு இது மிகவும் பிடிக்கும்.

### மேலிருந்து கீழ்

01. தெய்வத்தாலாகாதவற்றைக் கூட இதனால் அடையலாம் என்பது வள்ளுவர் வாக்கு.
02. பண்டைய பாரதத்தில் உருவான இப் பயிற்சி இன்று உலகளாவிய நிலையினை அடைந்து விட்டது.
03. முன்பிருந்ததை விட இப்போது இதற்கு கிராக்கி அதிகரித்து விட்டது.
06. பண்டிகைக் காலங்களில் முடிச்சுமாறிகள் இதனைக் காட்டாமல் தடுக்க தலை நகரில் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாம்.
08. ஒரு வித்தையைக் கற்க இவர் அவசியம்.
10. பசி வந்தால் தாங்கிக் கொள்ளலாம். இது வந்தால் தாங்க முடியாது.
11. மாளிகையானாலும் இதுதான் சமையைத் தாங்கும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 30.12.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-132
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-130ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நா | ண | 2 ய | ம் | ■ | 3 அ | வா |
| த் | ■ | 4 ம | ரு | 5 ம | க | ள் |
| தி | ■ | ன் | ■ | ரு | த் | ■ |
| 6 க | 7 வி | ■ | 8 நி | த் | தி | ரை |
| ர் | ஷ | ■ | ■ | து | ■ | ■ |
| ■ | ம | ■ | 9 து | வ | க் | 10 கு |
| 11 தா | ம் | பூ | ல் | ம் | ■ | டை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 130இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. செல்வி. ஆர். வனிதா, கொழும்பு-15.
2. திருமதி.உம்முல் நமீமா, கட்டுகஸ்தோட்டை.
3. உமேஷ் ஸ்ரீநிவாசன், லின்டுல.
4. முகமட் நிஸ்வர், தலவாக்கலை.
5. செல்வி ஜி. ராஜினி, குருமன்காடு.
6. றுமைஸா பேகம் ஸலாம், சம்மாந்துறை.
7. எஸ்.செல்வமூர்த்தி, திருகோணமலை.
8. என். ரேணுஸ்ரீ, பசறை.
9. எம். நௌஷாத், புத்தளம்.
10. திருமதி. ஆர். ஜெகதாம்பாள், ஹட்டன்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்



வேலுப்பிள்ளையும் வியப்பும்

★ ரி.என்.எல். தொலைக் காட்சி தமிழ் படங்களை காண்பிப்பதை நிறுத்திவிட்டதே?

வி. பெஞ்சமின், கொழும்பு-05.

அப்படியா? நீண்டகாலமாக நான் ரி.என்.எல் பார்ப்பதே கிடையாது. போட்ட படத்தையே போட்டு அறுப்பதைவிட போடமலிப்பதே மேல். பிச்சை வேண்டாம் நாயைப்பிடி.

★ பிரபாகரனின் தந்தையார் வேலுப்பிள்ளை தமிழ் நாட்டிலிருந்து பேட்டி கொடுத்திருக்கிறாரே, துணிச்சலாக தெரியவில்லையா?

எஸ். சங்கரதாஸ், புத்தளம்.

துணிச்சலைப் பாராட்டுவதைவிட இந்திய ஜனநாயகத்தை நினைத்து வியக்கின்றேன். தமது நாட்டில் தேடப்படும் ஒருவரது தந்தை தமது நாட்டில் இருப்பதையும், அப்படி இருப்பவரும் துணிச்சலாக "என் மகனைப் பிடிக்க முடியாது" என்று சொல்வதையும் இந்தியா பார்த்துக் கொண்டிருக்கிறதே, வியக்கக் கூடிய விஷயம்தானே! நம் நாட்டில் என்றால் பிரபாகரன் என்று பெயர் இருந்தாலே முறைக்கிறார்களய்யா.

★ என் நண்பர்கள் சிலருக்கு வாயைத் திறந்தாலே பொய்தான் வருகிறது. அவர்களுக்கு பாடம் புகட்ட ஒரு வழி சொல்லுங்களேன்?

மா. கேசவன், கண்டி.

யாரோ ஒரு பெரியவர் சொன்னதாக படித்த ஞாபகத்தில் இருப்பதை சொல்கிறேன். பொய்யனுக்கு தண்டனை யாதெனில், அவன் உண்மையைக் கூறினாலும் யாரும் நம்ப மாட்டார்கள்.

★ அழகைப் பார்த்து மட்டும் பெண்களைக் காதலிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வா. சுபத்திரா, அப்புத்தளை.

அடிசக்கை - ஆபிரிக்க பழமொழி ஒன்றை எடுத்துவிட ஒரு வாய்ப்புத் தந்துவிட்டீர்கள். கேளுங்கள்:

"அழகுக்காக மட்டும் ஒரு பெண்ணை காதலிப்பவன் அடித்திருக்கும் வர்ணத்திற்காக மட்டும் ஒரு வீட்டை வாங்குபவன் ஆவான்."

★ வானொலி அறிவிப்பாளர்களுக்கு போட்டி வைத்திருக்கிறார்களே? திறமையானவர்களுக்கு உற்சாகம் தரும் ஏற்பாடோ?

செல்வி. ஏ. பவானிசங்கர், மட்டக்களப்பு.

அறிவிப்பாளர்கள் அதிகமாகவும், அறிவிப்பாளர்கள் குறைச்சலாகவும் இருப்பது செவிக்கு வருத்தமான சமாச்சாரம். திறமையாளர்களை ஊக்குவிப்பதுதான் உண்மையான நோக்கம் என்றால் பாராட்டலாம்.

★ மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்காவிட்டால் தொண்டமான் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறாரே, நம்பலாமா?

ஆர். தங்கராசா, ஹட்டன்.

நூறு ரூபாய் கேட்டு கத்தியைக் காட்டி மிரட்டுவார்; ஐம்பது ரூபாய் கிடைத்தால் கத்தியை மடக்கிக்கொள்வார். அனுபவப்பட்ட அரசியல்வாதியாச்சே! சம்பள விடயத்தில் என்ன செய்யப்போகிறார் என்று பார்க்கலாம்.

★ 'சாவ்' விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்படுவது மகிழ்ச்சிதானே?

என். எம். நூர்ஜஹான், புத்தளம்.

சுந்தரத்தமிழில் தொடக்கவிழா விவரணம் நடத்தி தான் கிளப்பிவிட்டார்கள். தமிழ் பேசும் மக்கள் பெருமைப்படக்கூடிய விஷயம்தானே!

★ மருமகளை கொடுமைப் படுத்தும் மாமியார் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுங்களேன்?

திருமதி கே. மணிமேகலை, திருக்கோணமலை.

மனுசாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. பிற்போக்குத் தனமான கருத்துக்களைக் கொண்டது. ஆனால் பாருங்கள், அந்த மனுசாஸ்திரம் கூட மருமகளுக்காக வாதாடுகிறது. என்ன சொல்கிறது தெரியுமோ: "எந்த வீட்டில் மருமகள் துன்பப்படும் நிலையில் வைக்கப் படுகிறாளோ அந்த வீடு விரைவில் நசிந்து விடும்."

★ யுத்தங்களில் ஈடுபடுகிறவர்கள் எல்லோருமே தாங்கள் அமைதிக்காகவும் பிரார்த்திப்பவர்கள் என்று சொல்லிக் கொள்வது ஏன்?

எம். ஜெகதீசன், கொழும்பு-11

அறிஞர் அரிஸ்டாட்டில் சொன்னதை மறக்காமல் இருக்கிறார்களாக்கும். அரிஸ்டாட்டில் என்ன சொன்னார்-

"அமைதிக்காக மட்டும் போர் செய்".

★ கண்ணீருக்கு காலம் பதில் சொல்லும் என்பார்களே, ஏன்?

தாஹா பயறூஸ், அக்கரைப்பற்று-06

அழுது கொண்டிருப்பவர்கள் ஆவேசப் பட்டுவிடக் கூடாது என்று ஒரு முன்னெச்சரிக்கையாக இருக்குமோ....?

★ தற்போது பாரதி இருந்தால் பெண்களைப் புகழ்வாரா, இகழ்வாரா?

ஜெசிக்காஸ் டென்ஸ்லாஸ், கொழும்பு.

அவரைப் பெண்கள்தான் கண்டனக் கணைகளால் துளைப்பார்கள். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்கிறீரே, மாதர்களையல்லவோ கொளுத்துகிறார்கள் – என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்" என்று கேட்கத் தொடங்கியிருப்பார்கள்.

★ டியர் சிந்தியா! உலகில் அனுபவிக்க முடியாதது எது?

எம்.ஐ.எம். இர்சாத், மாத்தளை.

மரணத்தின் சுவை.

★ கமலின் 'குருதிப் புனல்' படத்துக்கு ஒஸ்கார் விருது கிடைக்குமா?

எம். பைறூன், குருநாகல்.

ஒஸ்கார் விருதுக்கு முதன் முதலில் அனுப்பப்பட்ட தமிழ் படம் 'தெய்வமகன்'. ஒஸ்காரை நோக்கிய முதல் காலடி சிவாஜியினுடையது. அவரைத் தொடர்கிறார் கமல். குருதிப் புனலுக்கு விருது கிடைக்குமா என்பது சந்தேகம்தான். ஆனால் கமலின் ஐந்தாவது படமும் ஒஸ்காருக்கு செல்வது அவரது தன்னம்பிக்கைக்கு ஒரு சான்று. இமயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பதைவிட ஏறிச்செல்ல முயற்சிப்பது நல்லதல்லவா? என்றாவது ஒருநாள் இமயம் தொட்டுவிடும் நெருக்கத்தில் வசப்படும்.



தன்னம்பிக்கை அதிகம் தான்

★ ஒரு திருடன் கத்தியைக் காட்டி உங்கள் பீரோ சாவியைக் கேட்டால் என்ன செய்வீர்கள்?

ஏ.எஸ்.எம். நவ்சாத், அக்குறணை.

எதிர்க்க முடியாத நிலை இருப்பதாகத் தெரிந்தால் நல்ல பிள்ளையாக சாவியைக் கொடுத்து விடுவேன். திருடனை மட்டும் நன்றாக கவனித்து வைத்துக் கொள்வேன். மாற்றார் வலிவும் தன் வலிவும் அறிந்து 'டுசும் டுசும்' போடுவதே விவேகம் என்று மிஸ்டர் திருவள்ளுவரும் செப்பியிருக்கிறார் என்று கேள்வி.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம்


## அங்கம் 12

இராமாயண காவியத்தின் இனிமையை-இன்தமிழைச் சுவைப்பதற்கு கவிச்சக்கரவர்த்தி கம்பன் சிறந்த ஊடகமாக விளங்குகிறார். வால்மீகி முனிவர் வட மொழியில் யாத்த இக்காவியத்தை தமிழ் மக்களும் உணர்ந்து இன்புற வைத்ததோடல்லாமல் இறவாத இலக்கியமாக அதனைப் படைத்தருளினார். கம்பனின் காவியத்தினால் தமிழின் சிறப்பு வானுயர்ந்தது என்று கூறினாலும் அது மிகையாகாது. அதனால் தான் பாரதியும் "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்..." என்று கம்பனுக்கு முதன்மை ஸ்தானம் தந்துள்ளார்.

இன்றுள்ள இளம் சமுதாயத்தினர் கம்பநாடாரின் கவி நயத்தை ஓரளவாவது சுவைத்தின்புற வேண்டும் என்ற வேணவாவினால் அவ்வப்போது ஓரிரு பாடல்களை இவ்வங்கங்களில் சேர்க்கிறோம். இப்பாக்களை ஒரு முறை மட்டுமல்லாமல் பல முறை திரும்பத்திருப்பப் படிக்கும்போது, அவற்றின் கருத்து தானாகவே புலனாகிவிடும். அத்துடன் தமிழை புலவர் கையாண்டுள்ள விதமும் கதையினை அவர் கூறும் பாணியும் நமக்குப் புத்துணர்வையும் பெருமகிழ்ச்சியையும் ஏற்படுத்தும்.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பத'மாவது போல் நாம் தரும் பாக்களின் மூலம் உருசி கண்டு-கம்பனை முழுமையாகக் கற்றுணர வேண்டுமென அவா வாசகர்களுக்கு ஏற்படும் என்பதே எமது எண்ணம்.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டதைப் போல் இத்தொடரில் கம்பனுடைய கருத்து மட்டுமல்லாமல் வால்மீகி முனிவரின் கூற்றுக்களும், இடைக்கிடையே - எமது கற்பனை ஊடுருவல்களும் இடம்பெறும் என்பதைக் கூறிக்கொள்கிறோம்.



# சிவதனுசு ஒடிந்ததனால் சீற்றம் கொண்ட பரசுராமர்

### இராஜகுமாரன்

இராமபிரானுக்கும் சீதாப் பிராட்டிக்கும் நடைபெற்ற திருமணம் பூலோகத்தில் நடைபெற்ற தெய்வீக மணவிழாவாகும்.

இராமரும் சீதையும் திருமாலினதும் திருமகளினதும் அவதாரங்களாக இருந்த போதிலும் அவர்கள் இந்த மண்ணுலகில் வாழ்வதனால் இந்த மண்ணுக்குரிய அம்சங்கள்தான் அவர்களிடம் அதிகம் பிரதிபலிக்கும். தாங்கள் தெய்வீக ஆற்றலுள்ளவர்கள் என்பதனை எப்போதும் வெளிக்காட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். மானிடவடிவம் எடுத்தமையினால் மனிதர்களுக்குரிய ஆசாபாசங்களும் சுக துக்கங்களும் அவர்களுக்கும் இருக்கவே செய்யும்.

இதன் காரணமாகத்தான் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டதும் சாதாரண மனிதர்களைப்போல் காதல் கொண்டு காம உணர்வு மேலிட பல துன்ப துயரங்களை அனுபவித்து இறுதியில் ஒன்றுபட்டு இன்ப உணர்வினைப் பெறுகின்றனர்.

## வானுயர்ந்த வாழ்த்தொலிகள்

இராம-சீதை திருமணம் இடம் பெற்ற போது- மங்கள பேரிகைகள் ஆர்த்தன; சங்குகள் முழங்கின; நான்கு வேதங்களும் ஒலித்தன; விண்ணுலகத்தோரின் வாழ்த்தொலி கேட்டது. ஆடல் பாடல் முதலான பல கலைகளின் ஓசையும் எழுந்தது. இவை எல்லாம் மணமக்களுக்கு வாழ்த்துக் கூறுவது போல் அமைய, மணமக்கள் சூடியிருந்த மலர்மாலைகளில் மொய்த்திருந்த வண்டுகளும் ஒலி எழுப்பி வாழ்த்துக் கூறுகின்றன. கூடவே கடலும் தன் வாழ்த்தினைக் கூறுகிறது.

இத்தகைய கருத்தினைத் தரும் கம்பரின் பாடல் இது:

ஆர்த்தன பேரிகள்; ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான் மறை; ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல்கலை; ஆர்த்தன பல்லாண்டு;
ஆர்த்தன வண்டு இனம்; ஆர்த்தன வேலை.

## விடை பெற்றார் விசுவாமித்திரர்

விசுவாமித்திர மாமுனிவர் இராமாவதாரத்தில் தனக்குரிய பங்கு முடிவடைந்ததும் தசரதரிடமும். சனகரிடமும் விடைபெற்றுக் கொள்கிறார். இராமனையும் இலக்குவனையும் தனிமையில் அழைத்து பல புத்திமதிகளைக் கூறிவிட்டு தமது சீடர்களுடன் இமயமலை நோக்கிப் புறப்பட்டு விடுகிறார்.

விசுவாமித்திரர், ஹரிச்சந்திர மாமன்னனை ஒரேயொரு பொய்யினை கூறவைப்பதற்காக பெரு முயற்சி எடுத்துக்கொண்ட வரலாறும் உண்டு. ஆனால் அது இராமர் காதைக்கு முற்பட்டதாகும்.இராமாயண பால காண்டத்தின் பின் விசுவாமித்திரமகரிஷி பற்றி எந்த இதிகாசங்களிலும் குறிப்புகள் இல்லை என்று தமிழறிஞர்கள் கூறுகின்றனர்.

சீதா-இராம கல்யாணம் சிறப்புற நடந்து முடிந்ததும் சம்பிரதாயச் சடங்குகளும் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறுகின்றன. சில நாட்கள் இச் சிறப்புகள் நடைபெற்று முடிந்ததும் தன் கணவனுடன் சீதை மறுவீடு செல்லும் காலம் நெருங்கியது. குழந்தைப் பருவம் முதல் வாழ்ந்து பழகிய சூழ்நிலை, பாசமுடன் வளர்த்த தாய் தந்தை மற்றும் இத்தனை காலமும் ஒன்றாய்க் கூடி விளையாடிய தோழிகள் அனைவரையும் விட்டுப் பிரிவதென்றால் யாருக்குத்தான் துயரம் ஏற்படாது! தான் விரும்பிய பேரழகனான மாவீரனே தன் மணாளனாய் அமைந்து, அவனுடனே குடித்தனம் நடத்தப் புறப்படுவது மகிழ்ச்சியானதுதான். இருப்பினும் சீதையையும் பிரிவுத் துயர் வாட்டித் திக்குமுக்காட வைத்துவிட்டது.

சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி ஆகிய நான்கு சகோதரிகளும் தத்தமது தாய்மாரிடமும் தந்தையரிடமும் தோழிகளிடமும் விடைபெற்றுக்கொண்டனர். மணமகன்களாகிய இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகியோரும் சகலரிடமும் விடைபெற்றுக்கொண்டு இரதங்களில் ஏறிக் கொண்டனர். தரசதச் சக்கரவர்த்தி மிதிலை மன்னர் சனகரை ஆரத்தழுவி விடைபெற்றார். சூரியவம்சமும் சந்திரவம்சமும் ஒன்றிணைந்து விட்டமையால் பூமியில் பெருமைமிக்கதோர் இணைப்பு ஏற்படலாயிற்று.

✂ ✂

இராமபிரான் தம்பி இலக்குவனோடு மாமுனிவர் விசுவாமித்திரருடன் மிதிலை மாநகர் புகுந்த அன்று சீதாப் பிராட்டியாரின் உள்ளத்தில் மட்டும் குடியேறி விடவில்லை. அந்நகரத்திலுள்ள மாந்தர் அனைவரது மனங்களிலும் ஏறி அமர்ந்து கொண்டார். அத்துடன் தங்கள் நாட்டு அரசிளங்குமரியான சீதையின் மணவாளனாகிவிட்டதனால் இராமன் மீதிருந்த பாசம் பன்மடங்காக அவர்களிடத்தில் அதிகரித்தது. தங்கள் செல்வியையும் அழைத்துக்கொண்டு அந்தச் செல்வன் தங்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறான் என்பதனை அறிந்த மிதிலை மக்கள், அரண்மனை வாயிலை கடல் போல் வந்து மொய்த்துக் கொண்டனர். அவர்களைக் கடலுக்கு ஒப்பிட்டால், பிரிவாற்றாமையால் அவர்கள்தம் கண்களிலிருந்து பெருக்கெடுக்கும் கண்ணீரை எதற்கு உவமை கூறுவது?

தசரதர் மிதிலை வரும் போது அவருடன் வந்த சேனையும் பரிவாரங்களும் அளப்பரியதாகவிருந்தன. அயோத்தி நோக்கிப் புறப்படும்போது உடன் செல்லுவோரின் தொகை பன்மடங்காக அதிகரித்து விட்டது. நான்கு அரசிளங்குமரிகளுடன் அவரவர்களுக்கு நெருக்கமான தோழிகள் மற்றும் சீர் வரிசைகளைச் சுமந்து செல்பவர்கள்; மணமகன்களான இளவரசர்களுக்கு மாமன்மார் இருவரும் கொடுத்தனுப்பிய வரிசைகளைச் சுமந்து செல்பவர்கள் ஆகியோரும் செல்கின்றனர், அதுமட்டுமல்லாமல் தசரத மன்னருடன் வந்த படைவீரர்களுடன் மிதிலை மன்னரும் தன்னுடைய வீரர்கள் பல்லாயிரக் கணக்கானோரையும் சேர்த்து விட்டார். இதே போன்று யானை, குதிரை மற்றும் தேர் முதலியவையும் இணைந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது.

முதலில் தசரதர் செல்ல, அடுத்த அணியில் இராமரும் தம்பிமாரும் தத்தமது மனைவியருடன் சென்றனர். மந்திரிப் பிரதானிகளும் அணி அணியாக அணிவகுத்துச் சென்றனர்.

## சகுனங்கள் ஏற்படுத்திய தடுமாற்றம்

நிகழவிருக்கும் நற்காரியங்களையோ துர்க்காரியங்களையோ முன்னதாக எடுத்துக் கூறும் சகுனங்கள் பற்றி அன்றும் இன்றும் நம்பிக்கை இருந்து வருகிறது. நாட்டுக்கு நாடு இடத்துக்கு இடம் நம்பிக்கை வித்தியாசம் இருப்பினும் இதில் வலுவான நம்பிக்கை பெரும் பாலானோருக்கு இருக்கவே செய்கிறது.

தசரதனும் பரிவாரங்களும் மதிலையிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது சில சகுனங்கள் தோன்றின. மயில் போன்ற சில பறவைகள் வலப்புறமாகச் செல்வதையும் காகம் முதலான பறவைகள் இடது புறமாகச் செல்வதையும் கண்ட- மாபெரும் வீரனும் பேரறிஞனுமான தசரதன் மனத்தில் பெரும் புயல் வீச ஆரம்பித்தது. ஏதோ நடைபெறப் போகிறதே என்று ஏக்கம் உண்டானது. சக்கரவர்த்தி எங்கு சென்றாலும் அவருடைய குழுவில் பலதரப்பட்டவர்களும் செல்வதுண்டு. தசரதருடன் சென்ற குழுவில், சகுனங்களுக்கான அர்த்தம் கூறும் நிமித்திகனும் சென்றான்.

அந்நிமித்திகனை அழைத்து, தான் கண்ட சகுனங்களுக்கான பொருள் கூறுமாறு மன்னர் கேட்டுக் கொண்டார். நிமித்திகனும் நேரம், காலம் ஆகியவற்றையும் சகுனத்தில் இடம்பெற்றவற்றையும் கணித்து "தீமைபோல் ஒன்று வரவே செய்யும்; ஆனால் அது நன்மையாகவே முடியும்" என்று கூறினான்.

இதனைத் தொடர்ந்து பெருங்காற்று வீசியது. பெரு மழை வருவதற்குரிய ஆயத்தம் போன்று இடி மின்னலும் தோன்றிற்று. பூகம்பமே ஏற்படுமோ என்று எண்ணத் தோன்றியது. வானமும் இருண்டது எனினும் பேரொளி ஒன்று எதிரே வந்து கொண்டிருந்ததை அனைவரும் உணர்ந்தனர்.

## பரசுராமரின் வருகை

கடலலை போல் சடாமுடி எங்கும் பரந்து பட, மேருமலையே இடம் பெயர்ந்து வருவது போன்று கண்களில் கோபம் கொப்பளிக்க ஓர் உருவம் எதிரே வந்து நின்றது.

ஜமதாக்கினி முனிவரின் மகன் பரசுராமர். மாபெரும் வீரர். ஒரு முறை கார்த்தவீரியன் என்ற ஓர் அரசனை பரசுராமர் கொன்றார். இதனால் சினமடைந்த கார்த்தவீரியனின் புதல்வர்கள் பரசுராமரின் தந்தையான ஜமதாக்கினி முனிவரை வதைத்தனர். தன் கணவரைப் பறி கொடுத்த பரசுராமரின் தாயார் இருபத்தொரு தடவை தன்மார்பிலே அறைந்து அழுதார். தந்தையை இழந்த சோகமும் தாயின் பரிதாபத்தால் ஏற்பட்ட துயரமும் ஒன்றுசேர்ந்ததனால் பரசுராமர், "தொடர்ந்து வரும் இருபத்தொரு தலைமுறையிலும் சத்திரியர்களைப் பழி வாங்குவேன்" என்று சபதமிட்டு பூலோகம் முழுவதும் பவனி வந்து தன்னுடைய கோடரியால் எண்ணற்ற மன்னர்களைத் தாக்கிக் கொன்றார்.

அரசர்களுக்கு இயமனாக விளங்கும் பரசுராமரை தன் எதிரே கண்ட தசரத மன்னர் பதறினார். தனக்கு எது நேர்ந்தாலும் பரவாயில்லை; தன் உயிருக்குயிரான இராமனுக்கும் தம்பிமாருக்கும் பரசுராமரால் தீங்கு ஏதும் நடந்து விடலாகாதே என்று கவலையில் வெதும்பினார், பல அரசர்களை அழித்து விட்ட பரசுராமர், தன்னடிப்படுத்திய இராச்சியங்களை காசியப முனிவருக்குத் தானமாகத் தந்தார். இதனால் தான் இருப்பதற்கென ஓர் இடம் இல்லாமல்போய்விட்டது. தானமாகப் பெற்ற காசியபரே, "தானமாகத் தந்த இடத்தில் தான் தரித்திருப்பது முறையல்லவே" என்று கூற தனது கோடரியை தென்- மேற்குக் கடலை நோக்கி வீச - கடல் ஒதுங்கி ஒரு நிலப்பரப்புத் தோன்றியது. இந்தப் புது நிலத்தை தனது இருப்பிடமாக்கிக்கொண்ட பரசுராமர், அரசர்களை இனிக் கொல்வதில்லை என்று உறுதி பூண்டார்.

பரசுராமர் கடலிலிருந்து பெற்றநிலப் பரப்பே இன்று கேரள மாநிலமாக விளங்குகிறது என்று நம்பப்படுகிறது.

கொலை செய்வதை விடுத்து தனக்குரிய இடத்தில் தவவாழ்க்கையை மேற்கொண்டிருந்த பரசுராமர் இன்று திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் போன்று கோபக்கனல் வீசும் கண்களோடு வந்து நிற்பதைக் கண்ட அனைவரும் செய்வதறியாது தவித்தனர். தசரதரின் படைகளும் பின்வாங்கிச் செல்லத்தொடங்கின. ஆனால் இராமபிரானோ இலக்குவனோ வெகுளவில்லை. முன்னேறிவந்து தந்தை தசரதரின் இரு மருங்கிலும் நின்றனர்.

மாமன்னர் தசரதர் உடனடியாக பரசுராமரின் பாதங்களில் அட்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். அவருக்குரிய மரியாதைகளைச் செய்தபின் அன்னவர்தம் வருகைக்கான காரணம் என்னவோ என்று வினவினார்.

மிதிலையில் சனகன் அவையில் சிவதனுசினை இராமன் உடைத்தான். அவ்வில் உடைந்து வீழ்ந்தமையினால் எழுந்த பேரொலி அண்ட-சராசரங்கள் எங்கணும் கேட்டது. அந்த ஒலி பரசுராமருக்கும் கேட்டது. சிவதனுசுடன் இணைந்த விஷ்ணு தனுசு தன்னிடம் இருப்பதை உணர்ந்தார். எந்த மாநிடராலும் தொட்டுக் தூக்கவே முடியாத சிவதனுசுவை உடைத்தவன் யார் என்று அறியவே பரசுராமர் வந்து சேர்ந்தார். சாதாரண மாநிடப் பிறவி- அதுவும் தன்னுடைய வைரியான சத்திரியன் ஒருவனால் அந்தத் தெய்வீகவில் உடைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் உணர்ந்ததும் அவருடைய கோபம் கரை புரண்டோடியது. இதனாலேயே தசரதரும் பரிவாரங்களும் செல்லும் பாதையில் மலைபோல் வந்து நின்றிருந்தார்.

## விஷ்ணு தனுசினை வளைக்க முடியுமா?

"தசரத குமாரனே! ஏற்கனவே பழுதடைந்திருந்த சிவதனுசினை நீ உடைத்திருக்கலாம். அதே வில்லுடன் பிறந்த 'விஷ்ணு தனுசு' என்னிடம் இதோ இருக்கிறது. இதனை உன்னால் நாணேற்றி என்னிடமுள்ள பாணத்தை ஏவ உன்னால் முடியுமா? அவ்வாறு நீ செய்வாயானால் உன்னுடைய ஆற்றலை அறிய- உன்னுடன் நான் போர் புரியப் போகிறேன்," என்றார் பரசுராமர்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட தசரதர் நடுநடுங்கினார். "மாமுனிவரே! என் மகன் சிறியவன். அவனைத் தங்கள் கோபத்துக்குப் பலியாக்கி விடாதீர்கள். மேலும் தாங்கள் இனிமேல் எவரையும் கொல்லுவதில்லை என்று இந்திரனிடம் வாக்களித்துவிட்டு மகேந்திர மலை சென்று தவமியற்ற ஆரம்பித்தீர்கள் என்று அறிந்தேன். தங்கள் வாக்கினை மீறாது- என்மகனை கொன்று விடாது விட்டு விடுங்கள்," என்று அழுது புலம்பினார். ஆனால் இதனை பரசுராமர் பொருட்படுத்தவேயில்லை.



இராமனும் இலக்குவனும் முன்னேறி வந்தனர். இராமர் முனிவரைப் பார்த்து, "மாமுனிவரே! தங்கள் வீர பராக்கிரமத்தை நான் நன்கறிவேன். தங்களிடமுள்ள வில்லையும் அம்பையும் என்னிடம் கொடுங்கள்." இவ்வாறு கூறியதும், இரு இராமர்களும் எதிரெதிரே நின்று என்ன செய்யப் போகிறார்களோ? என்று பார்ப்பதற்காக விண்ணவரும் வானில் தோன்றினர்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி இல—10
### பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

**சரியான விடை** சிவதனுசு

1. ஜீ. கரிகாலன்.
   34/1, என்.சி.ரோட், திருகோணமலை.
2. ஏ.எஸ்.எம். ரஸ்மி.
   319, தெல்கஸ்தென்னை, அக்குறணை.
3. செல்வி. கந்தையா ஷோபனா.
   90 3/2, பிரின்சஸ் கேட், கொழும்பு-12.
4. க. கோமதி.
   515/14, திருமலை வீதி, மட்டக்களப்பு.
5. செல்வி.ம. மாறி இவோண். [illegible] சென்.ஜேம்ஸ் வீதி, முகத்துவாரம், கொழும்பு-15.

### இராமாயணப் போட்டி 12

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:-** *சத்திரியர்களை பழிவாங்க சபதம் பூண்டவர் யார்?*

டிசம்பர் 30ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:12.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல- 1772
கொழும்பு.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

## டே... டே... ஷோபாடே

இந்தியாவின் அழகான-துணிச்சலான இந்தப் பெண் எழுத்தாளருக்கு உலகெங்கும் வாசகர்கள் இருக்கிறார்கள். ஷோபா டே எழுதிய நாவல் என்றால் செக்ஸ் கொஞ்சம் தூக்கலாக இருக்குமே என்று ஆரம்பத்தில் இருந்த முணு முணுப்பு இப்போது மறைந்துவிட்டது.

செக்ஸ் என்பது வெறுக்கப்படவேண்டிய சமாச்சாரமல்ல; செக்ஸ் இல்லாத வாழ்க்கை சூனியமானது. ஆனால் செக்ஸ் பற்றி எழுதும் போது ஒரு நளினம், நயம் இருக்க வேண்டும். செக்சும் அப்படித் தானே? அதனைப்புரிந்து கொண்டதுதான் ஷோபா டேயின் வெற்றி.

சமூகப் பிரச்சனைகளை-பலரைச் சந்தித்து தகவல்கள் பெற்று எழுதுவதால் ஷோபா டேயின் எழுத்தில் உயிரோட்டம் அதிகம்.

இன்றைய தேதியில் பெண் எழுத்தாளர்களில் ஷோபா டேதான் சூப்பர் ஸ்டார். திரைப்பட சம்பாதிக்கிறார். அவரால் ஆங்கிலப் புத்தக வெளியீட்டாளர்களும் நாலு காசு சம்பாதிக்கின்றனர்.



அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11

## கொஞ்சம் நளினம் நிறைய வேகம்

அலன் போர்டரின் ஓய்வுக்குப் பின்னர் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் பதவி மார்க் டெய்லரின் தோளுக்கு வந்தது.

மார்க் டெய்லரால் பொறுப்பை சுமக்க முடியுமா? என்று சந்தேகித்தவர்களுக்கு தனது துடிப்பான தலைமை மூலம் தொடர் வெற்றிகளைக் குவித்துக் காட்டினார் மார்க் டெய்லர்.

அவுஸ்ரேலிய அணிக்கு பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த கப்டனாகப் பெருமை தேடிவிட்டார் டெய்லர். இந்த வருடத்தில் நடைபெற்ற மூன்று நாடுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டித் தொடர்களில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றிகளுக்கு மார்க் டெய்லரின் பங்கு மிக முக்கியமானது. துடுப்பாட்டத்தில் கொஞ்சம் நளினம், நிறையத் துணிச்சல், நிறைய வேகம் அதுதான் மார்க்டெயிலரின் பாணி.

சமீபத்தில் இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மார்க டெய்லர் 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். மேலும் நான்கு ஓட்டங்களைப் பெற்றிருந்தால்- மார்க் டெய்லருக்கு - டெஸ்ட் போட்டிகளில் 15வது செஞ்சரியாக அது அமைந்திருக்கும்.




## குறும்புச் சிங்கம் குஷ்வந்சிங்



சூடான அரசியல் விமர்சனங்களிலும் ஆங்காங்கே குறும்பு கூத்தாடும். அதுதான் குஷ்வந்த்சிங் பாணி. இந்தியாவின் பிரபல விமர்சகர். பிடித்தமானது: "பெண்களை முத்தமிடுவது" என்று சொல்லி வம்பிலும் மாட்டியவர். வயதாகிவிட்டாலும் எழுதுவதில் இப்போதும் படு சூடு. இந்திய அரசியல் தலைவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் நல்ல நண்பன். விமர்சனம் என்று இறங்கிவிட்டால் பயங்கரமான விரோதி. அவரது எழுத்துக்கு என்றே தனியான ரசிக, ரசிகைகள் இருக்கிறார்கள். படத்தில் குஷ்வந்த்சிங்குடன் பலம் பார்ப்பது இந்தி நடிகை சோனாலி. (பம்பாய் படத்தில் ஹம்மா ஹம்மா பாடலுக்கு ஆடியவர்) குஷ்வந்த்சிங் என்ன ஜோக் அடித்துத் தொலைத்தாரோ- சோனாலி பளிச் சென்று சிரிக்கிறாரே!

## மண்ணுக்கு அவமரியாதை



மனித உரிமைகள் தினம் டிசம்பர் 13 இல் கொண்டாடப்பட்டது. நம் நாட்டிலும் தலைநகர் கொழும்பில் மனித உரிமைகள் தின ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. போர் வேண்டாம் என்று உரத்த குரல்கள் ஒலித்தன. உலகெங்கும் மனித உரிமைகளுக்கான ஆர்ப்பாடங்கள் நடந்தன. ஆனால் உலகெங்கும் இவ்வாறான நிகழ்ச்சிகள் வருடம் ஒரு முறை நடக்கும் போது, வன்முறையும், போரும் மனித உரிமை மீறல்களும் வருடம் முழுக்க நடந்து கொண்டிருக்கின்றன என்பதுதான் துயரம்.

வெற்றியே பிரதானம் என்றாகிய பின்னர் யுத்தம் மண்ணை இரத்தக் காடாக்கிவிடுகிறது.

பூமி பொதுவானது. அங்கு வாழும் மனிதர் யாவரும் சமமானவர்கள் என்ற உணர்வு அடிபட்டுப் போகும்போது பூமியை பங்குபோட்டுக்கொள்ளும் போர் வெடிக்கிறது. பூமி இரத்தத்தால் நனைக்கப் படுகிறது. மண்ணுக்கு மனிதர் செய்யும் அவமரியாதை அது.

## துணிச்சலான தூக்கம்

கடும் தூக்கம் வந்து விட்டால் பஞ்சு மெத்தைதான் தேவையென்று இல்லை. இருந்து கொண்டேயும் தூங்கிவிடுவார்கள் சிலர். இரண்டு சோபாக்களில் தாவிக்கொண்டு இந்தக் குட்டிப் பையன் தூங்குவதும் அப்படித்தானோ! ஸ்டைலான தூக்கம்.





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காவிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 28, வெல்லவா, தாவலவில் உள்ள சமலை அச்சகத்தில் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்